# ரிஷி



எண்டமூரி வீரேந்திரநாத்

CHN
CHN431035
6036840
CHN431035

035, 3, 31
431035 P4



## எண்டமூரி வீரேந்திரநாத்

ஒரு எழுத்தாளர், மொழிபெயர்ப்புக்கள் மூலமாக, வேறொரு மொழி வாசகர்கள் மனத்தில் இடம் பெறுவது மிகவும் அரிது. அந்த வரிசையில் எண்டமூரி வீரேந்திரநாத் குறிப்பிடத்தக்கவர்.

தொழில் முறையில் இவர் ஒரு சார்ட்டட் அக்கௌண்டண்ட். இவர் ஸ்டேட் ஃபைனான்ஸ் கார்ப்பரேஷனில் ஐந்து வருடங்களும், ஆந்திரா வங்கியில் உயர் அதிகாரியாக பத்து ஆண்டுகளும் பணியாற்றி, எழுத்தின் மீதுள்ள ஆர்வத்தால் அதைத் துறந்து, முழு நேர எழுத்தாளராக மாறி விட்டார்.

இவர் நாடகம், நவீனங்கள் பல எழுதியுள்ளார். சினிமா இயக்குனராகப் பணியாற்றியுள்ளார். இவருடைய முதல் திரைப்பட வசனம் ஜனாதிபதி விருதும், நான்கு தொலைக்காட்சி தொடர்கள் பல விருதுகளையும் மற்றும் தொலைக்காட்சி தொடருக்கான 'கோல்டன் நந்தி' விருதையும் பெற்றுள்ளார். இவருடைய எழுத்தை அங்கீகரித்து 'சாகித்திய அகாடமி' விருதும் வழங்கப்பட்டுள்ளது.

மனிதனுடைய திறமையை வளர்த்து, சுய முன்னேற்றமடையச் செய்வதில் தற்போது கவனம் செலுத்தி வருகிறார். இவருடைய 'வெற்றிக்கு ஐந்து படிகள்' என்ற நூல் தெலுங்கில் ஒரு கோடி ரூபாய்க்கு மேல் விற்பனையாகி சாதனை புரிந்துள்ளது.

ஆந்திராவில் என்.டி. ராமாராவிற்குப் பிறகு, இரண்டாவது பிரபலமானவராக - 1982 ஆம் ஆண்டு தேர்ந்தெடுக்கப்பட்டார்.

சுமார் 55 நாவல்கள், 25 திரைக்கதைகள், ஏராளமான சிறுகதைகளையும் எழுதியுள்ளார்.

அல்லயன்ஸ்

31 DEC 2011

# ரிஷி

எண்டமூரி வீரேந்திரநாத்

தமிழில்:

கௌரி கிருபாநந்தன்

அல்லயன்ஸ்

அல்லயன்ஸ்

றாண்டு கண்ட முதல் தமிழ்ப் புத்தக நிறுவனம்)

உரிமை பதிப்பு

முதற் பதிப்பு : 2004

© ஆசிரியருக்கு

**விலை : ரூ. 30.00**

தேவநேயப் பாவாணர்
மாவட்ட மைய நூலகம்
சென்னை - 600 002

**அல்லயன்ஸ்**
**கம்பெனி**
244, (ப. எண்.) ராமகிருஷ்ணா மடம் சாலை,
தபால் பெட்டி எண்: 617,
மயிலாப்பூர், சென்னை – 600 004.
தொலைபேசி: 2494 1314

035, 3, 31 P4
431035
6036840

Laser Execution : Image Press - Chennai - 17.

Printed at : Jai Ganesh Offset Printers, Chennai - 5.

# முன்னுரை

பிரபல தெலுங்கு எழுத்தாளர் திரு. எண்டமூரி வீரேந்திரநாத் அவர்கள் எழுதிய '*ரிஷி*' என்ற நாவல் தமிழாக்கம் செய்யப்பட்டு அதே தலைப்பில் தமிழ் வாசகர்கள் முன்னால் வைக்கப் பட்டுள்ளது.

பிரபல ஆங்கில எழுத்தாளர் ராபர்ட் லூயிஸ் ஸ்டீபென்ஸன் எழுதிய Dr. Jekyll and Mr. Hyde என்ற நாவலில் வரும் கதாநாயகன் போல் எல்லோருக்கும் உள்ளே இன்னொரு மனிதன் இருக்கிறான். அவன் வெளியே வந்துவிடாமல் சிலரால் மட்டுமே அடக்கி ஆள முடிகிறது. பலவீன மனம் படைத்தவர்களுக்கு சாத்தியம் ஆகாத விஷயம் இது.

எதிராளியின் மனதில் இருக்கும் எண்ணங்களை வெளிப் படையாக பார்க்கக் கூடிய பூதக் கண்ணாடியைக் கடவுள் மனிதனுக்குத் தந்தால் இவ்வளவு கல்மிஷத்தை, மோசமான உலகத்தை பார்க்க முடியாமல் தற்கொலை செய்து கொள்வது நிச்சயம். 'எனக்கு எந்த தனித்தன்மையும் இல்லை. நான் ரொம்ப சாதாரணமானவன்' என்ற நினைப்பவன்தான் உண்மையான ரிஷி.

மொழி பெயர்ப்புக்கு அனுமதி அளித்த திரு. எண்டமூரி வீரேந்திரநாத் அவர்களுக்கும், புத்தகமாக வெளியிட்ட '**அல்லயன்ஸ்**' நிறுவனத்தாருக்கும் எனது நன்றி.

**– கௌரி கிருபாநந்தன்**

## எண்டமூரி வீரேந்திரநாத்
எழுதிய

1. அந்தர் முகம்
2. தளபதி
3. 13-14-15
4. நிகிதா
5. பந்தம் பவித்ரம்
6. பதியன் ரோஜா
7. காதலெனும் தீவினிலே...
8. காஸநோவா 99
9. துளசி தளம்
10. மீண்டும் துளசி
11. வெற்றியை நோக்கிட் பயணம்
12. பெண்கள் தனித்தனமயை வளர்த்துக் கொள்வது எப்படி?
13. உங்களை நீங்களே வெற்றி கொள்ளுங்கள்
14. உங்கள் குந்தைகள் உங்களை நேசிக்க வேண்டுமென்றால்?
15. தி பெஸ்ட் ஆஃப் எண்டமூரி வீரேந்திரநாத்
16. பிரளயம்
17. பட்டிக்காட்டு கிருஷ்ணன்
18. சாகர சங்கமம்
19. காதல் 'செக்'
20. லேடீஸ் ஹாஸ்டல்
21. பணம் மைனஸ் பணம்
22. தூக்கு தண்டனை
23. பிரியமானவள்...
24. பணம்
25. ரிஷி

கௌரி கிருபானந்தன்
மொழிபெயர்த்தது

# 1

## ரிஷி

கடந்த காலத்தை நினைத்துப் பார்க்கும்போது எனக்கு ரொம்ப வியப்பாக இருக்கும். அப்போதைய சூழ்நிலையுடன் அன்றாடம் போராடிக் கொண்டு ரொம்ப காஷுவலாக வாழ்ந்து வந்திருக்கிறேன். ஆனால் இப்போ யோசித்துப் பார்க்கும் போது அதில்தான் நிம்மதி இருந்தாற்போல் தோன்றுகிறது.

மனதளவில் மனிதர்கள் சரியாக வளராமல் இருப்பதற்குக் காரணம் கூச்சம்தான். அதோடு சுதந்திரமாக

சிந்திக்கவிடாமல் தடுத்து கொண்டே இருக்கும் பெற்றோர், நல்லதோ கெட்டதோ தனக்கென்று சில ரசனைகளை சிறு வயது முதல் வளர்த்துக் கொள்ளாமல் போவது.

பத்தொன்பது இருபது வயது பிராயத்தில் பெற்றோரின் ஆளுமையிலிருந்து விடுபட்டு திடீரென்று சுதந்திரம் கிடைக்கும்போது மனதளவில் முதிர்ச்சி இல்லாத அந்த நேரத்தில் வெளி உலகம் வண்ணமயமாக காட்சி தருவதில் வியப்பு எதுவும் இல்லை. திடீரென்று கிடைத்த சுதந்திரம் தடுமாறச் செய்யும் போதுதான் மனிதனின் வீழ்ச்சி ஆரம்பமாகிறது. மனிதனின் வளர்ச்சி சாதாரணமாக இந்த இடத்தில் நின்றுவிடும். அதையும் தாண்டிப் போக முடிந்தால் அம்மனிதன் வேதாந்தியாக மாறுகிறான்.

என் இருபத்து நான்காவது வயதில் இந்த நிலையை அடைந்தேன். பத்தொன்பது வயதில் எவ்வளவு அப்பாவியாக வாழ்ந்து வந்தேனோ நினைத்துப் பார்க்கும் போது வேடிக்கையாக இருந்தது. (தனித்தன்மை இல்லாமல் இருப்பதை அப்பாவித்தனம் என்று சொல்லிக் கொள்வார்களோ என்னவோ, எனக்குத் தெரியாது.)

* * *

பிரகாஷ் இரண்டு கைகளையும் பேண்ட் ஜேபியில் நுழைத்தபடி நிதானமாக நடந்து போய்க் கொண்டிருந்தான். மாலை நேரத்து வெயில் அவனுடைய சிவந்த உடல் மீதுபட்டு நிறத்தை மேலும் கூட்டியது. சாலையில் போக்குவரத்து அதிகமாக இருந்தது. எதிரே வந்த கல்லூரி மாணவி ஒருத்தி கையிலிருந்த புத்தகங்களை சரி செய்தபடி அவனை கண்ணிமைக்காமல் பார்த்துக் கொண்டே தாண்டி போய்விட்டாள்.



பிரகாஷ் ஒரு பட்டதாரி. அதைவிட முக்கியமான தகுதி அவனுடைய அழகு. அலங்காரம் செய்து கொள்வதில் அவன் எந்த விதமான சிரத்தை எடுத்துக் கொள்ளா விட்டாலும் அந்த அலட்சியமே அவனுக்கு ஒருவிதமான அழகைக் கொடுத்தது. அப்பாவித்தனத்தை பிரதிபலிக்கும் கண்கள், மென்மையான கன்னங்கள், கோவைப்பழ நிறத்தில் இதழ்கள்.

பிரகாஷ் யோசித்துக் கொண்டிருந்தது பெரிய விஷயம் ஒன்றும் இல்லை. இன்னும் மூன்று நாட்களில் முதல் தேதி வரப்போகிறது. சம்பளம் கைக்கு வந்ததும் தீர்க்க வேண்டிய சில்லறைக் கடன்களை நினைவுப்படுத்திக் கொண்டிருந்தான்.

அதற்குள் அவன் யோசனைகளை சிதறடிப்பது போல் பக்கத்தில் கார் ஒன்று வந்து நின்றது.

"பிரகாஷ்! உன்னைத்தான்." வீணை மீட்டியது போல் இனிமையான குரல் கேட்டது.

பிரகாஷ் திரும்பிப் பார்த்தான். காரில் ஸ்டியரிங் முன்னால் அமர்ந்திருந்த பெண்ணைப் பார்த்ததும் வியப்பு அடைந்தவனாக 'சுஜாதா!' என்றான் தெளிவற்ற குரலில்.

பல்வரிசை பளீரென்று மின்ன லேசாக சிரித்துவிட்டு கார் கதவைத் திறந்துகொண்டே "கமின்" என்றாள்.

வேறு ஏதோ உலகில் இருப்பவன் போல் காரில் ஏறி உட்கார்ந்து கொண்டான். அவனுக்கு ரொம்ப வியப்பாக இருந்தது. சுஜாதா கல்லூரியில் தன்னுடைய கிளாஸ்மேட். அவ்வளவுதான். கல்லூரியில் படிக்கும் போது கூட அவன் அவளுடன் ஒரு நாளும் பேசியதில்லை. சொல்லப் போனால் பெண்களுடன் பேசும் தைரியமும் அவனுக்கு இருந்தது இல்லை. ஆனால் இன்று ஏறத்தாழ மூன்று

வருடங்களுக்குப் பிறகு திடீரென்று அவளைப் பார்த்தது, அவள் தன்னை காரில் ஏறச் சொன்னது... அவனுக்கு இதெல்லாம் ஏதோ கனவு போல் தோன்றியது.

பிரகாஷ் தலையைத் திருப்பி சுஜாதாவைப் பார்த்தான். சாலையில் போக்குவரத்து அதிகமாக இருந்ததால் அவள் கவனமாக டிரைவ் செய்து கொண்டிருந்தாள். கல்லூரி நாட்களில் இருந்ததை விட அவள் அழகு கூடியிருப்பது போல் தோன்றியது. மெலிதாக லிப்ஸ்டிக் தீட்டியிருந்த இதழ்கள் ரோஜா நிறத்தில் மின்னிக் கொண்டிருந்தன. இயற்கையான அழகுடன், மிதமான ஒப்பனையும் சேர்ந்து கொண்டதில் பார்வையைத் திருப்பிக் கொள்ள முடியவில்லை.

கல்லூரி நாட்களில் சுஜாதா பெரும்பாலான மாணவர்களின் இதயங்களில் புயலை உருவாக்கி யிருந்தாள். பிரகாஷ் கூட சில சமயம் அவளைப் பற்றி யோசித்திருக்கிறான். ஆனால் அவளுடன் பேசுவதற்கு அவன் ஒரு நாளும் துணிந்தது இல்லை. வேடிக்கை என்னவென்றால் அவளுடன் பேசும் மற்ற மாணவர்களைப் பற்றி அவன் பொறாமைப்பட்டதும் இல்லை. அவர்களை விட தான் உயர்ந்தவன் என்றும், தன் அளவுக்கு அவர்கள் புத்திசாலிகள் இல்லை என்றும் நினைத்தானோ என்னவோ. ஆனால் ஒன்று மட்டும் உண்மை. ஒரு மனிதன் தவறான வழியில் போகாமல் இருப்பதற்குக் காரணம் தனித்தன்மை தான் என்று சொல்ல முடியாது. அவன் கோழையாகவும் இருக்கக்கூடும்.

பிரகாஷ் அந்த மூன்று ஆண்டுகளும் சுஜாதாவுடன் பேசாமல் இருந்ததற்குக் காரணம் பிரகாஷின் தனித்தன்மைதான் என்பது சந்தேகம்தான். அந்தக் கேள்வியும் இப்பொழுது அனாவசியம். ஏன் என்றால் இந்தக் கதையின்



நாயகன் பிரகாஷ் இல்லை. பிரகாஷ் இதில் சம்பந்தப் பட்டிருக்கிறான். அவ்வளவுதான்.

"என்ன யோசித்துக் கொண்டிருக்கிறாய்?"

பிரகாஷ் திடுக்கிட்டான். அவள் தன்னை ஒருமையில் விளித்ததை அவன் கவனிக்கவில்லை.

"ரொம்ப இடைவெளிக்கு பிறகு சந்தித்துக் கொள்கிறோம் இல்லையா?" சுஜாதா சொன்னாள்.

"ஆமாம்."

"நான்கு வருடங்களாவது இருக்கும்."

"ஆமாம்." தான் சுருக்கமாக பதில் சொல்வதை அப்பொழுதுதான் அவன் உணர்ந்தான்.

"இங்கே வேலை பார்க்கிறாயா?" சுஜாதா கேட்டாள்.

எந்த அலுவலகத்தில் வேலை பார்க்கிறானோ சொன்னான்.

அவள் வியப்புடன் "நான்கு வருடங்களாக இங்கே இருக்கிறாயா?" என்றாள்.

"இல்லை இல்லை. ஊரிலேயே அங்கும் இங்குமாக பல வேலைகளைப் பார்த்தேன். இந்த வேலை கிடைத்து ஒரு மாதம் தான் ஆகிறது. இந்த ஊரில் போஸ்டிங் கொடுத்தார்கள்."

"மனைவியையும் அழைத்து வந்து விட்டாயா?" முறுவலுடன் கேட்டாள்.

"இன்னும் திருமணம் ஆகவில்லை." வெட்கம் கலந்த குரலில் சொன்னான்.

"தனியாக ரூமில் தங்கியிருக்கிறாயா?"

"இல்லை" என்றான்.

"பின்னே?" புரியாதவள் போல் கேட்டாள்.

"மாமாவும் என்னுடன் தான் இருக்கிறார். என் சின்ன வயதிலேயே அம்மா அப்பா போய்விட்டார்கள். மாமாதான் என்னை வளர்த்து ஆளாக்கினார். சமீபத்தில் தான் அவர் ரிடையராகி விட்டார். அவருக்கு மகன்கள் இல்லை. மனைவி இறந்து போய் ரொம்ப வருடங்கள் ஆகிறது." மேற்கொண்டு அவள் கேள்வி எதுவும் கேட்காமல் முழு விவரமும் சொன்னான்.

"அவருக்கு ஒரு மகள் இருக்கிறாள் இல்லை." புரிந்து விட்டாற்போல் சுஜாதா சிரித்தாள்.

பிரகாஷுக்குத் தூக்கிவாரிப் போட்டது. "ஆமாம்" என்றான்.

"பெயர்?"

"சீதா மகாலக்ஷ்மி." தயங்கிக்கொண்டே சொன்னான்.

★ ★ ★

சீதா வாசற்படியில் நின்றுகொண்டு சாலையில் மக்கள் நடமாட்டத்தை வேடிக்கை பார்த்தபடி நின்று கொண்டிருந்தாள். வீட்டு வேலைகளை எல்லாம் முடித்து விட்டு முகத்தை அலம்பி பவுடர் பூசிக் கொண்டு நேர்த்தி யாக தயாராகி இருந்தாள். இந்த அலங்காரம் பிரகாஷுக் காக இல்லை, தனக்காக. வாசலில் நின்று கொண்டு மக்களை வேடிக்கை பார்ப்பது அவளுடைய பொழுது போக்கு.



வெள்ளை நிறப் புடவையின் மீது பொருத்தமில்லாத சிவப்பு நிற பிளவுஸ். கொஞ்சம் குள்ளமாக இருப்பதால் இரட்டைப் பின்னல் அவளுக்கு பாந்தமாக இருக்க வில்லை. இது போன்ற சின்ன விஷயங்களை அவள் கவனத்தில் கொள்ள மாட்டாள். எப்பொழுதாவது அபூர்வமாக ஒற்றைப் பின்னல் போட்டுக் கொள்வாள். அது போன்ற நேரங்களில் பிரகாஷின் கண்களில் தெரியும் பாராட்டை உணரக் கூடிய நுண்ணிய அறிவு அவளுக்கு இல்லை. ஒருகால் பிரகாஷுக்கு பிடிக்கும் என்று தெரிந்தாலும் அவள் போட்டுக்கொள்ள மாட்டாள். காரணம் ரொம்ப சின்னது. இரட்டைப் பின்னல் போட்டுக் கொள்வது அவளுக்குப் பிடிக்கும். மற்றவர்களுக்காக தன் விருப்பத்தை ஏன் மாற்றிக் கொள்ளணும் என்ற சுபாவம். சராசரி இளம் பெண்களுக்கே உரிய பிடிவாதம்.

சாலையில் வந்து கொண்டிருந்த ஜீன்ஸ் பேண்ட் இளைஞன் தன்னை உற்றுப் பார்ப்பதைக் கவனித்து சட்டென்று கதவின் பின்னால் நகர்ந்து கொண்டாள். பிறகு கதவு இடுக்கின் வழியாக அவன் இன்னும் இந்தப் பக்கமே பார்த்துக் கொண்டிருக்கிறானா என்று நோட்டம் விட்டாள். காலங்காலமாக தொடர்ந்து வரும் கலாசாரம் அவளை உள்ளே போகச் செய்தால், முதிர்ச்சி அடையாத மனமானது அவன் மறுபடியும் தன்னைப் பார்க்கிறானா இல்லையா என்று வேவு பார்க்கத் தூண்டியது.

ஜீன்ஸ் இளைஞன் வீட்டைத் தாண்டி போன பிறகு மறுபடியும் வெளியில் வந்து நின்றுகொண்டாள். ஸ்கூட்டர் மீது ஜோடி ஒன்று உல்லாசமாக வந்து கொண்டிருந்தது. பின்னால் அமர்ந்திருந்த பெண் அவன் இடுப்பைச் சுற்றி லும் கையைப் பிணைத்து ஏதோ சொல்லிக் கொண்டிருந் தாள். ஸ்கூட்டர் தெருமுனை திரும்பும் வரையில் அந்தப்

பக்கமே பார்த்துக் கொண்டிருந்தாள் சீதா. ஸ்கூட்டர் பின் சீட்டில் தானும், முன்னால் ஒரு ராஜகுமாரனும். ஆனால் அது பிரகாஷ் இல்லை.

"இன்னும் உங்க அத்தான் வரவில்லையா?" காமாட்சி யின் குரல் கேட்டு இந்த உலகத்திற்கு வந்தாள். காமாட்சி அடுத்த வீட்டுப் பெண். பள்ளிக்கூட வாத்தியாரின் மகள்.

"வரவில்லை."

"பல்லாங்குழி விளையாடுவோமா?"

"வாயேன்." உள்ளே போகத் திரும்பினாள் சீதா.

"நீ அத்தானின் வருகைக்காக காத்திருக்கிறாயோ என்னவோ."

"ச்ச... ச்... அப்படி எதுவும் இல்லை."

"மாமா இருக்கிறாரா?"

"உள்ளே இருக்கிறார்." சீதா பல்லாங்குழியில் புளியங் கொட்டைகளை அடுக்கிக் கொண்டே சொன்னாள்.

"சினிமாவுக்கு நேரமாகி விடுமோ என்னவோ."

"பரவாயில்லை. ஆறரை மணிக்குத்தானே."

"சீதா! வீட்டுக்குப் போன பிறகு பார்த்தேன். என்னிடம் காசு குறைவாக இருக்கு." காமாட்சி சொன்னாள்.

"கவலைப்படாதே காமாட்சி. என்னிடம் பத்து ரூபாய் அதிகப்படியாகவே இருக்கு."

"நீ ரொம்ப அதிர்ஷ்டசாலிதான். வீட்டுச் செலவை நீதானே பார்த்துக் கொள்கிறாய். இஷ்டம் வந்தாற் போல் செலவழிக்கலாம்."



"அதிர்ஷ்டமாவது! அத்தானின் சம்பளப் பணத்தில் மாதம் முழுவதும் ஓட்ட முடிந்தால் அதுவே பெரிய விஷயம்."

அரைமணி நேரம் பல்லாங்குழி விளையாடிய பிறகு காமாட்சி எழுந்து கொண்டாள். "சீதா! மாமாவிடம் சொல்லு. நான் போய் வருகிறேன்."

சீதா உள் பக்கம் எட்டிப் பார்த்தாள்.

* * *

கொல்லைப் புறம் வாதாம் மரத்தின் கீழே துணி தோய்க்கிற கல்லின் மீது அமர்ந்துகொண்டு வேலைக்காரப் பெண்ணுடன் வம்பு பேசிக் கொண்டிருந்தார் சுவாமி நாதன்.

"போங்க சாமி. இந்த சமாசாரமெல்லாம் உங்களுக்கு எதுக்கு?" பாப்பாத்தி உள்ளூற சிரித்துக் கொண்டே சொன்னாள்.

"சொல்லு பாப்பா. என் கிட்டே சொல்ல வெட்கப் படுவானேன்?" வழுக்கைத் தலையைத் தடவிக் கொண்டே சொன்னார்.

வாளியில் இருந்த தண்ணீரில் பாத்திரங்களை கழுவிய பாப்பாத்தி அவற்றை உள்ளே கொண்டு போய் வைப்பதற்காக எழுந்து கொண்டாள்.

"வயசாச்சே தவிர இன்னும் சின்ன பிள்ளையாட்டம் கேள்வி கேட்பதைப் பாரு." நீட்டி முழக்கி சொல்லிக் கொண்டே உள்ளே போய் விட்டாள்.

சுவாமிநாதன் ஏதோ பெரிய ஜோக் கேட்டு விட்டது போல் சிரித்துக் கொண்டே உள்ளே வந்தார். வரும் போதே அவருடைய தோரணை மாறிவிட்டது.

"அம்மா சீதா! கொஞ்சம் வெளியில் போயிட்டு வருகிறேன். கதவைச் சாத்திக் கொள்" என்றார் கம்பீர மான குரலில்.

வாழப்போகும் சொற்ப காலத்தில் சாத்தியமான வரையில் அனுபவங்களை பெற்று விடவேண்டும் என்று தவிக்கும் மனிதர்களை ஆத்மவஞ்சனை செய்துகொள்வது வேடிக்கைதான்.

"இருட்டுகிற நேரம். இப்போ எங்கே. போறீங்க?" சீதா கேட்டாள்.

"வீட்டில் பொழுது போகவில்லை. சும்மா கடைத் தெரு வரையில் போய்விட்டு வருகிறேன்." சுவாமிநாதன் சொன்னார். வேலைக்காரியிடம் பேசும் போது இருந்த குசும்புத்தனம் இப்பொழுது இல்லை.

"நானும் காமாட்சியும் சினிமாவுக்குப் போகப் போகிறோம். காலையிலேயே சொன்னேன். நினைவு இருக்கு இல்லையா."

சுவாமிநாதன் தலையை அசைத்துவிட்டு கிளம்பினார்.

* * *

"பெயர் நன்றாக இருக்கு." முறுவலுடன் சொன்னாள் சுஜாதா. "பின்னே கல்யாணம் செய்துகொள்ள தாமதம் ஏன்?"

பிரகாஷ் பதில் சொல்லவில்லை. சுஜாதா அவன் பக்கம் திரும்பிப் பார்த்தாள்.



பதில் சொல்ல வேண்டிய பொறுப்பு தன் மீது இருப்பதை உணர்ந்த பிரகாஷ், "விசேஷமாக எதுவும் இல்லை. இந்த வேலை சமீபத்தில்தானே கிடைத்தது" என்றான்.

"கொஞ்சம் காலூன்றி கொண்ட பிறகு தான் திருமணம். அப்படித்தானே."

ஆமாம் என்பது போல் தலையை அசைத்தான் பிரகாஷ். மாமா ரிடையராகும் நேரத்தில் அவனுக்கு வேலை கிடைக்கவில்லை. கிடைத்த வேலைகளும் டெம்பரரி வேலைகள். எப்போ வீட்டுக்குப் போகச் சொல்லப் போகிறானோ என்று ஒவ்வொரு நாளும் பயந்து கொண்டே இருக்க வேண்டிய நிலைமை.

"வீட்டில் நீங்க மூவர் மட்டும்தானா?"

தான் வீட்டில் இருக்கும் நேரத்தில் கூட காலை முதல் மாலை வரையில் சீதாவுடன் ஊர் வம்பு பேசிக் கொண்டிருக்கும் அடுத்த வீட்டு காமாட்சி நினைவுக்கு வந்தாள். "மூவர் மட்டும்தான்" என்றான்.

"அந்த அனுபவமே புதுமையாக இருக்கும் இல்லையா?" சுஜாதா சொன்னாள்.

"எது?"

"திருமணம் ஆவதற்கு முன்பு ஒரே வீட்டில் இருப்பது. சின்னச் சின்ன குறும்புகள்... சண்டைகள்–" சுஜாதா கலகல வென்று நகைத்தாள்.

பிரகாஷ் பதில் சொல்லவில்லை. சுஜாதா அதிகமாக உரிமை எடுத்துக் கொள்வது போல் தோன்றியது.

"கல்லூரி நண்பர்கள் யாராவது கண்ணில் பட்டார் களா?" மறுபடியும் அவளே கேட்டாள்.

"இந்த ஊரில் யாரும் இருப்பதாகத் தெரியவில்லை. நம் ஊரில்தான் அவ்வப்பொழுது பார்ப்பேன்."

"இன்னும் நம்ப ஊராவது?" என்று நகைத்தாள் சுஜாதா.

பிரகாஷும் நகைத்தான். "என்னைப் பற்றி எல்லாம் சொல்லி விட்டேன். பின்னே..." பாதியில் நிறுத்தினான்.

"சொல்ல என்ன இருக்கு? பரீட்சை ரிசல்ட்ஸ் வரும் முன்பே திருமணமாகி விட்டது. அவருக்கு இதே ஊர் தான். நான்கு வருடங்களாக இங்கேதான் இருக்கிறேன்."

"அவருக்கு என்ன வேலை?"

"பிசினெஸ்."

காலை முதல் மாலை வரையில் வியாபாரிகளை டீல் செய்யும் வேலை அவனுடையது. அதான் உடனே கேட்டான்— "அவருடைய பெயர்?"

ஸ்டியரிங்கை திருப்பி ரிக்ஷாவை ஓவர்டேக் செய்து கொண்டே சொன்னாள். "பொன்னம்பலம்."

பக்கத்தில் வெடிகுண்டு வெடித்தாற்போல் அதிர்ச்சி அடைந்தான் பிரகாஷ்.

கறுப்பாக, உயரமாக, முகம் முழுவதும் அம்மைத் தழும்புகளுடன், கை விரல்களில் வைர மோதிரங்கள், கிளாஸ்கோ மல் ஜிப்பா, ஜரிகை வேஷ்டியுடன் தன் ஆபீஸுக்கு அடிக்கடி வருகை தரும் பொன்னம்பலம்தான் சுஜாதாவின் கணவனா? அவனால் நம்பவே முடிய வில்லை.

## 2

"நான்சென்ஸ்!" எரிச்சலுடன் சொன்னார் பொன்னம்பலம்.

குமார் பதில் சொல்லவில்லை.

"நாம் எவ்வளவு கட்ட வேண்டி யிருக்கும்?"

"ஐயாயிரம் வரையில் இருக்கலாம்."

"ஒரு சின்ன தவறுக்கு ஐயாயிரம் ரூபாய் பெனால்டியா?"

குமார் மௌனமாக இருந்தான்.

"பெனால்டி கட்டத் தேவையில்லாமல் நீதான் ஏதாவது வழி சொல்லணும்."

"வழியா?" வியப்புடன் கேட்டான் குமார்.

"பின்னே? சார்டெட் அக்கவுண்டெண்டுகளை நாங்க வைத்துக் கொள்வது இது போன்ற ஆபத்துகளில் உதவி செய்யத்தான்." பொன்னம்பலம் சிரித்தார்.

குமார் ஒரு நிமிடம் யோசித்துவிட்டு "ஒரு வழி இருக்கு" என்றான்.

"என்ன?" ஆர்வம் கலந்த குரலில் கேட்டார் பொன்னம்பலம்.

"அந்த ஆபீஸில் உங்க பைலில் இருக்கும் ஒரு பேப்பரை நீக்கி விட்டால் போதும்?"

"இந்தக் காரியத்தை யாரால் செய்யமுடியும்?"

"அந்த ஃபைலை செய்யும் குமாஸ்தாவால் முடியும். அவன் மட்டும் இந்த வேலையை முடித்தால் உங்களுக்கு இந்த பெனால்டி கட்ட வேண்டிய அவசியம் இருக்காது. யாருக்கும் தெரிய வாய்ப்பு இல்லை."

பொன்னம்பலம் உற்சாகத்துடன் எழுந்து கொண்டார். "அந்த குமாஸ்தா யாரோ கொஞ்சம் விசாரித்துச் சொல்லு. இந்த உலகத்தில் பணத்திற்கு விலை போகாதவன் யாரு?" என்றார்.

"ஒரு நிமிடம்" என்று ஃபோனை எடுத்து யாருடனோ பேசினான் குமார். பிறகு ஃபோனை வைத்துவிட்டு பொன்னம்பலம் பக்கம் திரும்பி "யாரோ பிரகாஷாம்" என்றான்.

* * *

"நீ என்ன யோசிக்கிறாய் என்று எனக்குத் தெரியும்" சுஜாதா சொன்னாள்.

என்ன என்பதுபோல் பார்த்தான் பிரகாஷ்.

"என் மீது எப்படி இரக்கம் காட்டுவது என்ற யோசிக்கிறாய். சரிதானே?"

தன் மனதில் இருக்கும் எண்ணங்களை ஒன்றாகக் கூட்டினால் அந்த அர்த்தம் தான் வருமோ என்று தோன்றியது பிரகாஷுக்கு.

மறுபடியும் அவளே சொன்னாள். "அதுதான் உண்மை என்றால் அதைப்பற்றி யோசிக்காதே. என் மீது இரக்கம் காட்டுபவர்களை நான் வெறுக்கிறேன்."



ஒரு நிமிடம் யாரும் பேசவில்லை. கார் ஊர் எல்லையைத் தாண்டிக் கொண்டிருந்தது. மாலை நேரம் என்பதால் வயல்கள் மீதிருந்து வீசும் காற்று குளிர்ச்சி யாக இருந்தது.

"உனக்கு ரொம்ப வியப்பாக இருக்கு இல்லையா?"

"எது?"

"உன்னை இப்படி வழியில் நிறுத்தி காரில் ஏற்றிக் கொண்டது. முக்கியமாக ஒருமையில் உன்னை விளிப்பது."

பிரகாஷ் மௌனமாக இருந்தான்.

"நான் இன்னிக்கு ரொம்ப சந்தோஷமாக இருக்கிறேன் பிரகாஷ். ரொம்ப நாட்களுக்குப் பிறகு உன்னைச் சந்தித்ததில் எனக்கு மகிழ்ச்சி. நம்முடன் படித்த எல்லோரையுமே ஏறத்தாழ மறந்துவிட்டேன். ஆனால் உன்னை மட்டும்..." என்று நிறுத்தினாள். "தேர்வுகளில் எனக்கு முதல் வகுப்பு கிடைக்காமல் போனதற்குக் காரணம் நீயேதான்."

புரியாதவன் போல் பார்த்தான் பிரகாஷ்.

"உனக்கு நினைவு இருக்கோ இல்லையோ. நீ எப்போதும் இரண்டாவது பெஞ்சில் கடைசியாக அமர்ந்திருப்பாய். ரொம்ப கவனமாக பாடத்தைக் கேட்டுக் கொண்டிருப்பாய். நான் உன்னையே பார்த்துக் கொண்டிருப்பேன். நாளுக்கு நாள் உன்னிடம் ஈர்ப்பு அதிகரிக்கத் தொடங்கியது. ஆனால் அதை என் மனதிலேயே புதைத்துக்கொண்டு விட்டேன். காரணம் என்ன தெரியுமா? அந்த நாட்களில் காதலை விட பணம் தான் முக்கியம் என்று பலமாக நம்பினேன்."

பிரகாஷ் வியப்புடன் அவளையே பார்த்துக் கொண்டிருந்தான்.

"என் விருப்பத்திற்கு ஏற்ப பொன்னம்பலத்துடன் என் திருமணம் நடந்தது. இப்பொழுது என்னைச் சுற்றிலும் பணம்தான். ஆனால் அது கிடைத்த பிறகுதான் புரிந்தது, மனிதனுக்கு தேவை பணம் மட்டுமே இல்லை என்று. ஒருபக்கம் இப்படி என்றால் இன்னொரு பக்கம் என் மீது இரக்கம் காட்டுபவர்கள், என் கணவரின் வயதைப் பார்த்து என்னை நெருங்க முயற்சி செய்பவர்கள் அதிகமாகி விட்டார்கள். அப்படிப்பட்ட ஆண்களைத் தள்ளி வைப்பதற்கு நான் என் மனதுடன் போராட வேண்டியிருந்தது. இந்தப் போராட்டத்தில் ரொம்ப களைத்துப் போய் விட்டேன். இந்த நிலையில் அடிக்கடி உன் நினைவு வரத் தொடங்கியது. ஒரு முறை நீ தென் பட்டால் போதுமென்றும் என் மனதில் இருப்பதை வெளிப்படுத்த வேண்டும் என்றும் நினைத்தேன். ஆனால் ஒன்று மட்டும் உண்மை. அன்றே நான் உன்னிடம் சொல்லியிருந்தால், நமக்குத் திருமணமும் முடிந்திருந்தால் இந்த அளவுக்கு உன்னை நேசித்திருக்க மாட்டேன். அப்போது பணத்தின் மதிப்பு புரிந்திருக்கும்." சற்று நிறுத்தினாள்.

"உனக்கு இதெல்லாம் ஆச்சரியமாக இருக்கு இல்லையா. எனக்கு மட்டும் சந்தோஷமாக இருக்கு. ஒருமுறை தவறு செய்து உன்னை இழந்து விட்டேன். இன்னொருமுறை அந்தத் தவறைச் செய்யமாட்டேன். உன்னை எப்போதாவது சந்திப்பேன் என்றும், இதை யெல்லாம் உன்னிடம் சொல்லணும் என்றும் எத்தனை முறை மனதிலேயே ஒத்திகை பார்த்துக் கொண்டேன் தெரியுமா?" களைத்துப் போனவள் போல் பின்னால் சாய்ந்து கொண்டாள்.



"இப்போ நாம் எங்கே போகிறோம்?" நிதானமான குரலில் கேட்டான்.

"இங்கே எங்களுக்கு ஃபார்ம் ஹவுஸ் இருக்கு. சமீபத்தில்தான் வாங்கினோம்."

"காரை நிறுத்து."

சுஜாதா திடுக்கிட்டு அவன் பக்கம் பார்த்தாள். பிரகாஷின் முகம் ரொம்ப சீரியஸாக இருந்தது– தன்னை யும் அறியாமல் சாலை ஓரமாக காரை நிறுத்தினாள். பிரகாஷ் கீழே இறங்கி கார் கதவை பலமாக சாத்தினான். "குட்பை சுஜாதா" என்ற சொல்லிவிட்டு வந்த வழியே நடக்கத் தொடங்கினான்.

இந்தச் சம்பவம் இப்படி முடிவதற்குக் காரணம் பிரகாஷின் தனித்தன்மை என்று சொல்ல முடியாது. இன்னும் சொல்லப் போனால் இது போன்ற சமயத்தில் எந்த இளைஞனுக்கும் குழப்பம் இருக்கத்தான் செய்யும். இந்த நிகழ்ச்சி இப்படி முடியாமல் வேறு விதமாக நடந்திருந்தால் எவ்வளவு நன்றாக இருந்திருக்கும் என்று பின்னால் நினைத்துப் பார்ப்பதும் சகஜம்தான்.

ஆனால் பிரகாஷ் விஷயத்தில் கதை இதோடு முடிய வில்லை. சுஜாதா காரைப் பின்னால் திருப்பி பிரகாஷ் பக்கத்தில் நிறுத்தினாள்.

"பிரகாஷ்! காரில் ஏறிக்கொள். உன்னை அதே இடத்தில் இறக்கி விடுகிறேன்" என்றாள்.

பிரகாஷ் அவள் கண்களுக்குள் ஊடுருவுவது போல் பார்த்தான்.

"என் மீது இருக்கும் கோபத்தில் உன்னை நீயே வருத்திக் கொண்டு மூன்று மைல்கள் நடப்பானேன்?" என்றாள் முறுவலுடன்.

பிரகாஷ் பதில் சொல்லவில்லை. அவனுடைய நிலைமை சங்கடமாக இருந்தது. தான் என்ன செய்யணும் என்றோ, தன்னுடைய கொள்கைகள் என்னவென்றோ, அவளுடைய காரில் ஏறுவதால் அந்தக் கொள்கைகளுக்கு எந்த விதமான இழுக்கு நேருமோ அவனால் யோசித்துப் பார்க்க முடியவில்லை. கெட்டுப் போவதைப் பற்றி, சமுதாயத்தில் மனிதனுக்கு இருக்கும் கட்டுப்பாடுகளைப் பற்றி, சூழ்நிலையைப் பற்றி அவன் ஒரு நாளும் யோசித்தது இல்லை. அவன் மேதாவி ஒன்றும் இல்லை. தன்னைப் பற்றியும், தன்னுடைய நிலைமை பற்றியும் தர்க்க ரீதியில் யோசிக்கும் திறமை அவனுக்கு இல்லை.

சாலையில் சைக்கிளில் போய்க் கொண்டிருந்தவன் தங்களையே திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டு போவதை பிரகாஷ் கவனித்தான்.

"ப்ளீஸ்!" என்றாள் சுஜாதா.

"காரில் ஏறிக்கொண்டு திரும்பவும் பழைய இடத்தில் இறங்கி விடப் போகிறோம். இதில் தவறென்ன இருக்கு?" சிறிய ஆத்ம வஞ்சனையுடன் பிரகாஷ் காரில் ஏறிக் கொண்டான். சின்ன குலுக்கலுடன் கார் புறப்பட்டது.

ரொம்ப நேரம் வரையில் இருவரும் பேசிக் கொள்ள வில்லை. அந்தக் கொஞ்ச நேரத்தில் அவன் நன்றாக தேறிக் கொண்டு விட்டான். சுஜாதா மௌனமாக காரைச் செலுத்திக் கொண்டிருந்தாள். பிரகாஷுக்கு இந்த சூழ்நிலை வேதனை தரக் கூடியதாக இருந்தது. இது போல் அவள் தன்னை வெறுமே இறக்கி விட்டு போய் விடாமல் ஏதாவது பேசினால் நன்றாக இருக்கும் என்று தோன்றியது. சராசரி மனிதனுக்கு இருக்கும் பலவீனங்களுக்கு அவன் அப்பாற்பட்டவன் ஒன்றும் இல்லையே!



அதற்குள் அவனுடைய ஆசை நிறைவேறியது. ஒரு கையால் ஸ்டியரிங்கைப் பிடித்துக் கொண்டே மறு கையை அவன் கை மீது பதித்து "என்னை மன்னித்து விடு பிரகாஷ்" என்றாள். அந்தக் குரலில் தென்பட்ட தெளி வற்ற நடுக்கம் அவன் இதயத்தை உலுக்கி விட்டது.

அவன் இறங்க வேண்டிய இடம் வந்ததும், "இங்கே நிறுத்தட்டுமா?" என்றாள்.

அவன் தலையை அசைத்ததும் ஓரமாகக் காரை நிறுத்தினாள். காரிலிருந்து இறங்கிய பிரகாஷ் அவள் கண்களுக்குள் ஆழமாகப் பார்த்துக் கொண்டே "சுஜாதா! நீதான் என்னை மன்னிக்க வேண்டும். நீயே யோசித்துப் பாரு. சீதாவைத் திருமணம் செய்து கொள்ளும் பொறுப்பு என் மீது இருக்கும் போது உன்னை எப்படி காதலிக்க முடியும்?" என்றான்.

தன்னுடைய செயலை நியாயப்படுத்திக் கொள்ளும் விதமாக அவளிடம் ஏதாவது சொல்ல வேண்டும் என்று ரொம்ப நேரமாகத் தவித்துக் கொண்டிருந்தான் தன்னுடைய எண்ணங்களை (அவளுடைய பார்வையில்) தன்னுடைய பலவீனங்களை மறைக்கும் விதத்தில் சொல்லி முடித்த பிறகு நிம்மதியாக மூச்சு விட்டுக் கொண்டான்.

ஆனால் அவனுடைய நிம்மதி ரொம்ப நேரம் நீடிக்க வில்லை. சுஜாதா காரை ஸ்டார்ட் செய்து கொண்டே "பிரகாஷ்! ஒரு சின்ன விஷயம்" என்றாள். "நம் இருவருக்கும் இடையே காதல் என்ற பெரிய வார்த்தை எதுக்கு?" என்று சொல்லிவிட்டு காரை ஓட்டிக்கொண்டு போய்விட்டாள்.

பிரகாஷ் ரொம்ப நேரம் வரையில் கார் சென்ற திசையைப் பார்த்துக் கொண்டு அப்படியே நின்று விட்டான். எவ்வளவுதான் சமாதானப்படுத்திக் கொள்ள நினைத்தாலும் சுஜாதாவின் நேர்மையின் முன்னால் தன்னுடைய செயல் அற்பமானதாகத் தோன்றியது. ரொம்ப உயர்ந்தவன் போல் நடந்து கொண்டாலும் உள்ளூற ஏதோ அபசுரம் ஒலிப்பது போன்ற உணர்வு. தான் மறுப்பு தெரிவித்து இருக்கலாம். அது வேறு விஷயம். ஆனால் உடனே அவள் போய் விடாமல் தன்னை மேலும் கெஞ்சியிருக்கலாமே என்ற எதிர்பார்ப்பு. இது பலவீனம் அல்லாமல் வேறு என்ன?

கோவிலுக்குச் சென்று கடவுளை மனம் உருக தியானம் செய்துவிட்டு திரும்பி வரும்போது எதிரே வரும் இளம் பெண்களைக் கண்ணிமைக்காமல் பார்க்கும் பக்தன் தன்னுடைய செயலை எப்படி நியாயப்படுத்திக் கொள்வான்? பெண்களைப் பார்ப்பதை விட்டுவிட வேண்டும் இல்லையா? கோவிலுக்கு போவதையாவது விட்டுவிடணும். 'அது வேறு இது வேறு' என்று மனதை ஏமாற்றிக் கொள்வதுதான் மனிதனின் இயல்பு. இரட்டை மனப்பான்மை.

'சுஜாதாவை எங்கேயாவது சந்திக்க நேர்ந்தாலும் இனி பேசவே கூடாது. அவளுடைய காரில் ஏறவும் கூடாது' என்று உடனுக்குடன் ஒரு முடிவுக்கு வந்தவனாக இரண்டடி நடந்தான். சட்டென்று அப்படியே நின்று விட்டான். எதிரே தாய் மாமன்!

ரொம்ப நேரமாக தன்னையே கவனித்து வருவது போல் கண்களை இடுக்கிக் கொண்டு நின்றிருந்தார்.

"யார் அந்தப் பெண்?" அவருடைய குரலில் சந்தேகம் வெளிப்படையாகத் தென்பட்டது.



பிரகாஷின் முகம் வெளிறிப்போய் விட்டது. "என்னுடைய சினேகிதி. கல்லூரியில் என்னுடன் சேர்ந்து படித்தவள்" என்றான்.

'உண்மைதானா?' என்பது போல் பார்த்துவிட்டு "இனி வீட்டுக்குத்தானே" என்றார்.

இருபது வருடங்களாக தான் கடைபிடித்து வந்த நல்லதனத்தை, தனித்தன்மையை மாமா தன்னுடைய ஒரே பார்வையில் அஸ்திவாரத்துடன் தகர்த்து விட்டாரே. நல்ல தனத்திற்கு அர்த்தம்தான் என்ன? பிரகாஷ் முதல் முறையாக யோசிக்க ஆரம்பித்தான்.

இயலாமைக்கும், அப்பாவித்தனத்திற்கும், தனித்தன்மை இல்லாமல் இருப்பதற்கும் உள்ள வேறுபாட்டை புரிந்து கொள்வதற்கு பிரகாஷுக்கு அனுபவம் போறாது. இன்னும் ஒரு படி மேலே யோசித்து இருந்தால் பிரகாஷுக்கு மாமாவிடம் குறை தென்பட்டிருக்காது.

மகன் முதல்முறையாக குடித்துவிட்டு வந்திருக்கிறான் என்று தெரிந்தால் ஏதோ நண்பர்களுடன் ஜாலியாக கிளப்புக்குப் போயிருக்கக்கூடும் என்று எந்த தந்தையும் நினைக்க மாட்டார். தேவதாஸ் போல் பாட்டிலும் கையுமாக அலையப் போவதாக நினைத்து பயந்து விடுவார். வேடிக்கை என்னவென்றால் இந்த உலகத்தில் அடுத்தவனின் சுயக்கட்டுப்பாடு விஷயத்தில் நம்பிக்கை வைப்பது ரொம்பக் குறைவு. அதிலும் நெருங்கியவர்கள் விஷயத்தில் ரொம்பவே.

ஒரு காலத்தில் தான் செய்த அல்லது இப்போதும் செய்துகொண்டு இருக்கிற கீழ்த்தரமான செயல்களை அடுத்தவன் செய்தால் பார்த்துக்கொண்டு சும்மா இருக்க முடியாது சிலரால். தான் எப்படியும் ஒழுக்கத்தைக் கடை

பிடிக்காமல் போய்விட்டோம்– அடுத்தவனாவது நல்ல வழியில் நடக்கட்டும் என்று மனதை ஏமாற்றிக் கொண்டு இலவசமாக அறிவுரை வழங்க முயற்சி செய்வார்கள்.

பெரியவர்களாக இருப்பவர்கள் தங்களுடைய ஆளுமையில் இருக்கும் சிறியவர்கள் மீது தங்களுடைய அபிப்பிராயங்களை திணிப்பதற்காக 'தலைமுறை இடைவெளி' என்ற பெயரில் தங்களைத் தாங்களே ஏமாற்றிக் கொள்வார்கள்.

* * *

பிரகாஷ் மாமாவுடன் சேர்ந்து வீட்டுக்கு வந்த போது வாசலில் பூட்டு தொங்கிக் கொண்டிருந்தது. பிரகாஷ் பக்கத்து வீட்டிற்குப் போய் சாவி வாங்கி வந்து கதவைத் திறந்தான். உள்ளே இருட்டாக இருந்தது. தட்டுத் தடுமாறிக் கொண்டே சுவிட்சைப் போட்டான். அந்த அறையில் இருந்த நிசப்தம் அவன் மனதிலும் பரவுவது போல் இருந்தது.

"சொல்ல மறந்து விட்டேன்." அப்பொழுதுதான் நினைவுக்கு வந்தாற்போல் சுவாமிநாதன் சொன்னார். "இன்றுதான் கடைசி நாளாம். அடுத்த வீட்டு காமாட்சி யுடன் சினிமாவுக்குப் போகப் போவதாக சீதா சொல்லி யிருந்தாள்."

பிரகாஷ் சட்டை பட்டன்களை கழட்டிக் கொண்டே "எந்த சினிமா?" கேட்டான்.

"காட்டு ராணியோ ரவுடி ராணியோ ஏதோ சொன்னாள்."

பிரகாஷ் பதில் சொல்லவில்லை. கிணற்றடியில் கை கால்களை அலம்பிக்கொண்டு அப்படியே திண்ணை



யில் அமர்ந்து கொண்டான். குளிர்காலம் என்பதால் சீக்கிரமாகவே இருட்டிவிட்டது. வாதாம் மரத்தின் மீதிருந்து காற்று அலை அலையாக வீசிக் கொண்டிருந்தது.

திடீரென்று அவனை ஏமாற்றம் சூழ்ந்து கொண்டது. ஏதோ இழந்து விட்டாற் போன்ற உணர்வு. இனம் புரியாத அதிருப்தி.

அவன் சுஜாதாவைக் காதலிக்கிறானா? இல்லை இல்லை. அது வெறும் ஈர்ப்புதான். பின்னே சீதா? இந்த விஷயத்தில் காதல் என்ற புனிதமான சொல்லை பயன் படுத்துவானேன்? தான் அவளைக் கல்யாணம் செய்து கொள்வான். அவளுடன் குடித்தனம் நடத்துவான். அவள் குழந்தைகளைப் பெற்றுத் தருவாள். காதல் என்றால் இந்த பந்தம்தானா?

அவனுக்குத் திடீரென்று தன்னுடன் படித்த குமாரின் நினைவு வந்தது. ஏறத்தாழ நான்கு வருடங்களுக்கு முன்னால் பிரிந்த நண்பனின் நினைவுகள் அவனை சூழ்ந்து கொண்டன. அந்தக் காலத்தில் குமார் எழுதிய கதையில் சில வரிகள் இன்னும் அவன் மனதில் பசுமை யாக இருந்தன.

'மாலை ஐந்து மணி ஆனதும் பால்கனியில் நின்று கொண்டு உனக்காக காத்திருப்பதில் இருக்கும் சந்தோஷம் எப்படிப்பட்டதோ. உனக்கு எப்படி தெரியும்? திடீரென்று தெருமுனையில் உன் உருவம் தென்படும். தலை குனிந்த படி வேக வேகமாக நடந்து வந்து கொண்டிருப்பாய். தெரு வரையில் வந்தவன் வீட்டுக்குள் வராமல் இருக்கப் போவ தில்லை. இருந்தாலும் உன் நடையில் அந்த வேகத்தை, சீக்கிரமாக வீட்டுக்குப் போய்ச் சேர வேண்டும் என்ற தவிப்பை உணரும் போதும், உன் வருகை என்னுள் ஏற்படுத்தும் மகிழ்ச்சியை அனுபவிப்பதற்காகவும்

எத்தனை யுகங்கள் வேண்டுமானாலும் என்னால் காத்திருக்க முடியும். எதிர் பார்ப்பில் உள்ள சுகம் உனக்கு எப்படி தெரியும்?'

இந்தக் கதையை எத்தனை முறை படித்திருப்பான்? குமார் ரொம்ப அதிர்ஷ்டசாலி என்று நினைக்கத் தோன்றியது. கல்லூரியில் படிக்கும் போது அடுத்தடுத்து உட்கார்ந்து கொண்டதால் குமாரின் பாதிப்பு பிரகாஷ் மீது அதிக மாகவே இருந்தது, வார்த்தைகளில் சொல்லி விட முடியாத அளவுக்கு.

மாமாவின் அழைப்பைக் கேட்டு பிரகாஷ் உள்ளே சென்றான். தட்டைப் போட்டு பரிமாறிக்கொண்டே "அவர்கள் வருவதற்கு நேரமாகிவிடும். நாம் சாப்பிடுவோம்" என்றார் சுவாமிநாதன்.

விருப்பம் இல்லாவிட்டாலும் தட்டின் முன்னால் உட்கார்ந்து கொண்டு சாப்பிட்டதாக பெயர் பண்ணி விட்டு எழுந்துகொண்டான்.

சட்டையை மாட்டிக் கொண்டு வெளியே கிளம்பும் போது "மறுபடியும் எங்கே போகிறாய்?" சுவாமிநாதன் கேட்டார்.

"சும்மா கடைத்தெரு வரையில் போகிறேன், சீக்கிரம் வந்துவிடுவேன்." சொல்லிக்கொண்டே கதவை வெறுமே சாத்திவிட்டுப் புறப்பட்டான். உண்மையிலேயே எங்கே என்று அவனுக்குத் தெரியவில்லை. நிதானமாக நடக்கத் தொடங்கினான். எதிரே கோவில் துவஜஸ்தம்பம் இந்த உலகில் நடக்கும் பாபச் செயல்களை பார்ப்பதற்காக என்பதுபோல் உயரமாக இருந்தது. உள்ளே போகலாமா என்ற நினைப்பை உடனே மாற்றிக் கொண்டான். பாட்டி துணையுடன் கோவில் படிகளில் இறங்கி வந்து



கொண்டிருந்த தாசில்தாரின் மகள் பிரகாஷை கடைக் கண்ணால் பார்த்தும் பார்க்காதது போல் முன்னால் நடந்தாள். அவள் இதழ்களில் மலர்ந்த முறுவலை தெரு விளக்கு வெளிச்சத்தில் பிரகாஷ் கவனித்தான். ஏனோ அந்தக் காட்சி அவன் மனதை நெகிழ்த்தி விட்டது– அதில் வேறு எந்த எண்ணமும் இருக்கவில்லை. பதினாறு வயது பிராயத்தில் இருக்கும் பெண் ஒருத்தி உலகத்தில் இருக்கும் அப்பாவித்தனத்தை கண்ணிமைகளுக்கு பின்னால் மறைத்துக் கொண்டு முறுவல் பூக்கும் போது வெறுமே அப்படியே பார்த்துக் கொண்டிருப்பது கூட ஒரு இனிமையான அனுபவம்தான்.

மறுபடியும் பின்னால் திரும்பிப் பார்த்தான். அந்தப் பெண் திரும்பிப் பார்க்கவில்லை. தொலைவில் நடந்து போய்க் கொண்டே தெருமுனையில் திரும்பிவிட்டாள். மேலும் பத்தடிகள் நடந்து பிரதான சாலைக்கு வந்தான். சாலையைத் தாண்டி அந்தப் பக்கமாக இருக்கும் குறுகலான தெருவுக்குள் நுழைந்தான். தொலைவில் வண்ண வண்ண மின் விளக்குகள் ஜொலித்துக் கொண்டிருந்தன. பெரிய பெரிய பேனர்ஸ் கட்டப்பட்டிருந்தன. பிரகாஷ் என்றுமே அந்த இடத்திற்குப் போனதில்லை. உள்ளே என்ன நடக்கிற தென்றும் அவனுக்குத் தெரியாது. தெரிந்து கொள்ளும் விருப்பமும் இல்லை. தனக்குள் ஏதோ யோசித்தபடி நடந்து கொண்டிருந்தான்.

"வணக்கம் சார்" என்ற சொல் காதில் விழுந்ததும் அந்தப் பக்கம் பார்த்தான்.

இஸ்மாயில். பிரகாஷ் ஆபீஸில் ப்யூன் ஆக இருப்பவன். கேட் அருகில் ஸ்டூல் மீது அமர்ந்திருந்தவன் எழுந்து அருகில் வந்தான். "என்ன சார்? இந்தப் பக்கமாக வந்திருக்கீங்க?" என்று கேட்டான்.

"சும்மாதான்."

"உங்களை இந்தப் பக்கம் என்றுமே பார்த்தது இல்லையே. அதான் கேட்டேன்" என்றான் இஸ்மாயில்.

"அது போகட்டும். நீ இந்த இடத்தில் இருக்கிறாயே, ஏன்?" சுற்றிலும் பார்த்துக்கொண்டே கேட்டான்.

"இரவு நேரத்தில் இங்கே வேலை பார்க்கிறேன் சார்."

பிரகாஷ் வியப்படைந்தான். அவன் வியப்பை புரிந்து கொண்டாற்போல் "இரவு ஏழு மணியிலிருந்து பதினோரு மணி வரையில் வேலை பார்த்தால் இருபது ரூபாய் தருவாங்க சார். இரண்டு மாதமாக இங்கே வேலை பார்க்கிறேன்" இஸ்மாயில் சொன்னான்.

"பகல் முழுவதும் ஆபீஸிலும் இரவில் இங்கேயும் வேலை பார்த்து வருகிறாயா?" மேலும் வியப்புடன் கேட்டான் பிரகாஷ்.

"அறுநூறு ரூபாய் வரையிலும் கிடைக்கும். அனாவசியமாக அதை விடுவானேன்."

பிரகாஷ் இஸ்மாயிலைக் கூர்ந்து பார்த்தான். அவன் வயது நாற்பதுக்கும் ஐம்பதுக்கும் நடுவில் இருக்கக்கூடும். கன்னத்தின் அருகில் தலைமுடி நரைத்திருந்தது. குளிருக்கு ஸ்வெட்டரும், கழுத்தைச் சுற்றிலும் மஃப்ளரும் அணிந்திருந்தான். முகத்தில் இருந்த சுருக்கங்கள் வாழ்க்கையில் அவன் பட்ட கஷ்டங்களை, அனுபவங்களை பறைச் சாற்றுவது போல் இருந்தன.

"உனக்கு எத்தனை குழந்தைகள்?" பிரகாஷ் கேட்டான்.

"ஐந்து குழந்தைகள் சார். பெரியவன் பிளஸ் டு படிக்கிறான். அவனுக்குப் பிறகு இரண்டு பெண் குழந்தைகள்" என்றவன் சினிமா ஹால் பக்கத்தில் பெட்டிக்கடை அருகில் நின்று கொண்டிருந்த பையனை சுட்டிக்காட்டி, "அதோ சார். அவன்தான் மூத்தவன்" என்றான்.



பிரகாஷ் அந்தப் பக்கம் திரும்பிப் பார்த்தான். நெற்றியில் விழும் கேசத்தை ரஜனி ஸ்டையில் பின்னால் தள்ளியபடி யாருடனோ பேசிக்கொண்டிருந்த இளைஞனைப் பார்த்தான்.

"நீ இந்தக் குளிரில் வேலை பார்த்துக் கொண்டிருக்கும் போது உன் மகன் ஊர் சுற்றிக் கொண்டிருக்கிறானா?" கோபம் கலந்த குரலில் கேட்டான்.

இஸ்மாயில் சிரித்துவிட்டான். "இல்லை சார். இரவு பத்து மணி வரையில் அந்தக் கடையில் 'மட்கா' வியாபாரம் நடக்கும். அந்த கணக்கு வழக்குகளை பார்ப்பான்" என்றான்.

பிரகாஷுக்கு யாரோ கன்னத்தில் அடித்தாற்போல் இருந்தது "பின்னே படிப்பு?" என்றான்.

"நானும் எத்தனையோ முறை சொல்லிப் பார்த்து விட்டேன் சார். அவன் கேட்க மாட்டான். பத்து மணிக்குப் பிறகு வீட்டுக்குப் போய் பன்னிரெண்டு வரையிலும் படிப்பான். கிளாஸில் முதல் மார்க் அவனுக்குத் தான்" சொல்லிவிட்டு ஏதோ வேலையாக இஸ்மாயில் உள்ளே போனான்.

பிரகாஷ் மறுபடியும் அந்த இளைஞனைப் பார்த்தான். அலட்சியமாக வாரப்பட்ட தலை. ஜீன்ஸ் பேண்ட். வெளி தோற்றத்திற்கும் உள் மனிதனுக்கும் எவ்வளவு வேறுபாடு? இவ்வளவு சின்ன வயதிலேயே குடும்பக் கஷ்டத்தை உணர்ந்துகொண்டு எவ்வளவு பொறுப்பாக செயல்படுகிறான்?

பிரகாஷுக்கு இஸ்மாயிலை நினைக்கும் போது இரக்கம் தான் ஏற்பட்டது. இந்தக் குளிரில் தந்தையும், மகனும் கஷ்டப்பட்டு உழைத்து நாள் ஒன்றுக்கு முப்பது ரூபாய் சம்பாதிக்கிறார்கள். தங்கள் ஆபீஸிலேயே வேலை செய்யும் ராஜு நினைவுக்கு வந்தான். அவனும் ப்யூன் தான். எந்த கிளயிண்டும் அவனிடமிருந்து தப்பித்துக் கொண்டு போய்விட முடியாது. யாராக இருந்தாலும் பத்து ரூபாய்க்குக் குறைவாக வாங்க மாட்டான்.

நேர்மைக்கு மதிப்பு கொடுத்து தந்தையும் மகனும் குளிரையும் பொருட்படுத்தாமல் உழைத்துச் சம்பாதிக்கும் பணம், ஒரு சின்ன ஆத்ம வஞ்சனையின் மூலம் (இன்னும் சில நாட்கள் போனால் அதுவும் இருக்காது.) மனச் சாட்சியைப் புதைத்து விட்டு கையை நீட்டினால் சுலப மாக கிடைத்துவிடுகிறது. மனிதன் சீரழிந்து போகாமல் எது அவனை பாதுகாத்து வருகிறது?

ஆபீஸில் எல்லோருக்கும் இஸ்மாயில் என்றால் கௌரவம். மேலதிகாரி கூட அவனை மதிப்புடன் நடத்து வார். அவனுடைய நேர்மை எல்லோருக்கும் தெரியும்.

ராஜு ஏற்கெனவே இடம் வாங்கிவிட்டான். வீடு கட்டுவதற்கான ஏற்பாடுகளில் முனைந்திருந்தான். ரிடையராகும்போது எதிர்காலத்தைப் பற்றி அவனுக்கு எந்தக் கவலையும் இருக்காது.

சமுதாயத்தில் மாற்றம் வரவேண்டும். புரட்சி வந்தால் தான் இது சாத்தியம். தந்தையை ஆஸ்பத்திரியில் சேர்த்து சிகிச்சை அளிக்க வேண்டுமென்றாலும், மகனை பள்ளி யில் சேர்க்கணும் என்றாலும், குடும்ப வாழ்க்கை பிரச்னைகள் இல்லாமல் நிம்மதியாக கழிய வேண்டும் என்றாலும் பணம் தேவை. மனிதனின் அன்றாட வாழ்க்கை பணத் துடன் முடிச்சுப் போடப்பட்டிருக்கிறது. பணமானது



எப்போதும் மனிதனின் நேர்மையைச் சோதித்துக் கொண்டே இருக்கும்.

"இங்கேயே நிற்கறீங்களே?" இஸ்மாயில் வந்து கொண்டே கேட்டான்.

பிரகாஷ் தடுமாறினான். "சும்மாதான். கிளம்பு கிறேன்" என்றான்.

"உள்ளே போய் பாருங்க சார்" என்றான் இஸ்மாயில்.

உடனே வீட்டுக்குப் போய் எதுவும் செய்யப் போவ தில்லை. உள்ளே என்னதான் நடக்கிறது என்று பார்ப்போம் என்று நினைத்தபடி உள்ளே போனான் பிரகாஷ்.

* * *

# 3

உள்ளே வண்ண விளக்குகள் பளிச் பளிச்சென்று மின்னிக் கொண்டிருந்தன. சின்னச் சின்ன டெண்டுகள் முன்னால் மக்கள் கும்பலாக கூடியிருந்தார்கள். வழி தெரியாதவன் போல் பிரகாஷ் அப்படியே நின்று விட்டான். ஒரு பக்கம் ஒலிபெருக்கியில் சினிமா பாட்டு ஒலித்துக்கொண்டிருந்தது.

"வாங்க தம்பி. இந்தப் பக்கம் வாங்க" என்ற குரல் கேட்டு அந்தப் பக்கம் திரும்பிப் பார்த்தான். மக்கள் குறுக்கே இருந்ததால் ஒன்றும் புலப்படவில்லை. தன்னையும் அறியாமல் அந்தப் பக்கம் நடந்தான். கும்பலை விலக்கிக் கொண்டு உள்ளே போனான். பெரிய மேஜை ஒன்று நடுவில் இருந்தது. அதில் ஆறு நிறங்கள் இருந்தன. மேஜைக்கு மறுபக்கம் அவற்றில் ஒரு பலகை இருந்தது. பலகையின் மீது சிறிய கட்டங்கள் இருந்தன. கட்டங்களில் இந்த ஆறு நிறங்களும் மாறி மாறி இருந்தன.

பிரகாஷ் ஆர்வத்துடன் பார்க்கத் தொடங்கினான். அந்த டெண்டுக்கு உரிமையாளன் அம்பு போன்ற மூன்று குச்சிகளை ஒருவனிடம் தந்தான். மக்கள் தங்களுக்கு பிடித்த நிறங்கள் மீது பெட் கட்டினார்கள். பிறகு அம்புகள் வீசப்பட்டன. முதலாவது அம்பு மஞ்சள் கட்டத்திலும், இரண்டாவது சிவப்பு மற்றும் மூன்றாவது நீலத்திலும் போய் தைத்துக் கொண்டன. அந்த மூன்று நிறங்கள் மீது



பெட் கட்டியவர்களுக்கு இருமடங்கு பணம் தந்துவிட்டு மீதி பணத்தை கல்லாப் பெட்டியில் போட்டுக் கொண்டான்.

பிரகாஷுக்கு ஆட்டம் என்னவென்று புரிந்து விட்டது. ஏதாவது மோசடி வேலை இருக்குமோ என்று கூட யோசித்தான். எதுவும் இருப்பதாக தெரியவில்லை. இருப்பது ஆறு நிறங்கள். மூன்று அம்புகளை வீசப் போகிறான். வெற்றி தோல்விக்கு வாய்ப்பு சரிபாதி. அதிர்ஷ்டத்தைத் தவிர இதில் ஏமாற்று வேலை எதுவும் இல்லை.

இரண்டு நாட்களுக்கு முன் பத்திரிகையில் 'லாட்டரியில் அதிர்ஷ்டம் கிடைக்கும்' என்று வார பலன் படித்தது நினைவுக்கு வந்தது. பெட் கட்டுவோமா வேண்டாமா என்று தயங்கினான். சட்டைப் பையைத் தடவிப் பார்த்தான். சில்லறைக் காசுகள் தட்டுப் பட்டன. மாதக் கடைசி என்று நினைவுக்கு வந்தது.

ஆட்டம் மேலும் தொடர்ந்தது. பிரகாஷ் ஒரு விஷயத்தைக் கவனித்தான். ஒவ்வொரு முறையும் சிவப்பு நிற கட்டத்தில் அம்பு தைத்தது. பச்சையிலும், நீலத்திலும் படவே இல்லை. வெளியே வந்து சில்லறையை எண்ணினான். ஒன்பது ரூபாய் வரையில் இருந்தது. நான்கு ரூபாய்க்கு உண்டான சில்லறையை மறுபடியும் உள்ளே வைத்துக் கொண்டு ஐந்து ரூபாய்க்கு டோக்கனை வாங்கிக் கொண்டான். பிரகாஷ் உள்ளே வந்த போது மேலும் ஒரு ஆட்டம் முடிந்திருந்தது. இந்த முறை சிவப்பு நிறத்தில் அம்பு தைக்கவில்லை. அடுத்த முறை சிவப்பு நிறத்தில் கட்டாயம் தைக்கும் என்று பிரகாஷ் பலமாக நம்பினான்.

முதலாளியிடம் டோக்கனை கொடுத்துவிட்டு "சிவப்பு" என்றான்.

டோக்கன்கள் வசூல் செய்யப்பட்டன. கோட் சூட் அணிந்த ஆசாமி ஒருவன் நீலநிறத்தின் மீது பெட் கட்டி விட்டு ஐம்பது ரூபாய்க்கான டோக்கனை கொடுத்தான். அம்புகளை வீசுவதற்காக கையில் எடுத்துக் கொண்டான்.

பிரகாஷ் பக்கத்தில் நின்று கொண்டிருந்தவன் சட்டென்று முதலாளியிடம் சென்று "மஞ்சள் மீது கட்டியிருந்த என் பத்து ரூபாயை நீலத்திற்கு மாற்றி விடு" என்றான்.

பிரகாஷ் அவனை வியப்புடன் பார்த்ததை கவனித்த முதலாளி "அந்த ஆசாமி நன்றாக அம்பு வீசுவார். சாதாரணமாக அவருடைய குறி தப்பாது" என்றான் முறுவலுடன்.

இன்னும் நாலைந்து பேர் நீலத்தின் மீது பந்தயம் கட்டினார்கள். ஆட்டம் தொடங்கியது. அம்பு மஞ்சள் கட்டத்தில் போய்த் தைத்தது. பிரகாஷ் தலையைத் திருப்பி பக்கத்தில் நின்றிருந்தவனைப் பார்த்தான். இரத்தம் வற்றி விட்டாற்போல் அவன் முகம் வெளிறியிருந்தது.

சூட் ஆசாமி குறிபார்த்து இரண்டாவது அம்பை வீசினான். நேராக சிவப்பு கட்டத்தில் தைத்தது. பிரகாஷின் கண்கள் மின்னின. மூன்றாவது அம்பு மறுபடியும் மஞ்சள்.

பிரகாஷுக்கு பத்து ரூபாய் டோக்கன் தரப்பட்டது. ஐந்து ரூபாய் லாபம்.

டோக்கனை மாற்றிக் கொள்ளும் எண்ணத்துடன் திரும்பும்போது "உங்களுக்கு இன்னிக்கு அதிர்ஷ்ட நாள் போலிருக்கே" என்றான் பக்கத்தில் இருந்தவன்.



பிரகாஷ் கூச்சத்துடன் சிரித்தான். உள்ளூற பெருமையாக உணர்ந்தான். அடுத்த ஆட்டம் தொடங்க இருந்தது. "இந்த முறை எந்த நிறத்தில் கட்டப் போறீங்க?" என்று கேட்டான் அவன்.

'இல்லை கிளம்பப் போகிறேன்' என்று சொல்ல நினைத்தாலும் பிரகாஷால் ஏனோ சொல்ல முடியவில்லை. "பார்ப்போம்" என்றான் மையமாக.

டோக்கன் தருபவன் அருகில் வந்ததும் ஐந்து ரூபாய் கொடுத்து 'மஞ்சள்' என்றான். பக்கத்தில் இருந்தவன் பிரகாஷை வித்தியாசமாகப் பார்த்தான். டோக்கன்காரன் நகர்ந்ததும் "நீங்க டோக்கன் வாங்கவில்லையே?" பிரகாஷ் கேட்டான்.

"இந்த ஆட்டம் வெறுமே வேடிக்கை பார்க்கப் போகிறேன்" என்றான் அவன்.

சூட் ஆசாமி மறுபடியும் அம்புகளை வீசினான்; இரண்டாவது வெள்ளை நிறத்திலும், முதலாவதும் மூன்றாவதும் மஞ்சளிலும் தைத்தன. பக்கத்தில் இருந்தவன் பிரகாஷ் கையைப்பற்றி பலமாக குலுக்கினான். "இன்னிக்கு உண்மையிலேயே அதிர்ஷ்ட தேவதை உங்கள் பக்கம் இருக்கிறாள்" என்று சொல்லிவிட்டு சட்டைப் பையிலிருந்து ஐம்பது ரூபாய்க்கு டோக்கனை எடுத்து "உங்கள் விருப்பம் போல் ஆடுங்கள் எனக்காக" என்றான்.

பிரகாஷுக்குக் கூச்சமாக இருந்தது– "எனக்கு எதுவும் தெரியாது. சும்மா ஆடினேன். இவ்வளவு பணத்தை என்னை நம்பி–" என்று மேலும் ஏதோ சொல்ல முயன்ற போது பாதியிலேயே நிறுத்தி "அதுதான் சார் அதிர்ஷ்டம். வந்தால் வரட்டும். இல்லையா சட்டைப் பையை உதறிக் கொண்டு போய்விடலாம்" என்றான் பக்கத்தில் இருந்தவன்.

டோக்கன் ஆள் அருகில் வந்ததும் பிரகாஷ் தயங்கிக் கொண்டே அவன் கையில் ஐம்பத்தைந்து ரூபாய் கொடுத்து டோக்கன் வாங்கிக் கொண்டு "வெள்ளை" என்றான்.

டோக்கன்காரன் நகர்ந்ததும் "நாம் சொன்ன நிறத்தில் அம்பு தைக்கவில்லை என்றால் நம் முகம் மாறப் போகும் நிறம் அதுதான்" என்று கிண்டலடித்தான் பக்கத்தில் இருந்தவன்.

பிரகாஷும் சிரித்து விட்டான். அவன் உரிமையாக பழகுவது பிரகாஷுக்குப் பிடித்திருந்தது.

"ஊத்திக்கிச்சு சார்" என்ற குரல் கேட்டு திடுக்கிட்டு பலகையின் பக்கம் பார்த்தான். அம்பு கருப்பு நிற கட்டத்தில் தைத்திருந்தது. பிரகாஷ் சூட் ஆசாமியைப் பார்த்தான். அவன் முகம் சந்தோஷத்தால் மலர்ந்திருந்தது. அவன் கருப்பு நிறத்தின் மீது பெட் கட்டியிருந்தான். இரண்டாவது அம்பு வீசப்பட்டது. அதுவும் கருப்பு நிறத்தில்தான் பதிந்தது.

இருவரின் முகங்களும் வெளிறிவிட்டன. "வாங்க சார் போகலாம். இனி காத்திருக்க வேண்டியதில்லை" என்றான் அவன்.

பிரகாஷுக்கு வருத்தமாக இருந்தது, தன்னை நம்பி அவன் பணத்தை இழந்து விட்டானே என்று. சூட் ஆசாமி மூன்றாவது அம்பு வீசினான்.

திடீரென்று பிரகாஷின் முகம் மலர்ந்தது. வெள்ளை நிற கட்டத்தில் அம்பு குத்தியிருந்தது. பக்கத்தில் இருந்தவனும் மகிழ்ச்சியில் துள்ளிக் குதித்தான்.

"இனி பெட் கட்ட வேண்டாம். கிளம்புவோம்" என்றான் பிரகாஷ்.



டோக்கனை மாற்றிக் கொண்டு நூற்றிப்பத்து ரூபாயை பெற்றுக்கொண்டு வெளியே வந்தார்கள்.

"ரொம்ப தாங்க்ஸ் சார். கடந்த மூன்று நாட்களில் இருநூறு ரூபாய் வரையில் விட்டேன்" என்றான்.

"இதில் நான் செய்தது என்ன இருக்கு. ஏதோ பிசினர்ஸ் லக்" என்றான் பிரகாஷ்.

அதற்குள் மணி அடிக்கும் சத்தம் கேட்டது. "வாங்க. ஒரு ஷோ பார்த்துவிட்டு போகலாமே" என்றான் அவன்.

பிரகாஷுக்குப் புரியாவிட்டாலும் மௌனமாக அவனைப் பின் தொடர்ந்தான். பிரகாஷ் டிக்கெட்டுகளை வாங்கப் போனபோது தடுத்துவிட்டு அவனே வாங்கினான். இருவரும் டெண்டுக்குள் நுழைந்தார்கள்.

உள்ளே சின்ன மேடை இருந்தது. திரையால் மறைக்கப்பட்டிருந்தது. ஹால் ஏறத்தாழ நிரம்பியிருந்தது. சற்று நேரத்தில் நிகழ்ச்சி தொடங்கியது. அதை நாட்டியம் என்று சொல்ல முடியாது. முதலில் கழுத்தில் மத்தளத்தைத் தொங்கப் போட்டுக் கொண்டு குதித்துக் கொண்டே ஒருவன் மேடை மீது தோன்றினான். அவனுக்குப் பின்னால் இரண்டு பெண்கள் குட்டை பாவாடையும் ரவிக்கையுமாக வந்தார்கள். அவர்களுக்கு வயது முப்பதுக்குக் குறையாது. முகத்தில் திட்டு திட்டாக அரிதாரம் பூசியிருந்தார்கள். பாட்டு போடப்பட்டது. பாட்டுக்குத் தகுந்தாற்போல் மூவரும் டான்ஸ் ஆடினார்கள்.

பாட்டின் பல்லவியைக் கேட்டதும் "எங்கேயோ கேட்டாற்போல் இருக்கே" என்றான் பிரகாஷ்.

அவன் சிரித்துவிட்டு ஒரு சினிமாவின் பெயரை குறிப்பிட்டு "இந்தப் பாட்டு அதில் வருவதுதான்" என்றான்.

கூர்ந்து கேட்கும் போது பிரகாஷுக்கு மறைந்திருந்த அர்த்தம் புரியத் தொடங்கியது. "இவ்வளவு ஆபாசமாக இருக்கே" என்றான்.

பார்வையாளர்களிடமிருந்து விசில் சத்தம் அதிகரித்தது. பிரகாஷ் ஸ்டேஜ் பக்கம் பார்வையைத் திருப்பினான். பாட்டின் வேகத்திற்கு தகுந்தாற் போல் இரு பெண்களும் வேகமாக சுழன்றபடி ஆடிக் கொண்டிருந்தார்கள். அப்படி ஆடும் போது அவர்களுடைய உடையும் காற்றில் பறந்து கொண்டிருந்தது. பிரகாஷ் சங்கடமாக இருக்கையில் நெளிந்தான். டான்ஸை விட பின்னால் ஒலிக்கும் பாட்டை சகித்துக் கொள்வது இன்னும் அருவருப்பாக இருந்தது. மக்களின் மனம் இப்படி திசை மாறிப் போவானேன்?

திடீரென்று பக்கத்தில் இருந்தவன் பிரகாஷின் கையைப் பற்றி எழுந்துகொண்டே "வாங்க சீக்கிரம்" என்றான். மேற்கொண்டு பேசவும் வாய்ப்பு தராமல் ஏறத்தாழ இழுத்துக் கொண்டு வெளியே வந்தான். அதற்குள் ஹாலுக்குள் அல்லகல்லோலம் ஏற்பட்டது. எல்லோரும் கும்பலாக ஒரே சமயத்தில் வெளியேற நினைத்ததில் கூச்சலும், குழப்பமும் ஏற்பட்டன. இருவரும் ஒரு நிமிஷம் முன்னாடி கிளம்பிவிட்டதால் சுலபமாக வெளியேற முடிந்தது.

வெளில் வந்து பார்த்தவன் திகைத்துப் போய் விட்டான். சுற்றிலும் போலீசார் லட்டியால் அடித்தபடி கைக்கு அகப்பட்டவர்களை வேனில் ஏற்றிக் கொண்டிருந்தார்கள். எங்கும் ரகளையாக இருந்தது.

"இந்தப் பக்கமாக வாங்க" என்றபடி டெண்டுக்கு பின் பக்கமாக அழைத்துச் சென்றான். ஒரே இருட்டு. இரண்டு நாட்களுக்கு முன்னால் மழை பெய்ததில் தரை முழுவதும் சேறாக இருந்தது.



"கவனமாகத் தாண்டுங்க. முள் வேலி இருக்கு" என்றான் அவன். பிரகாஷும் தாண்டிக் குதித்தான். இருவரும் சற்று தூரம் நடந்து விட்டு நிம்மதியாக மூச்சு விட்டுக் கொண்டார்கள்.

"நாம் எங்கே இருக்கிறோம்?" பிரகாஷ் கேட்டான்.

"சினிமா ஹாலின் பின்புறம்." அவனுக்கு இன்னும் மூச்சு இரைத்துக் கொண்டிருந்தது.

"என்னதான் நடந்தது?" பிரகாஷ் கேட்டான்.

"அவன் லைசென்ஸ் வாங்கியிருக்க மாட்டான். இது போன்ற விஷயங்களில் போலீஸாரின் கையில் மாட்டினால் முன்பின் விசாரிக்கமாட்டார்கள். நூறோ, இருநூறோ தண்டம் அழுதால் தவிர விட மாட்டார்கள்" என்றான்.

சினிமா ஹாலைவிட்டு வெளியே வந்தார்கள்.

"இது போன்றவற்றுக்கு அரசாங்கம் லைசென்ஸ் கூட தருமா?" வியப்புடன் கேட்டான் பிரகாஷ்.

"இது போன்ற விஷயங்களில் அரசாங்கம் கண்டும் காணாதது போல் இருக்கும்."

இருவரும் பெட்டிக் கடை அருகில் வந்தார்கள். "சிகரெட் பிடிப்பீங்க இல்லையா" என்று கேட்டபடியே" வில்ஸ் பாக்கெட் ஒன்று" கடைக்காரனின் சொன்னான். பணம் கொடுப்பதற்காக சட்டைப் பையைத் தடவிக் கொண்டே "அடடா" என்றான்.

"என்ன விஷயம்?" பிரகாஷ் பதட்டத்துடன் கேட்டான்.

பேண்ட் பேக்கட்டுகளையும் தேடிக் கொண்டே, "பர்ஸ் காணும். எங்கேயோ விழுந்துவிட்டது போலியிருக்கு" என்றான்.

பிரகாஷ் மேலும் பதட்டமடைந்து "சரியா பாருங்க" என்றான்.

கடைக்காரன் சிகரெட் பேக்கட்டை நீட்டிக் கொண்டே "எவ்வளவு பணம் வெச்சிருந்திங்க சார்?" என்று விசாரித்தான்.

"கிட்டத்தட்ட நூறு ரூபாய்க்கு மேல் இருக்கும்."

சிகரெட் பேக்கெட்டுக்கு பிரகாஷ் பணம் கொடுத்து விட்டான்.

"சாரி. நீங்க கொடுக்கும்படியாக ஆகிவிட்டது" என்றான் அவன்.

"பரவாயில்லை. நாம் வந்த வழியில் போய் பார்த்தால் கிடைக்குமோ என்னவோ" என்று திரும்பப் போனான்.

அவன் தடுத்து விட்டான். "இந்த இருட்டில் எங்கே என்று தேடுவோம்? இந்நேரம் எவன் கையிலேயாவது கிடைத்திருக்கும் போகட்டும் விடுங்க."

பணம் தொலைந்து போனாலும் அவன் பதட்டப் படாமல் இருந்தது பிரகாஷுக்கு வியப்பாக இருந்தது. அதை உணர்ந்தவன் போல் அவன் முறுவலித்தான். "இதில் வருத்தப்பட என்ன இருக்கு? ஆட்டத்தில் இழந்தோம் என்று நினைத்துக் கொள்ள வேண்டியதுதான்" என்றான்.

"உண்மைதான் என்றாலும் எல்லோராலும் உங்களைப் போல் இந்த விஷயத்தை இவ்வளவு லேசாக எடுத்துக் கொள்ள முடியாது" என்றான் பிரகாஷ்.



"இனி அந்த விஷயத்தை மறந்து விடுவோம். மறுபடியும் இங்கேயே சந்தித்துக் கொள்வோம். நீங்க எங்கே வேலை பார்க்கறீங்களோ சொல்லவே இல்லையே?" என்று கேட்டான்.

அதுவரையில் அறிமுகப்படுத்திக் கொள்ளவில்லை என்பதை உணர்ந்து, "என் பெயர் பிரகாஷ். இன்கம்டாக்ஸ் ஆபீஸில் வேலை பார்க்கிறேன். நீங்க?" என்றான்.

"என் பெயர் கோபாலஸ்வாமி. லேபர் சைக்காலஜியில் ரிசெர்ச் செய்து வருகிறேன்" என்றான் அவன்.

* * *

மறுநாள் காலையில் ஏழு மணிக்கு விழிப்பு வந்தது பிரகாஷுக்கு. வழக்கமாக ஆறு மணிக்கே விழிப்பு வந்து விடும். ஆனால் உடனே எழுந்து கொள்ளமாட்டான். காலை வேளையில் வேறு வேலை எதுவும் இல்லாதது போல் திண்ணையில் அமர்ந்து கொண்டு தெருவில் நடமாடும் மக்களை வேடிக்கை பார்க்கும் மாமா, வேலைக்காரி பத்து பாத்திரம் தேய்க்கும் சத்தம், தூசி நிறைந்த சூழ்நிலை. இந்தக் காட்சிகளை எல்லாம் பார்க்க அவனுக்கு விருப்பம் இல்லை.

பிரகாஷ் அறையை விட்டுவெளியே வந்ததும் சீதா எதிரே வந்தாள். "அத்தான்! கிரோஸின் தீர்ந்து விட்டது. கடைக்குப் போய் வாங்கி வரணும்" என்றாள்.

திடீரென்று பிரகாஷை சோர்வு ஆட்கொண்டது. காலையில் எழுந்ததும் காபி குடித்துக்கொண்டே பேப்பரை படித்துவிட்டு, நிம்மதியாக குளித்துச் சாப்பிட்டு விட்டு நிதானமாக ஆபீசுக்குப் போகணும் என்பது அவனுடைய விருப்பங்களில் ஒன்று. நடுத்தரக்

குடும்பத்தில் பிறந்த குற்றத்திற்காக அதுவும் தகுதிக்கு மிஞ்சிய விருப்பமாகிவிட்டது.

அவன் முகத்தில் தென்பட்ட மாற்றத்தை கவனித்த சிதா "காமாட்சி வீட்டிலும் கேட்டு விட்டேன். அவர்கள் வீட்டிலும் இல்லையாம்" என்றாள்.

"திரும்பத் திரும்ப அவர்களிடம் கடன் கேட்பது. நன்றாக இருக்காது. கடைக்குப் போகிறேன்." பிரகாஷ் சொன்னான்.

கிரோஸின் வாங்குவதற்கு கேனை எடுத்துக் கொள்ளும் போது "அப்படியே அரிசியும் வாங்கிக் கொள்ளுங்கள். கொஞ்சமாகத்தான் இருக்கு" என்று பையை நீட்டினாள் சிதா.

நேற்று இரவு கையில் இருந்த பணத்தை சிகரெட்டுக்காக கொடுத்தது நினைவுக்கு வந்தது "அவ்வளவு பணம் என்னிடம் இருக்காதே" என்றான்.

சிதா பையைக் கீழே வைத்துவிட்டு "அப்பாகிட்டே இருக்கோ என்னவோ. கேட்டுப் பார்க்கிறேன்" என்று உள்ளே போனவள் உடனே திரும்பு வந்தாள். "அவரிடமும் இல்லையாம்."

பிரகாஷுக்கு எரிச்சலாக இருந்தது. இந்தப் பெண்கள் ஏன் இவ்வளவு பொறுப்பு இல்லாமல் இருக்கிறார்கள்? மாதக் கடைசியில் பணம் பற்றாக்குறை இருக்கும் போது அப்படியாவது அந்த சினிமாவுக்கு போகாவிட்டால் என்ன?

திடீரென்று அவனுக்கு இன்னொரு எண்ணம் தோன்றியது. தான் மட்டும் நேற்று காஸினோவுக்குப் போவானேன்? பிரச்னைகளிலிருந்து தப்பித்துக்



கொள்ளும் நோக்கம்தானே. பிரச்னைகள் வாழ்க்கையில் ஒரு பகுதியாக மாறிவிட்ட பிறகு ரொம்ப பாதிக்காதோ என்னவோ. கிரோஸின் இல்லாமல் போவது, பிடித்த சினிமா பார்க்க நினைக்கும் போது கையில் காசு இல்லாமல் போவது, கூட வேலை பார்க்கும் குப்புசாமி ஒவ்வொரு நாளும் புதுப் புது சட்டையில் வருவது... எல்லாமே பிரச்னைகள்தான். வாழ்க்கையுடன் பிணைந்து விட்ட பிரச்னைகள். நடுத்தர வர்க்கத்திற்கே உண்டானவை. இவர்கள் பிரச்னையிலிருந்து எப்படி விடுபடுவது என்று யோசிக்கமாட்டார்கள். எப்படித் தள்ளிப் போடுவது என்று தான் யோசிப்பார்கள். மாதக் கடைசியாக இருக்கும் போது சிதா சினிமாவுக்கு போனதும், தான் காஸினோவுக்குப் போனதும் அப்படித்தான். இதில் அவளைக் குறை சொல்ல எதுவும் இல்லை.

டின்னையும், பையையும் எடுத்துக் கொண்டு ரேஷன் கடைக்குத் கிளம்பினான். அரிசிக்குப் பணம் போறாது என்றாலும் மளிகைக் கடையில் கடன் சொல்லிக் கொள்ளலாம் என்று நினைத்தான். ரேஷன் கடையின் முன்னால் நின்றிருந்த மக்கள் வரிசையைப் பார்த்ததும் அவனுக்கு சோர்வு ஏற்பட்டது. க்யூ ரொம்ப நீளமாக இருந்தது. போய் கடைசியில் நின்று கொண்டான். முன்னால் நின்று கொண்டிருந்தவன் கையில் டிரான்ஸிஸ்டருடன் நின்றிருந்தான்.

காலை வெயிலாக இருந்தாலும் கசகசவென்று இருந்தது. டிரான்ஸிஸ்டரில் பாட்டு முடிந்து விளம்பரங்கள் ஒலிக்கத் தொடங்கின.

"டிங் டிங்... குருவி பிராண்ட் டூத் பேஸ்டை மட்டுமே பயன்படுத்துங்கள்."

"டிங் டாங்... இந்தியாவிலேயே சிறந்த ஜவுளிக்கடை எங்களுடையதுதான்."

பிரகாஷுக்கு தலைவலி வரும் போல் இருந்தது. நல்ல வேளையாக அவனே ஆஃப் செய்து விட்டான். க்யூ மெதுவாக நகர்ந்தது.

வாசையில் இருக்கும் எல்லோருக்கும் கிரோஸின் கிடைக்குமா? ரேஷன் கடைகள் இருப்பதே பொருட்கள் எல்லோருக்கும் சமமாக கிடைக்க வேண்டும் என்பதற்காகத்தானே.

தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்து தங்களுக்கு வேண்டியதை யூனியன் மூலமாக சாதித்துக் கொள்கிறார்கள். இளைஞர்கள் தலைமுடி வளர்ப்பதிலும், புதுப்புது ஃபேஷன்களைத் தேடுவதிலும் மூழ்கியிருக் கிறார்கள்.

உண்மையிலேயே நலிந்து போகிறவன் சராசரி மனிதன்தான். இதற்கு தீர்வுதான் என்ன? புரட்சி வந்தால் தான் இந்த சமுதாயம் சீர்படுமோ என்னவோ. பிரகாஷுக்கு சிரிப்புதான் வந்தது. ரேஷன் கடை க்யூவில் நின்று கொண்டு புரட்சி பற்றி யோசிப்பதாவது?

கடைவாசலில் ஏதோ ரகளை சத்தம் கேட்டதும் நிமிர்ந்து பார்த்தான். கஸ்டமர் ஒருத்தன் கடைக்காரனுடன் சண்டை போட்டுக் கொண்டிருந்தான். பிரகாஷுக்கு எரிச்சலாக இருந்தது. மேலும் தாமதமாகி விடுமோ என்ற எண்ணம்தான் மேலோங்கியது.

யாரோ நடுவில் புகுந்து சமாதானப்படுத்த முயன்றார்கள். ஆனால் பலன் இருக்கவில்லை. பார்த்துக் கொண்டிருக்கும் போதே சண்டை அதிகரித்து விட்டது. வரிசையில் நின்றுகொண்டிருந்தவனை விட்டு விட்டு நடுவில் வந்தவனுக்கு மண்ணெண்ணையை ஊற்றி விட்டானாம். அதுதான் தகராறு.



"நடந்தது நடந்துவிட்டது. இனியாவது கொடுக்கத் தொடங்கினால் இந்நேரம் எல்லோருக்கும் கிடைத்திருக்கும் இல்லையா?" யாரோ சொல்லிக் கொண்டிருந்தார்கள்.

உண்மைதான் என்றாலும் அநியாயத்தை சகித்துக் கொள்ளும் பொறுமை நம் இரத்தத்திலேயே ஊறி விட்டதோ.

"அடடா. என்ன இது?"

யாரோ கத்தியதைக் கேட்டு அந்தப் பக்கம் பார்த்தான். கடைக்காரன் ஷட்டர்களை இறக்கிக் கொண்டிருந்தான்.

"என்ன தம்பீ? எங்களுக்கெல்லாம் கிரோஸின் கொடுக்க வேண்டாமா?" யாரோ கேட்டுக் கொண்டிருந்தார்கள். கடைக்காரன் எதுவும் பேசாமல் பூட்டிவிட்டு கிளம்பி விட்டான்.

"போலீஸில் புகார் கொடுக்கணும்."

"கடைக்காரனே முன் கூட்டி கம்பிளைண்ட் தருவான்."

"நடுவில் புகுந்து வாங்கிக் கொண்டவனுக்கு புத்தியிருக்க வேண்டாமா? இத்தனை பேர் வரிசையில் நிற்கும் போது அவனுக்கு மட்டும் என்ன அவசரம்?"

"அந்த மாதிரி யோசித்தால் பிரச்னையே இருக்காதே" நொந்து கொண்டே வெறுங்கையுடன் வீட்டுக்கு வந்தான் பிரகாஷ். வாசற்படி ஏறும்போது அரிசி இல்லை என்று சீதா சொன்னது நினைவுக்கு வந்தது. மளிகைக் கடைக்காரனிடம் கடன் சொல்லி வாங்கி வரலாம் என்று எண்ணியிருந்தான். கையில் இருக்கும் பணத்தை செலவு

செய்துவிட்டால் இன்னும் மூன்று நாட்களை எப்படி தள்ளுவது?

சீதாவிடம் வெறும் பையைத் தந்து விட்டு, "எனக்கு நேரமாகி விட்டது. ஆபீசுக்குக் கிளம்புகிறேன்" என்றான்.

"பின்னே சாப்பாடு?" வியப்புடன் கேட்டாள் சீதா.

"வெளியில் பார்த்துக் கொள்கிறேன்." கையில் இருந்த சில்லறைப் பணத்தை அவளிடம் கொடுத்துவிட்டு, "இதுதான் இருக்கு. இன்னிக்கு எப்படியாவது சமாளித்துக் கொள்" என்றான்.

சீதா பணத்தை வாங்கிக் கொண்டு உள்ளே போய் விட்டாள். பிரகாஷ் உடைகளை மாற்றிக் கொண்டு ஆபீசுக்குக் கிளம்பினான். யார் மீது என்று தெரியாத எரிச்சல். மாலை வரையில் எதுவும் சாப்பிடக்கூடாது என்ற வைராக்கியம்.

* * *

CHN
CHN431035
6036840
CHN431035

# 4

காலை பதினோரு மணி ஆகி விட்டது. வேலையில் மூழ்கி விட்டதால் பிரகாஷுக்கு பசி தெரியவில்லை. தான் செய்யும் வேலையைப்பற்றி அவனுக்கு இப்பொழுது தான் புரியத் தொடங்கியது.எல்லாமே பொய்க் கணக்கு வழக்குகள்.போகஸ் ரிடர்ன்ஸ்.

"உங்களுக்கு ஃபோன் வந்திருக்கு சார்." ப்யூன் வந்து சொன்னதும் எழுந்து போய் ரிசீவரை எடுத்துக் கொண்டு "ஹலோ" என்றான்.

மறுமுனையிலிருந்து உடனே பதில் வரவில்லை.

பிரகாஷ் எரிச்சல் கலந்த குரலில், "பிரகாஷ் ஹியர். யாரு பேசறீங்க?" என்றான்.

"நான்தான் சுஜாதா."

மிருதுவான குரல் கேட்டது. ரிசீவரை பற்றியிருந்த அவன் கை இறுகியது. ஒரு வினாடி பேசவில்லை.

"ஹலோ!" சுஜாதா சொன்னாள்.

"ஊம். சொல்லு."

இந்த முறை அந்தப் பக்கம் மௌனம் பரவியது. பிரகாஷ் அடிமனதில் இனம்புரியாத சந்தோஷம்.

"ஒரு முறை எங்கள் வீட்டுக்கு வரமுடியுமா பிரகாஷ்." சுஜாதாவின் குரலில் வேண்டுகோள் கலந்திருந்தது.

"சாரி." தன்னையும் அறியாமல் சொன்னான். "என்னை வற்புறுத்தாதே."

"அப்படிச் சொல்லாதே ப்ளீஸ். உள்ளே கூட வர வேண்டாம். என்னிடம் பேசவும் வேண்டாம். எங்கள் வீட்டின் முன்னாலிருந்து நடந்து போனால் கூட போதும். ஒருமுறை உன்னைப் பார்க்கணும். அவ்வளவுதான்."

அவள் குரலில் தென்பட்ட நேர்மை அவனை நெகிழ்த்தி விட்டது. சுஜாதா இவ்வளவு தீவிரமாக நேசிக்கும் அளவுக்கு தன்னிடம் தனித்தன்மை எதுவும் இல்லை. அந்த விஷயம் தனக்கும் தெரியும். பின்னே இந்த அன்பின் அர்த்தம்தான் என்ன? முதல் காதல்!

தனக்கு அந்த அனுபவம் கிடைக்க வாய்ப்பு இருக்க வில்லை. ஏன் என்றால் பதினெட்டு வருடங்களுக்கு முன்பே தனக்கும் சீதாவுக்கும் திருமணம் நிச்சயிக்கப் பட்டுவிட்டது. சுஜாதா இப்பொழுது இருக்கும் நிலைக்கு தன்னைவிட அழகும், அந்தஸ்தும் இருக்கும் பலபேரை சந்தித்திருப்பாள். அப்படியும் தன்னை நேசிக்கிறாள் என்றால் முதல் காதலின் பாதிப்பு அவள் மீது எந்த அளவுக்கு இருக்கிறதோ புரிந்துகொள்ள முடியும்.

"ஹலோ... ஹலோ..." மறுமுனையில் கேட்டது.

"ஊம்" தெளிவற்ற குரலில் சொன்னான்.

"மாலையில் பால்கனியில் நின்றுகொண்டு உன் வருகைக்காக காத்திருப்பேன். வருவாய் இல்லையா." ஃபோனை வைத்து விட்டாள்.

பிரகாஷும் ரிசிவரை வைத்து விட்டான். நெற்றியில் படிந்த வியர்வையை கைக்குட்டையால் ஒற்றிக் கொண்டே தன்னுடைய மேஜை பக்கம் பார்த்தவன்



தேவநேயப் பாவாணர் மாவட்ட மைய நூலகம் சென்னை - 600 002

அதிர்ச்சி அடைந்தவன் போல் அப்படியே நின்று விட்டான்.

எதிரே இருந்த நாற்காலியில் அமர்ந்து, விரல்களுக்கு நடுவில் பேப்பர் வெயிட்டை சுழற்றிக் கொண்டிருந்த பொன்னம்பலம் இவனையே பார்த்துக் கொண்டிருந்தார்.

* * *

431035/6036846

"அதுதான் விஷயம்." சொல்லி முடித்தார் பொன்னம்பலம்.

பொங்கி வரும் கோபத்தை அடக்கிக் கொண்டே "முடியாது என்று எத்தனை தடவை சொல்லுவது? எனக்கும் சில கொள்கைகள் இருக்கு. சட்டத்திற்கு மாறாக என்னால் எதுவும் செய்ய முடியாது." என்றான் பிரகாஷ்.

"இது ரொம்ப சின்ன காரியம். நீங்க அந்த பேப்பரை ஃபைலிலிருந்து எடுத்துவிட்டால்..."

"மறுபடியும் அதே பாட்டுத்தானா. ஐ யாம் சாரி." பிரகாஷ் எழுந்து நின்றுகொண்டான். "இனி நீங்க போகலாம்."

பொன்னம்பலம் முறுவலித்துவிட்டு எழுந்து கொண்டார். "மறுபடியும் சந்திப்போம்."

ஐந்து நிமிடங்களுக்குப் பிறகு பிரகாஷுக்கு மேலதிகாரியிடமிருந்து செய்தி வந்தது, பொன்னம்பலம் சம்பந்தப்பட்ட ஃபைலை அனுப்பச் சொல்லி.

அனுப்பி வைத்தான். அவனுக்குத் தெரியும் என்ன நடக்கும் என்று.

அரை மணி நேரம் கழித்து ஃபைல் அவனிடம் திரும்பி வந்தது. அந்த பேப்பர் அதில் இருக்கவில்லை.

பிரகாஷுக்கு யார் மீதும் கோபம் வரவில்லை. தன் மீதே வெறுப்பு. கல்மிஷம் நிறைந்த இந்த மனிதர்களிடமிருந்து விலகி தொலைதூரம் போய்விட வேண்டும் என்ற தவிப்பு.

மதியம் லஞ்ச் நேரத்தில் வீட்டுக்கு வந்தான். காலையில் செய்துகொண்ட தீர்மானம் அவனுக்கு நினைவு இருக்கவில்லை.

வீட்டுக் கதவுகள் திறந்துதான் இருந்தன. சீதாவும், காமாட்சியும் அடுத்த அறையில் பேசிக் கொண்டிருந்தார்கள். ஹால் நடுவில் மாமா குறட்டை விட்டபடி தூங்கிக் கொண்டிருந்தார். அவன் வந்ததை யாரும் கவனிக்கவில்லை. அதில் புதுசு ஒன்றுமில்லை. தினமும் நடப்பதுதான்.

கிணற்றடிக்குச் சென்று கைகால்களை அலம்பிக் கொண்டு வந்து தட்டை போட்டுக் கொண்டான். பாத்திரங்களைத் திறந்து பார்த்தபோது பாகற்காய் கறியும், கொட்டுரசமும் இருந்தன. அவன் பசி காணாமல் போய் விட்டது. கொஞ்சமாக சாப்பிட்டுவிட்டு எழுந்து கொண்டான். மறுபடியும் சட்டையை மாட்டிக் கொள்ளும் போது உள் அறையில் தன் பெயர் அடிபடுவதை கேட்டு ஆர்வத்துடன் கேட்கத் தொடங்கினான்.

"நாளைக்கு உனக்கு எத்தனை வயது முடிகிறது?" காமாட்சி கேட்டுக் கொண்டிருந்தாள்.

"பதினெட்டு."

"பிறந்த நாள் பரிசாக அத்தான் உனக்கு என்ன தரப் போகிறார்?"

"நான் இருக்கிற இருப்புக்கு பரிசு ஒன்றுதான் குறைச்சல்."



"அதென்ன? உங்க அத்தான் பார்க்கும் வேலையில் மேல் வரும்படி நன்றாக கிடைக்குமே."

"போதுமே. அவ்வளவு சாமர்த்தியம் இருந்தால் பிரச்னையே இல்லையே. எதற்கும் கொடுத்து வைத்திருக்கணும்."

பிரகாஷின் முகம் வெளிறி விட்டது. நல்ல பண்புக்கும், இயலாமைக்கும் இடையே உள்ள வித்தியாசம் எவ்வளவு சிறியது? பொன்னம்பலத்திடம் தான் சொன்னது நினைவுக்கு வந்தது "கொள்கைக்கு மாறாக எதுவும் செய்ய மாட்டேன்."

கொள்கை என்றால் அர்த்தம்தான் என்ன? தன்னுடைய கொள்கை வருங்கால மனைவியின் பார்வையில் இயலாதவனாக தன்னை உருவகப்படுத்தியிருக்கிறது. சுஜாதாவைப் பற்றிய யோசனைகளை தன்னால் கட்டுப் படுத்த முடியவில்லையே. இது எந்த கொள்கையில் சேர்த்தி?

காமாட்சியின் குரல் மீண்டும் ஒலித்தது. "அத்தானே உனக்குக் கணவனாக வரப்போகிறார். அதுவே உனக்கு பரிசுதான். சினிமா ஹீரோ போன்ற அழகும்... பர்சனாலிடியும்."

"எதிர்வீட்டு போர்ஷனில் குடியிருக்கும் சரவணன் உன் கடைக்கண் பார்வைக்காக சுற்றிச் சுற்றி வருகிறான். கொஞ்சம் தயவு காட்டித்தான் பாரேன். கல்யாணமும் செய்து கொள்பவனாய் இருக்கும். ரஜினிகாந்த் ஸ்டைலில் அடிக்கடி தலையை சிலுப்பிக்கொண்டே இருப்பான்."

"அம்மாடியோவ்! அம்மாவுக்குத் தெரிந்தால் என்னைக் கொன்று போட்டுவிடுவாள்." காமாட்சியின் குரலில் பயம் வெளிப்பட்டது.

இந்தப் பெண் காதல் விவகாரத்தில் ஈடுபடாமல் இருப்பதற்குக் காரணம் சமுதாயக் கட்டுப்பாடுகள், கணவனைத் தவிர வேறு ஆணை நினைக்கக் கூடாது என்ற பண்பு.. இவை எதுவும் இல்லையா? பெற்றோர் கோபித்துக் கொள்வார்கள் என்ற பயம் மட்டும்தானா?

பிரகாஷுக்கு சிரிப்பு வரவில்லை. அருவருப்புதான் ஏற்பட்டது. காமாட்சியின் மீது இல்லை. பெண் இனத்தின் மீதே.

* * *

லஞ்சுக்கு பிறகு மதியம் ஆபீசுக்கு வந்த பிரகாஷ் வேலை எதுவும் செய்யவில்லை. காமாட்சியின் வார்த்தைகள் திரும்பத் திரும்ப நினைவுக்கு வந்து கொண்டிருந்தன. மாலையில் சுஜாதாவின் வீட்டுப் பக்கம் போவதா வேண்டாமா என்ற தயக்கம்.

கடைசியில் போக வேண்டாம் என்று முடிவு செய்தான். போனால் என்ன நடந்துவிடும்? மனப் போராட்டம் மேலும் அதிகரிக்கும். காதல் தரும் வேதனை —அதனால் ஏற்படும் வருத்தம் வேறு எந்த விஷயத்திலும் இருக்காது.

வரும் வரையில் இன்னும் வரவில்லையே என்ற வேதனை, வந்த பிறகு பிரிய வேண்டுமே என்ற வருத்தம். காதல் என்றால் இதுதானோ.

* * *

மாலை ஐந்து மணி ஆகிவிட்டது. ஃபைல்களை உள்ளே வைத்து விட்டு பிரகாஷ் எழுந்து கொண்டான். வெளியே வரும்போது கேட் அருகில் பொன்னம்பலம் நின்று கொண்டிருப்பது தென்பட்டது. கேட்டை நெருங்கும் போது அவனுக்காகவே காத்திருந்தது போல் "வாங்க போகலாம்" என்றார்.



"எங்கே?" பிரகாஷ் வியப்புடன் கேட்டான்.

"வீடுவரையிலும் கொண்டு விடுகிறேன்."

"தேவையில்லை. நானே போய்க் கொள்கிறேன். உங்க வேலைதான் காலையிலேயே முடிந்து விட்டதே."

பொன்னம்பலம் சிரித்தார். "என்னுடைய வேலைக்கும் இதுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை. சும்மா ஒரு நண்பனாக உங்களை அழைக்கிறேன்" என்றார்.

இனியும் பிகு செய்துகொண்டால் நன்றாக இருக்காது என்று நினைத்து காரில் ஏறிக் கொண்டான். கார் கிளம்பியது. நேற்று இதே நேரத்தில் இதே காரில் இருந்தான். ஒரே நாளில் எத்தனை அனுபவங்கள்?

பிரகாஷின் யோசனைகளை சிதறடிப்பது போல் பொன்னம்பலம் சொன்னார். "உங்களைப் பார்த்தால் எனக்கு பொறாமையாக இருக்கு மிஸ்டர் பிரகாஷ்."

பிரகாஷ் குழப்பத்துடன் பார்த்தான்.

"ஆமாம். ஏன் என்றால் பதினைந்து வருடங்களுக்கு முன்னால் நானும் உங்களைப் போலவே அப்பாவியாக, நிம்மதியாக வாழ்ந்து வந்தேன்."

பிரகாஷ் பொன்னம்பலத்தின் பக்கம் கூர்ந்து பார்த்தான். முகம் முழுவதும் அம்மைத் தழும்புகள். அதிகமாக சிகரெட் பிடிப்பதால் கறுத்துப் போன இதழ்கள். ஆனால் அவருடைய பேச்சில் ஏதோ ஸ்திரத்தன்மை தென்பட்டது.

"அனுபவங்கள் மனிதனை எவ்வளவு சீக்கிரமாக மாற்றிவிடுமோ— நானே ஒரு உதாரணம். இப்போ என் வயது ஆகும் வரையில் நானும் உங்களைப் போலவே

சில கொள்கைகளுக்கு கட்டுப்பட்டு இருந்தேன். ஆனால் கனவுலகிலேயே எத்தனை நாள் வாழ முடியும்? என் திறமையை மற்றவர்களை ஏமாற்றுவதில் பயன்படுத்தினேன். பத்து வருடங்களில் நிறைய பணம் சம்பாதித்து விட்டேன். இதில் சந்தோஷம் இருக்கிறதா என்று மட்டும் கேட்காதீங்க. நிச்சயமாக இல்லை. அதான் உங்களைப் பார்த்தால் பொறாமையாக இருக்கு என்று சொன்னேன். ஆனால் நீங்க இப்போ இருக்கும் நிலையிலேயே வாழ்நாள் முழுவதும் கழிக்க வேண்டி வந்தால் அதை விட மோசமான நிலைமை வேறு இருக்க முடியாது. வாழ்க்கையில் நீங்க முன்னுக்கு வரணும். அதுதான் என்னுடைய விருப்பம். காலையில் நீங்க சொன்னீங்களே கொள்கை என்று. அது உங்க மனதிற்கு சம்பந்தப்பட்டது. செயல்களுடன் அதை பிணைக்கத் தேவையில்லை. அதுதான் இரட்டை மனப்பான்மை."

பிரகாஷ் வியப்புடன் அவரையே பார்த்துக் கொண்டிருந்தான். ரொம்ப சாதாரணமாக தென்படும் இந்த வியாபாரியிடம் இவ்வளவு சைக்கோ அனலிடிகல் அறிவு இருக்கிறதா?

"கொள்கைகளை நம்பி எத்தனை நாள் நீங்க வாழ்ந்து விட முடியும்? அப்படி வாழ்வதால் உங்களுக்கு என்ன கிடைத்து விடப் போகிறது?"

"ஆத்ம திருப்தி." சட்டென்று சொன்னான்.

பொன்னம்பலம் சிரித்தார். "நானும் என் மனைவியும் காரில் சினிமாவுக்கு போன போது அதே காட்சிக்கு நீங்களும் மனைவியுடன் வந்திங்க என்று வைத்துக் கொள்வோம். மீட்டருக்கு மேல் கேட்ட ஆட்டோக்காரனுடன் சண்டை போட்டுவிட்டு டிக்கெட்டுக்காக க்யூவில் வந்து நிற்கிறீங்க. காரில் வந்ததில் களைத்துப் போன



என் மனைவி குளிர்பானம் அருந்திக் கொண்டிருப்பாள். சாதாரண நைலக்ஸ் புடவையில் டிக்கெட்டுகள் கிடைக்குமோ கிடைக்காதோ என்று கவலைப்பட்டுக் கொண்டு வெயிலில் நிற்கும் உங்கள் மனைவிக்கு ஷிபான் புடவையில், பணத்தினால் வந்த செழுமையுடன் நளினமாக காட்சி தரும் என் மனைவியைப் பார்க்கும் போது ஒரு நிமிடமாவது பொறாமையாக இருக்காதா? அந்தச் சூழ்நிலையிலும் உங்களுக்கு கொள்கைதான் நினைவுக்கு வருமா? உண்மையைச் சொல்லுங்கள்" ஒரு நிமிடம் நிறுத்தி விட்டு மீண்டும் தொடர்ந்தார் "விரக்தியிலிருந்து பிறக்கும் வேதாந்தம் அவ்வளவு நல்லது இல்லை மிஸ்டர் பிரகாஷ்! இப்போ உங்களுக்கு வயது இருபத்தினாலு. இன்னும் நிறைய வாழ்க்கை பாக்கியிருக்கிறது. அனுபவியுங்கள்."

காரை ஒரு ஓரமாக நிறுத்தினார். "மிஸ்டர் பிரகாஷ்! உங்களை ஏனோ எனக்கு ரொம்ப பிடித்துவிட்டது. நான் எப்படி இருக்கணும்னு நினைத்தேனோ அது போல் நீங்க இருப்பதும் ஒரு காரணமாக இருக்கலாம். ஆனால் வாழ்க்கையில் எல்லாம் அனுபவித்த பிறகு இப்படி இருப்பது வேண்டுமானால் நன்றாக இருக்கும். இளமையில் அல்ல." இயல்பான குரலில் சொன்னார்.

பிரகாஷ் காரை விட்டு இறங்கும் போது பொன்னம்பலம் அவன் கையில் ஒரு கவரை வைத்துக் கொண்டே, "நாளைக்கு எங்களுடைய திருமண நாள். பார்ட்டிக்குக் கட்டாயம் வரணும்" என்று அழைத்தார்.

பிரகாஷ் ஏதோ சொல்லப் போனான். ஆனால் பொன்னம்பலம் அவனை பேசவிடவில்லை. "மறுக்காதீங்க. ஒரு நண்பனாக உங்களையும் அழைக்கிறேனே தவிர உங்களிடம் எனக்கு காரியம் ஆகணும் என்பதற்காக

இல்லை" காரை ஸ்டார்ட் செய்து கொண்டே, "அந்த கவரில் பணம் வைத்திருக்கிறேன். உங்களை அவமானப் படுத்துவதாக நினைக்க வேண்டாம். ஏதோ என் சந்தோஷத்திற்காக. வரட்டுமா" என்றார்.

பிரகாஷ் வாய் திறந்து ஏதோ சொல்வதற்குள் கார் கிளம்பிப் போய்விட்டது. அவன் சிலையாக அப்படியே நின்று விட்டான்.

* * *

"குமார் ஸ்பீக்கிங்."

"எப்படி இருக்கீங்க ஆடிட்டர்?" பொன்னம்பலம் கேட்டார்.

"நீங்களா! ஐயாம் ஃபைன். தாங்க்யூ."

"என்ன விசேஷம்? மாலை நேரத்தில் வீட்டில் இருக்கீங்க?"

"சும்மாதான்."

"இருபத்தி ஐந்து வயதில் மாலை நேரத்தில் வீட்டில் இருக்கீங்க என்றால் இனி நீங்க திருமணம் செய்து கொண்டு விடலாம்." உரத்தக் குரலில் சிரித்தார் பொன்னம்பலம்.

குமாரும் சிரித்தான்.

"விஷயத்திற்கு வருகிறேன். அந்த இன்கம்டாக்ஸ் ஆபீஸில் பிரகாஷ் என்ற கிளார்க் பற்றிச் சொன்னது நினைவு இருக்கா?"

"நினைவு இருக்கு. போன காரியம் முடிந்ததா?"



"அதுதான் சொல்ல வந்தேன். என்னுடைய வேலை மேலதிகாரி லெவலில் முடிந்து விட்டது. ஆனால் அந்த கிளார்க் பாவம், புதிதாக வேலையில் சேர்ந்திருக்கிறான் போலிருக்கு. ரொம்ப ஸ்மார்ட் ஆக இருக்கிறான். ஆனால் இவ்வளவு அப்பாவியாக இருப்பவனை நான் எங்கேயும் பார்த்தது இல்லை. நீங்களும் அவனைச் சந்தித்தால் நன்றாக இருக்கும். கதை எழுதுவதில் உங்களுக்கு உபயோகமாக இருக்கும். ஃப்ரீயாக இருந்தால் வாங்களேன். எனக்கும் கம்பெனி கொடுத்தாற்போல் இருக்கும்."

"கடைத் தெருவரையில் போகணும். ஷாப்பிங் வேலை இருக்கு."

"என்ன விசேஷம்?"

"நாளைக்கு உங்களுக்கு திருமண நாள் இல்லையா. பரிசு வாங்கத்தான்." குமார் சொன்னான்.

* * *

இரத்தம் முழுவதும் வற்றிவிட்டாற்போல் பிரகாஷின் முகம் வெளிறிப் போய்விட்டது. அவன் கையிலிருந்த கவர் நலிந்து போய்க் கொண்டிருந்தது. ஏதோ மயக்கத்தில் இருந்தவன் போல் நடந்துகொண்டிருந்தான்.

எல்லோரும் பார்த்துக் கொண்டிருக்கும் போது இந்த கவரை எடுத்து பொன்னம்பலத்தின் மீதே வீசினால் என்ன? சுற்றிலும் இருந்த மக்கள் தன்னுடைய நேர்மையை பாராட்டுவது போலவும், தான் பெருமையுடன் தலை நிமிர்ந்து நிற்பது போலவும், தொலைவில் நின்றபடி சுஜாதா கண்களை அகலமாக விரித்து தன்னை வியப் புடன் நோக்குவது போலவும் காட்சி கண் முன்னால் ஓடியது.

சட்டென்று அவன் எண்ணங்கள் தடைப்பட்டன. தான் நேர்மையாக இருக்க நினைப்பது மக்களின் பாராட்டுக்களை பெறுவதற்காகத்தானா? முக்கியமாக சுஜாதாவைப் பற்றிய எண்ணம் தன் மனதில் வருவானேன்?

தன்னால் சிகரெட் பிடிக்காமல் இருக்க முடியும். சீட்டாட்டத்தின் ஜோலிக்கு போகாமல் இருக்க முடியும். ஆனால் சீதா அருகில் இல்லாதபோது வேண்டுமென்றே புடவைத் தலைப்பை நழுவவிடும் காமாட்சியின் உடற் கட்டை ரசிக்காமல் இருந்திருக்கிறானா? சக ஊழியர்கள் தங்களுக்குள் பலான பெண்களை பற்றி பேசிக் கொள்ளும் போது காதுகளை தீட்டிக்கொண்டு கேட்காமல் இருந்திருக் கிறானா? அந்த இடங்களுக்கெல்லாம் தான் போக மாட்டான். அது வேறு விஷயம். ஆனால் விஷயம் தெரிந்து கொள்ளும் ஆர்வத்தை தன்னால் கட்டுப்படுத்திக் கொள்ள முடியவில்லையே. அப்படிப் போகிறவர்கள் எல்லாம் ஒழுக்கம் கெட்டுப் போனவர்கள். தான் மட்டும் இந்த விஷயங்களுக்கெல்லாம் அப்பாற்பட்டவன், நேர்மை யானவன்.

ஒழுக்கமின்மையின் அளவுகோல் உடல் மட்டும் தான் என்றால் தான் தூய்மையானவன். மனதாலும் என்றால் தான் எப்பொழுதோ நெறி தவறிவிட்டான். இந்த விஷயத்தில் மாமாவே பரவாயில்லை. அவருக்கு எது வேண்டுமோ கூச்சப்படாமல் அனுபவிப்பார். அதில் எந்த விதமான மனப் போராட்டமோ, தயக்கமோ அவருக்கு இல்லை. யோசித்துப் பார்த்தால் அப்படிப்பட்டவர் களால்தான் வாழ்க்கையை சந்தோஷமாக அனுபவிக்க முடியும் என்று தோன்றியது.



தன்னையும் அறியாமல் மெயின் ரோட்டுக்கு வந்து விட்டதை உணர்ந்தான். உடனே வீட்டுக்குப் போய் செய்ய வேண்டியது எதுவும் இல்லை என்பதால் கடைத்தெரு வழியாக நடக்கத் தொடங்கினான்.

யதேச்சையாக பேண்ட் ஜேபியில் கையை விட்டவ னுக்கு தூக்கிவாரிப் போட்டது. கவர் இருக்கவில்லை. எவனோ பிக்பாக்கெட் அடித்து விட்டான். பதட்டத் துடன் சட்டைப் பையில் பார்த்தபோது கவர் இருந்தது. நிம்மதியாக மூச்சு விட்டுக் கொண்டான். எப்படியும் திருப்பிக் கொடுத்து விடணும் என்று எண்ணியிருந்த போது கவர் காணவில்லை என்று பதட்டப் படுவானேன்? நினைக்க நினைக்க அவனுக்குச் சிரிப்பு தான் வந்தது.

கவரில் எவ்வளவு பணம் இருக்கிறதென்று திறந்து பார்த்தால் என்ன என்று தோன்றியது. அந்த சின்ன தூண்டுதல் போதும், உள் மனிதன் வெளியில் வருவதற்கு.

திறந்து பார்த்த போது புதிய ஐநூறு ரூபாய் நோட்டு ஒன்று இருந்தது. மறுபடியும் உள்ளே வைத்துவிட்டான். வேடிக்கை என்னவென்றால் இந்த முறை அவன் மனம் முன் போல் கொதித்தெழவில்லை. புயலுக்கு பின் வரும் அமைதியை போல் நிதானமாக யோசிக்கக் கூடிய நிலை.

திடீரென்று அவனுக்கு ஒரு எண்ணம் வந்தது. நாளைக்கு பொன்னம்பலத்தின் திருமண விழாவுக்கு தான் போவதாக இருந்தால் பரிசு ஏதாவது வாங்கிக் கொள்ளணும். இந்தப் பணத்தில் பரிசு வாங்கித் தந்து விட்டால் பிரச்னை தீர்ந்தது. தனக்கும் மன உளைச்சல் இருக்காது. இந்த எண்ணம் வந்தது நிம்மதியாக உணர்ந்தான்.

அதற்குள் இன்னொரு விஷயமும் நினைவுக்கு வந்தது. நாளைக்கு சீதாவுக்கு பிறந்த நாள். அவளுக்கு ஏதாவது வாங்கித் தந்தால்? சீதா மதியம் காமாட்சியிடம் பேசியது அவன் மனதில் ஆழமாகப் பதிந்து விட்டது. தான் கையாலாகாதவன் இல்லை என்பதை நிரூபிக்க வேண்டாமா? நாளைக்கு முதல் தேதி. இந்தப் பணத்தில் சீதாவுக்கு வாங்கிவிட்டால், நாளைக்கு சம்பளப் பணம் கிடைத்ததும் அவர்களுக்கு பரிசு ஏதாவது வாங்கிக் கொண்டு போகலாம்.

மறுநாள் பிரகாஷ் அவர்களுக்குச் சரியாக ஐநூறு ரூபாய்க்கு பரிசுப் பொருள் வாங்கினானா இல்லையா என்ற கேள்வி அனாவசியம். மனிதன் எப்படி கொஞ்சம் கொஞ்சமாக மாறிவிடுகிறான் என்பதற்கு இது ஒரு எடுத்துக்காட்டு. அவ்வளவுதான்.

நேராக ஜவுளிக் கடைக்குள் நுழைந்தான். புடவையைத் தேர்வு செய்ய அதிக நேரம் எடுத்துக் கொள்ளவில்லை. வெள்ளை நிறத்தில் ஷிபான் புடவை. புடவையை கையில் எடுத்து பரிசீலித்துக் கொண்டிருந்த போது "என்ன விலை?" என்ற குரல் பக்கத்தில் கேட்டது. திரும்பிப் பார்த்தான்.

வெள்ளை ஷர்ட்டும், டையுமாக இதழ்களில் தவழும் முறுவலுடன் நின்றுகொண்டிருந்த நபரைப் பார்த்ததும் "குமார்!" என்றான் பிரகாஷ். அவன் குரலில் வியப்பு வெளிப்பட்டது.

நண்பனின் தோளில் கையைப் பதித்துக் கொண்டே "இந்த ஊரில்தான் இருக்கிறாயா?" குமார் கேட்டான்.

"ஆமாம். இன்கம்டாக்ஸ் ஆபீஸில் வேலை பார்க்கிறேன்."



"நானும் இங்கேதான் பிராக்டீஸ் செய்து வருகிறேன். உன்னை இத்தனை நாள் சந்திக்காமல் இருந்தது வேடிக்கைதான்." பொன்னம்பலம் குறிப்பிட்டது தன்னுடைய நண்பனைப் பற்றிதான் என்று குமாருக்கு புரிந்து விட்டது.

"நான் இந்த வேலையில் சேர்ந்து ரொம்ப நாள் ஆகவில்லை" என்றான் பிரகாஷ்.

"சரி. புடவையை வாங்கிக் கொள். வெளியில் போய் பேசிக் கொள்வோம். கல்யாணம் எப்போ செய்து கொண்டாய்?"

"இன்னும் ஆகவில்லை."

"முன்னாடியே பரிசுகளை கொடுத்து நல்ல பெயர் வாங்கும் உத்தேசமோ?" குமார் கிண்டலடித்தான்.

பிரகாஷின் முகம் கன்றி சிவந்து விட்டது. இருவரும் ஜவுளிக் கடையை விட்டு வெளியே வந்தார்கள்.

"சற்று நேரம் எங்கேயாவது உட்கார்ந்து கொள்வோமா?" குமார் கேட்டான்.

"நானும் அதைத்தான் சொல்ல நினைத்தேன்."

இருவரும் கார் அருகில் வந்தார்கள். காரில் ஏறி உட்கார்ந்துகொண்டே "கார் புதிதாக இருக்கே? மாமனார் வாங்கித் தந்ததா?" பிரகாஷ் கேட்டான்.

குமார் சிரித்துவிட்டான். "எனக்கும் திருமணம் ஆகவில்லை. பிராக்டீஸ் தொடங்கிய போது உபயோகமாக இருக்கும் என்று அப்பாதான் பரிசாகக் கொடுத்தார்."

கார் நிதானமாக போய்க் கொண்டிருந்தது.

"வயதில் என்னை விட பெரியவன். வாழ்க்கையில் ஓரளவுக்கு செட்டிலும் ஆகிவிட்டாய். இன்னும்

கல்யாணம் செய்து கொள்ளாமல் இருப்பானேன்?" பிரகாஷ் கேட்டான்.

"என் மனசுக்கும் எனக்குமே இன்னும் ஒத்துப் போக வில்லை. அதற்குள் திருமணம் எதுக்கு?"

பிரகாஷ் தலையைத் திருப்பிப் பார்த்தான். அழகன் என்று சொல்ல முடியாவிட்டாலும் குமாரின் கண்களில் தென்படும் அறிவுச்சுடர், இதழ்களில் தவழும் முறுவல், அவன் அருகாமையில் கிடைக்கும் மகிழ்ச்சி... எல்லாமாக சேர்ந்து அவனுடைய தனித்தன்மையை எடுத்துக் காட்டுவது போல் இருந்தன.

"என்ன யோசிக்கிறாய்?" குமார் கேட்டான்.

பிரகாஷ் திடுக்கிட்டவனாய் "ஒன்றுமில்லை" என்றான்.

"திடீரென்று மௌனமாகிவிட்டாயே. அதான் கேட்டேன்" என்றான் குமார்.

"ஏனோ சில சமயம் மௌனமாக யோசித்துக் கொண்டிருக்கணும் போல் தோன்றும்" பிரகாஷ் சொன்னான்.

குமார் சிரித்துவிட்டு "எதைப்பற்றி?" என்றான்.

பிரகாஷுக்கு உடனே பதில் சொல்லத் தெரிய வில்லை.

"உற்சாகமாக இருப்பவர்கள் எல்லா விஷயங் களையும் கூர்ந்து கவனிப்பார்களாம். கம்பீரமாக இருப்பவர்கள் குறுகிய மனம் படைத்தவர்களாக இருப்பார்களாம். எங்கேயோ படித்த நினைவு." குமார் சொன்னான்.



உண்மைதானோ என்று தோன்றியது பிரகாஷுக்கு. எந்த சின்ன விஷயத்திற்கும் ரொம்ப யோசித்து மனப் போராட்டத்தில் நலிந்து போகும் சுஜாதா, குமார் போன்றவர்களின் வாழ்க்கை சந்தோஷமாக இருக்கிறதா? இல்லையே. வேடிக்கை என்னவென்றால் தன்னைப் போன்றவர்களின் வாழ்க்கையிலும் சந்தோஷம் இல்லை.

அவன் எண்ணங்களை தடுப்பதுபோல் கார் ஒரு பார் முன்னால் நின்றது.

"இங்கேயா?" பிரகாஷ் வியப்புடன் கேட்டான்.

"இங்கே காபியும் கிடைக்கும். கவலைப்படாதே." கார் கதவைச் சாத்திக் கொண்டே சொன்னான் குமார்.

இருவரும் உள்ளே நுழைந்தார்கள். மங்கலான வெளிச்சத்தில் ஆங்காங்கே கையில் கண்ணாடி டம்ளருடன் மனிதர்கள் தென்பட்டார்கள். வெள்ளைச் சீருடையில் கஸ்டமர்களை உபசரிக்கும் வெயிட்டர்கள்.

"வா இப்படி உட்கார்ந்துகொள். இதுதான் முதல் முறையாக பாருக்கு வருகிறாயா?" குமார் கேட்டான்.

பிரகாஷ் தலையை அசைத்தான்.

"எப்படி இருக்கு?"

பிரகாஷ் உடனே பதில் சொல்லவில்லை. பிறகு சொன்னான். "ரொம்ப அருவருப்பாக இருக்கு. மக்கள் ஏன் இப்படி எஸ்கேபிஸ்ட்களாக இருக்கிறார்களோ தெரியவில்லை."

"நன்றாக யோசித்துச் சொல்லு. பழக்கமில்லாத புதிய சூழ்நிலை. அதனால் ஏற்பட்ட பயத்திற்கு அருவருப்பு என்ற பெயர் சூட்டுகிறாயோ என்னவோ."

"பயம் இல்லை. அருவருப்புதான். மனிதர்கள் ஏன் இப்படி சீர்கெட்டுப் போகிறார்கள்?" பிரகாஷ் சொன்னான்.

அதற்குள் வெயிட்டர் வந்தான்.

"அரிஸ்டோகிராட் ஒரு பெக், சோடா, சிப்ஸ்" என்று ஆர்டர் கொடுத்துவிட்டு "உனக்கு" என்று கேட்டான்.

"கோகோ கோலா."

வெயிட்டர் போய்விட்டான்.

"அவ்வளவு சிக்கிரமாக ஒரு முடிவுக்கு வந்துவிடாதே. எஸ்கேபிஸ்டுகள் என்று சொன்னாயே. அதை நான் ஒப்புக் கொள்ள மாட்டேன். ஏன் என்றால் இங்கே வந்திருக் கிறவர்களில் பாதி பேரை எனக்குத் தெரியும்."

"குடிப்பழக்கம் பணத்திற்கு, உடல் நலத்திற்கும் கேடு தானே."

குமார் சிரித்தான். "அதோ. அந்த சோபாவில் கோட் சூட்டில் இருக்கிறாரே, ந்யூக்ளியர் ஃப்யூயல் காம்ப்ளெக் ஸில் புரொபஸராக இருக்கிறார். பகல் முழுவதும் அவ்வளவு சீரியஸாக வேலை பார்ப்பார். மாலையில் இப்படி ரிலாக்ஸ் ஆகவில்லை என்றால் மூளையில் நரம்புகள் வெடித்து இறந்து போனாலும் ஆச்சரியப்பட வேண்டியது இல்லை. பகல் முழுவதும் உடலை வருத்தி ரிக்ஷா ஓட்டும் ரிக்ஷாக்காரனுக்கும் இதே நியதிதான்."

"ஆனால்..." பிரகாஷ் ஏதோ சொல்லப்போனான்.

"அவசரப்பட்டு ஒரு முடிவுக்கு வந்து விடாதே. வாழ்க்கையில் ஒரு முறையாவது குடித்திருக்கிறாயா?"

"இல்லை."



"பின்னே இதில் சந்தோஷம் இல்லை என்று உன்னால் எப்படி சொல்லமுடியும்?"

பிரகாஷ் பதில் சொல்லவில்லை.

குமார் மேலும் சொன்னான். "நீ சொன்னது முற்றிலும் தவறு என்று நான் சொல்லவில்லை. அதோ அங்கே பாரு. தளர்ந்து போன உடற்கட்டை மேல்பூச்சுகளால் மறைத்து ஆண்களில் பலவீனத்தை காசாக்கிக் கொள்ள முயற்சி செய்யும் நடன மங்கையர்கள்."

பிரகாஷுக்கு காமாட்சியின் நினைவு வந்தது. பதினாறு வயதில் உடலும், உள்ளமும் தூய்மையாக இருக்க வேண்டிய பிராயத்தில் அவள் மனம் வேறு விதமான அனுபவங்களை விரும்புவானேன்? ஒரு பெண் இளைஞன் ஒருவனிடம் மணிக்கணக்காக பேசிக் கொண்டிருந்தாலும் அதில் எந்த தவறும் இல்லை என்று நினைக்கும் சுபாவம். அவளுடைய கண்ணோட்டத்தில் கற்பு என்பது உடல் அளவில் நிகழும் விஷயம் மட்டும் தான்.

"என்ன யோசிக்கிறாய்?" குமார் கேட்டான்.

"நீ சொன்ன விஷயத்தைப் பற்றித்தான்."

"இதில் யோசிக்கும் அளவுக்கு ஒன்றுமே இல்லை. என் அனுபவத்தைச் சொன்னேன். அவ்வளவுதான்."

வெயிட்டர் எல்லாவற்றையும் கொண்டு வந்து வைத்து விட்டுப் போனான். ஸ்டீரியோவில் மெலிதாக பாட்டு ஒலித்துக் கொண்டிருந்தது.

"இந்த உலகிலேயே ரொம்ப துரதிர்ஷ்டசாலி யாரு தெரியுமா? பத்து பேருக்கு நடுவில் இருக்கும் போது தனிமை வேண்டும் என்று நினைப்பவன், தனிமையில்

இருக்கும்போது பத்து பேர் வேண்டும் என்று தவிப்பவன்." சிகரெட்டை எடுத்து பிரகாஷிடம் நீட்டிக்கொண்டே குமார் சொன்னான்.

"ஊஹூம். பழக்கமில்லை."

"ஒரே ஒரு சிகரெட் பிடித்தால் என்ன ஆகிவிடும்?"

"எனக்கு சுயக்கட்டுப்பாடு இல்லை. பழக்கமாகி விட்டால் கஷ்டம்." பிரகாஷ் மறுத்தான்.

குமார் மேலும் வற்புறுத்தாமல் கண்ணாடி டம்ளரை உயர்த்தி "சியர்ஸ்" என்றான்.

* * *

# 5

அதற்குள் ஹாலில் சலசல வென்று ஓசை எழும்பியது. ஒரு பக்கமாக இருந்த மேடையின் மீது வெளிச்சம் விழுந்தது. அந்த வெளிச்சத்தில் பாம்பு போல் நெளிந்து கொண்டே ஒரு பெண் நாட்டிய மாடத் தொடங்கினாள். பின்னால் வாத்திய இசை உச்சஸ்தாயியில் ஒலித்துக் கொண்டிருந்தது.

பிரகாஷ் ஆர்வத்துடன் அந்தப் பக்கமே பார்த்துக் கொண்டிருந்தான்.

"பிரகாஷ்!" குமார் அழைத்தான்.

திடுக்கிட்டுத் திரும்பினான் பிரகாஷ். குமார் தன்னுடைய ஆர்வத்தை கவனித்து விட்டிருக்கக் கூடும் என்ற கூச்சம் அவனை ஆட்கொண்டது.

குமார் முறுவலுடன் நண்பனின் கையை அழுத்தினான். "இதில் இவ்வளவு கில்டியாக ஃபீல் பண்ண வேண்டிய அவசியம் இல்லை. இந்த அளவுக்காவது ஆர்வம் இல்லை என்றால் வாழ்க்கையே வியர்த்தம்."

பிரகாஷின் முகம் வெட்கத்தினால் மேலும் சிவந்தது.

"அந்தந்த வயதில் அனுபவிக்க வேண்டியதை அந்த வயதில் அனுபவித்தால்தான் அழகு." குமார் குரலில் திடீரென்று வருத்தம் வெளிப்பட்டது. "இந்த விஷயத்தில் நான் ரொம்ப துரதிர்ஷ்டசாலி. சிறு வயது முதல் ரொம்ப மோசமான சூழ்நிலையில் வளர்ந்து வந்தேன். என் தந்தை எவ்வளவு கயவன் என்றால் மகளைத் தேடிக் கொண்டு வீட்டுக்கு வரும் சினேகிதிகளை கூட விட்டு வைக்க

மாட்டார். குணத்திலும், நடத்தையிலும் பாதை மாறிப் போன தாய். என் தங்கை அப்படியே அம்மாவைக் கொண்டிருந்தாள். இவர்களை எல்லாம் பார்த்துப் பார்த்து வளர்ந்து வந்ததில் உலகத்தின் மீதே எனக்கு வெறுப்பு ஏற்பட்டுவிட்டது. பதிமூன்று வயதிலேயே சிகரெட் பிடித்தேன். பதினாறு வயதில் குடியும், சீட்டாட்டமும் சேர்ந்து கொண்டன. ஆனால் இவை எதுவும் பழக்கமாக தொடராமல் இருப்பதற்குக் காரணம் வளர்ந்து வந்த சூழ்நிலையின் மீது எனக்கு இருக்கும் வெறுப்பு."

"அவ்வளவு வெறுப்பவன் இவற்றை முற்றிலும் துறந்து விட்டிருக்கலாம் இல்லையா?" பிரகாஷ் கேட்டான்.

"என்றாவது அதில் மகிழ்ச்சி கிடைக்கக் கூடும் என்ற பலவீனம்தான். உலகையே மறந்து போகும் அளவுக்கு குடி மயக்கத்தில் ஆழ்ந்து போகிறவர்களைப் பார்த்தால் எனக்கு பொறாமையாக இருக்கும். ஏன் என்றால் அந்த நிலையை என்னால் என்றைக்குமே அடைய முடியாது. குடி வரைக்கும் போவானேன்? சிகரெட்டை புகைப்பதில் மற்றவர்களுக்கு கிடைக்கும் மகிழ்ச்சி எனக்கு கிடைத்த தில்லை. இதை புகைத்தால் உண்மையிலேயே மகிழ்ச்சி கிடைக்குமா என்ற சந்தேகம் மனதைத் துளைத்துக் கொண்டே இருந்தால் அதில் இருக்கும் சந்தோஷத்தை எப்படி அனுபவிக்க முடியும்?

மனதில் ஏற்பட்ட அதிருப்தியை போக்கிக் கொள் வதற்காக நண்பர்களுடன் ஊரைச் சுற்றினேன். நள்ளிரவு வரையில் பார்களில் குடித்துவிட்டு, லாட்ஜில் பணம் கொடுத்து ஒரு மணி நேரம் அந்த சுகத்தையும் அனுபவித்து இப்படியே ஒரு வருடம் கழிந்துவிட்டது. ஆனால் இதிலே யும் எனக்கு மகிழ்ச்சி கிடைக்கவில்லை. மறுபடியும் தனிமை என்னை ஆட்கொண்டது.



இந்த நிலையிலிருந்து என்னை நானே மீட்க முயற்சி செய்தேன். புத்தகங்களை படிக்க ஆரம்பித்தேன். கீட்ஸ் முதல் பாரதியார் வரை எல்லோருடைய படைப்பு களையும் படித்தேன். நமக்கு என்று ஏதாவது ஒரு ரசனை இருப்பது ரொம்ப நல்லது. யாரையாவது காதலிக்கணும். மல்லிகையின் தூய்மையை, ரோஜா மலரின் மென்மையை மாலையாக கோர்த்து அவள் என் கையில் கொடுக்க வேண்டும் என்றும், செயற்கையான இந்தச் சூழலை மறந்து விட்டு அவள் மடியில் இளைப்பாற வேண்டும் என்றும் தவித்தேன். எவ்வளவு சின்ன விருப்பம் இது?

அந்த நாட்களில் ஒரு பெண்ணுடன் அறிமுகம் ஏற்பட்டது. பெயர் அவ்வளவு முக்கியம் இல்லை. அந்தப் பெண்ணிடம் என் கனவு சுந்தரியை அடையாளம் காணத் தொடங்கினேன். அகலமான கண்கள், தங்கப் பதுமை போன்ற தோற்றம். ரொம்ப அழகாக இருந்தாள். நாள் ஆக ஆக எங்கள் அறிமுகம் வளரத் தொடங்கியது. என் கனவுகளை, ரசனைகளை அவளிடம் சொல்ல வேண்டும் என்றும் பகிர்ந்துகொள்ள வேண்டும் என்றும் தவித்தேன். கனவுகளில் ஊகித்துக்கொண்ட அனுபவம் யதார்த்தத் திற்கு வரும் போது சில சமயம் ஏமாற்றம்தான் மிஞ்சும்.

என்னுடைய படிப்பு முடிந்து விட்டது. அப்பாவுக்கு இருந்த செல்வாக்கினால் என் பிராக்டீஸ் சீக்கிரமாகவே சூடு பிடிக்கத் தொடங்கிவிட்டது. கொள்கைகளுக்கும், வாஸ்தவத்திற்கும் எவ்வளவு வேறுபாடு இருக்கிறது பார்த்தாயா? அப்பாவை அவ்வளவு தூரத்திற்கு வெறுக் கும் நான், வாழ்க்கையில் முன்னேறுவதற்காக அவரிடமே உதவி பெற வேண்டியதாகி விட்டது. எனக்கு இருக்கும் தகுதிக்கு ஏதாவது வேலை கிடைக்காமல் போகாது. ஆனால் இந்த பங்களா, கார் இதெல்லாம் இருக்காது.

வாழ்க்கையில் ஒவ்வொரு கட்டத்திலும் சமாதானமாகப் போக வேண்டிய கட்டாயம்.

தொடக்கத்தில் அவளுடைய நட்பு நன்றாகத்தான் இருந்தது. நாள் ஆக ஆக ஏதோ அதிருப்தி. 'இவள் எதற்காக என்னை காதலிக்கிறாள்? திருமணம் ஆகாமல் ஒரு ஆணுடன் இப்படி பழகுவது தவறு இல்லையா?'

அவளுடன் மனம் விட்டுப் பேச வேண்டும் என்ற என் விருப்பம் நிறைவேறும் தருணம் வந்தது. நண்பன் ஒருவன் உதவி செய்தான். தன்னுடைய அறையின் சாவியை என்னிடம் தந்தான்.

* * *

கதவைச் சாத்தியதும் நான் அவளையே பார்த்துக் கொண்டிருந்தேன். பௌர்ணமி இரவில், காவேரி நதியின் மீது படகில் பயணம் செய்யும் போது கிடைக்கும் சந்தோஷம் ஒன்றே போதும், வாழ்க்கையை நிம்மதியாக கழித்து விட முடியும்.

"என்ன யோசிக்கிறாய்?" படுக்கையின் மீது ஒய்யாரமாக சாய்ந்துகொண்டே கேட்டாள். "வெறுமே பார்த்துக் கொண்டே நேரத்தை கழித்து விடப் போகிறாயா?" செல்லமாக கோபித்துக் கொண்டாள்.

மேலும் ஒரு அடி முன்னால் வைத்தேன். விளக்கை அணைப்பதற்காக அவள் கை நீண்டது. தடுத்து விட்டேன். விளக்கை அணைத்து விட்டால் என்ன இருக்கும்? வெறும் இருட்டு.

இந்த உலகத்தில் உள்ள வேதனையை, வருத்தங்களை எல்லாம் மறந்து போய் அவளுடைய அணைப்பில்



நிம்மதியாக ஓய்வு எடுத்துக் கொள்ளப் போகிறேன். இந்த உதவியை செய்ததற்காக வாழ்நாள் முழுவதும் தான் அவளுக்கு நன்றிக்கடன் பட்டிருப்பேன். தன் இதய சிம்மாசனத்தின் மீது அவளை அமரவைத்து, இணை பிரியாத தோழமையுடன்—

"ஒரு நிமிடம்." அவள் முறுவலுடன் சொன்னாள்.

"வேண்டாம். ஒரு நிமிடம் கூட உன் பிரிவை என்னால் தாங்கிக்கொள்ள முடியாது."

"ரொம்பவும் குறும்புக்காரனாக இருப்பீங்க போலிருக்கே." அவள் ஹேண்ட் பேக்கை திறந்து எதையோ எடுத்து அவன் உள்ளங்கையில் வைத்து மூடினாள்.

குழப்பத்துடன் பிடியைத் திறந்து பார்த்தான். காண்டோம் பாக்கெட்!

* * *

காரில் போகும் போது அவர்கள் இருவரும் ரொம்ப நேரம் பேசிக் கொள்ளவில்லை. பிரகாஷ் தன்னுடைய வீடு இருக்கும் இடத்தைச் சொன்னான். குமார் காரை அந்தப் பக்கம் ஓட்டினான்.

"நிறுத்து நிறுத்து" என்றான் பிரகாஷ். காரை ஒரு ஓரமாக நிறுத்தினான் குமார். "அதுதான் எங்க வீடு." பிரகாஷ் சுட்டிக் காட்டிக்கொண்டே இறங்கினான்.

"போய் வருகிறேன். நாளை மறுபடியும் சந்திப்போம். பொன்னம்பலம் வீட்டில் எப்படியும் சந்தித்துக் கொள்ளப் போகிறோமே. உனக்கு ஒரு விஷயம் தெரியுமா? சுஜாதா நினைவு இருக்கிறாளா?"

பிரகாஷ் திடுக்கிட்டாற்போல் பார்த்தான்.

"நம் கிளாஸ்மேட் சுஜாதாதான் பொன்னம் பலத்தின் மனைவி."

பிரகாஷ் மௌனமாக இருந்தான்.

"மனதில் தோன்றியதை பேசிவிட்டேன். அதைப் பற்றி எல்லாம் யோசித்து மனதை குழப்பிக் கொள்ளாதே. வரட்டுமா?" காரை முன்னோக்கி செலுத்தினான் குமார்.

இரவு பத்து மணியாகி விட்டது. தெரு முழுவதும் ஆளரவமற்று இருந்தது. பிரகாஷ் கதவை தன் பக்கம் இழுத்ததும் மேலே போட்டிருந்த போல்ட் கீழே விழுந்தது. கதவைத் திறந்துகொண்டு உள்ளே போனான். முன் அறையில் மாமாவும், சீதாவும் படுத்திருந்தார்கள். கதவைத் திறந்த சத்தம் கேட்டு சுவாமிநாதன் புரண்டு படுத்தார். பிரகாஷ் தன்னுடைய அறைக்குச் சென்று புடவையின் பாக்கெட்டை மேஜை மீது வைத்துவிட்டு உடைகளை மாற்றிக் கொண்டான். தானே எடுத்துப் போட்டுக் கொண்டு சாப்பிடும் போது அவனுக்கு அம்மாவின் நினைவு வந்தது.

★ ★ ★

"ஹலோ!" குமார் சொன்னான்.

"பொன்னம்பலம் ஹியர்."

"நான்தான் குமார்."

"இந்த இரவு வேளையில் ஃபோன் செய்கிறாயே. என்ன விசேஷம்?"

"அந்த கிளார்க் பிரகாஷ் யாரோ இல்லை. என்னுடன் காலேஜில் ஒன்றாகப் படித்தான். நெருங்கிய நண்பன்."



"அப்படியா." பொன்னம்பலத்தின் குரலில் வியப்பு தென்பட்டது. "ஐயம் சாரி. அவனைப் பற்றி உன்னிடம் கிண்டலாக பேசிவிட்டேன்." மன்னிப்பு கேட்டுக் கொள்வது போல் சொன்னார்.

"பரவாயில்லை. ஆனால் உண்மையிலேயே அவன் ஒரு அப்பாவி."

பொன்னம்பலம் ஒரு நிமிடம் மௌனமாக இருந்து விட்டு பிறகு சொன்னார். "அப்பாவியாக இருப்பது ஒரு தகுதி இல்லை. அப்படிப் பார்த்தால் இந்த உலகில் யாரையும் அப்பாவி என்று சொல்ல முடியாது. குடிப்பழக்கம் இல்லாதவனைப் பார்த்து இரக்கப்படக் கூடும். அப்பாவியாக இருந்தாலும், சீரழிந்து போனவனாக இருந்தாலும் தான் நம்பிய கொள்கையை ஸ்திரமாக கடைபிடிப்பவன் தான் உயர்ந்தவன். இரவு நேரத்தில் இந்த வேதாந்த சொற்பொழிவு எதற்கு? நாளைக்கு வருகிறாய் இல்லையா?"

"கட்டாயம்" என்றான் குமார்.

பொன்னம்பலம் ஃபோனை வைத்துவிட்டு, சுஜாதாவின் பக்கம் திரும்பினார். "உன் கிளாஸ் மேட் இன்னொருத்தன் நம் வீட்டு பார்ட்டிக்கு வரப் போகிறான்" என்றார்.

கையில் இருந்த ஃபிலிம் ஃபேர் பத்திரிகையிலிருந்து தலையை உயர்த்திய சுஜாதா "ஃபோன் செய்தது யாரு?" என்று கேட்டாள்.

"குமார்."

"புதிதாக வரப்போவது யாராம்?" என்று கேட்டாள்.

"அவன் பெயர் பிரகாஷாம். உனக்குத் தெரியுமா?" என்று கேட்டார்.

ஒரு நிமிடம் யோசித்தாள். "நிறைய பேர் இருந்தாங்க. இந்தப் பெயரில் யாரையும் நினைவு இல்லை" என்றாள்.

* * *

பிரகாஷ் உள்ளே வந்தது சுவாமிநாதனுக்குத் தெரியாது. ஆனால் சமையலறையில் சாப்பாடு பரிமாறிக் கொள்ளும் சத்தம் கேட்டதும் விழிப்பு வந்தது. வயதான பிறகு தூக்கமே கலைந்து போனால் மறுபடியும் உடனே உறக்கம் வராது.

சுவாமிநாதன் மெதுவாக படுக்கையை விட்டு எழுந்து கொண்டார். கொக்கியில் மாட்டியிருந்த சட்டையை எடுத்து மாட்டிக் கொண்டு ஓசைப்படுத்தாமல் கதவைத் திறந்து வெளியே இருளில் மறைந்து விட்டார்.

பிரகாஷ் நிதானமாக சாப்பிட்டுக் கொண்டிருந்தான். பசியாக இருந்ததால் ருசியாக இல்லாவிட்டாலும் சாப்பாடு உள்ளே போய்க் கொண்டிருந்தது. தான் சாப்பிடும் போது யாராவது பக்கத்தில் அமர்ந்து கொண்டு உணவு பரிமாற வேண்டும் என்பது அவனுடைய விருப்பங்களில் ஒன்று.

தன்னுடைய தாய் மட்டும் இன்று உயிரோடு இருந்தால்? சிறுவயதிலேயே தாய் இறந்து விட்டதால் இப்படி நினைக்கிறானோ. உயிரோடு இருந்தால் எப்படி இருந்திருப்பாளோ யாருக்குத் தெரியும்? குமார் பற்றிய நினைவு வந்தது. எல்லாம் இருந்தும் இல்லாத நிலை அவனுடையது. அவனுடன் ஒப்பிட்டால் தன்னுடைய நிலைமை எவ்வளவோ தேவலை.

சிதாவுக்கும் தனக்கும் திருமணம் ஆன பிறகு வாழ்க்கை எப்படி இருக்கும் என்று கற்பனை செய்து பார்த்தான்.



ஒரு நாள் இரவு தாமதமாக வீட்டுக்கு வருகிறான். கதவைத் தட்டியதும் சிதா ஓடி வந்து கதவைத் திறக்கிறாள்.

"இன்னும் தூங்கவில்லையா?" அவளுடைய சிவந்த கண்களைப் பார்த்துக் கொண்டே கேட்பான்.

தூக்கக் கலக்கத்துடன் நிமிர்ந்து பார்த்து முறுவலிப்பாள்.

"இதென்ன? நீ இன்னும் சாப்பிடவில்லையா?" இரண்டு தட்டுகள் போடப்பட்டிருப்பதை பார்த்துவிட்டு வியப்புடன் கேட்பான்.

"ஊஹூம்" தலையை குறுக்காக அசைப்பாள்.

"ஏன்?"

அந்தக் கேள்விக்கு பதில் இல்லை. உனக்காக, நீ என்னிடம் காட்டும் அன்பிற்காக, உன் அருகாமையில் எனக்குக் கிடைக்கும் நிம்மதியான உணர்வுக்காக. அந்த மௌனத்தில் இத்தனை அர்த்தங்கள் மறைந்திருக்கும்.

யோசனைகளுக்கு இடையில் சாப்பிட்டு முடித்து கையை அலம்பி கொண்டான். தன்னுடைய அறைக்கு வந்ததும் மேஜைமீது இருந்த பாக்கெட் தென்பட்டது. அதை எடுத்துக் கொண்டு முன் அறைக்கு வந்தான். ஜன்னல் வழியாக வந்து விழுந்த வெளிச்சம் அறை முழுவதும் பரவியிருந்தது. சிதா ஒருக்களித்து படுத்திருந்தாள்.

எழுப்பி புடவையை கொடுப்பதற்கு கூச்சமாக இருந்தது. எழுந்ததுமே கண்ணில் படுவது போல் வைத்து விட்டு அறைக்கு திரும்பினான். தொலைவில் எங்கேயோ பதினோரு மணி அடிக்கும் சத்தம் கேட்டது. படுக்கையில் படுத்துக் கொண்டவன் தலையைத் திருப்பிப் பார்த்தான். ஒரு மூலையில் தோய்க்க வேண்டிய துணிகளை போடும்

மரப்பெட்டி இருந்தது. அதன் மீது சரியாக மூடப்படாத டப்பாக்கள் இருந்தன. எலி ஒன்று குறுக்கே புகுந்து ஓடியது. துணிகளை உலர்த்தும் கொடியில் அவிழ்த்து போட்ட புடவைகள், உள்ளாடைகள் தாறுமாறாக தொங்கிக் கொண்டிருந்தன.

போர்வையை எடுத்துப் போர்த்திக் கொண்டான். கொசு ஒன்று காது அருகில் சுற்றிச் சுற்றி வந்தது. முகத்தையும் சேர்த்துப் போர்த்திக் கொண்டதால் மூச்சு முட்டியது. ஜன்னல் கதவைத் திறக்கவும் முடியாது. சாக்கடை நாற்றம். புரண்டு படுத்தான். தலையணைக்கு உறை இருக்கவில்லை. எண்ணெய் பிசுக்குடன் அருவருப்பை ஏற்படுத்தியது. திடீரென்று ஏமாற்றம் அவனை சூழ்ந்து கொண்டது. காரணம் தான் தெரிய வில்லை.

இன்னும் சில மாதங்களில் தனக்கும் சீதாவுக்கும் திருமணம் நடக்கும். இத்தனை நாளும் ஹாலில் படுத்துக் கொண்டிருப்பவள், இந்த அறைக்கு வந்து படுத்துக் கொள்வாள். அதுதான் வித்தியாசம். அழுக்கு உடைகள் தொங்கிக் கொண்டிருக்கும் இதே அறையில் அவளுடன் குடும்ப வாழ்க்கை நடத்துவான். அடுத்தடுத்து குழந்தைகள் பிறப்பார்கள். குழந்தைகள் கடவுளால் கொடுக்கப்பட்ட செல்வம் என்பதால் முற்றுப் புள்ளி வைக்க சீதா சம்மதிக்க மாட்டாள். தொடர்ந்து ஏற்பட்ட பிரசவங்களால் சீதாவின் உடல் பலவீனமடைந்துவிடும். பாலும், பழமும் வாங்கிக் கொடுக்கணும் என்று டாக்டர் சொல்லுவார். சின்னவனுக்கு மாறி மாறி ஏதாவது ஒரு நோய் படுத்திக் கொண்டே இருக்கும். பெரியவனை பள்ளியில் சேர்க்கணும். எல்லாவற்றுக்கும் பணம் வேண்டும்.

சம்பந்தமே இல்லாமல் ஏதேதோ யோசனைகள். சீதாவுடன் தன்னுடைய முதல் இரவு எப்படி இருக்கும்?



இதே அறைதான். அறை முழுவதும் பரவிய ஊதுபத்தியின் நறுமணம். தட்டில் இனிப்புகளுடன், தலையில் மல்லிகைப் பூவுடன் உள்ளே வந்தாள் சீதா. கதவு அருகிலேயே நின்று விடாமல் உள்ளே வந்ததும் கதவைச் சாத்திவிட்டு, "ரொம்ப புழுக்கமாக இருக்கு இல்லையா?" என்றாள். தான் வெறும் பார்வையாளனாக இருந்தான்.

"காமாட்சி வீட்டிலிருந்து டேபிள் ஃபேனை இரவல் வாங்கியிருக்கணும்." மன்னிப்பு கேட்பது போல் விளக்கம் தந்தாள் சீதா.

"சீதா! ஜன்னல் கதவை சரியாக சாத்திக்கொள்." வெளியே இருந்து யாரோ ஒரு மாமி குரல் கொடுத்தாள்.

சட்டென்று எழுந்து ஜன்னல் கதவை சாத்தப் போனான். தாழ்ப்பாளை போட முடியவில்லை. பலமாக அழுத்தி சாத்தப் போனான்.

"தாழ்ப்பாள் சரியாக இல்லை. அந்த கல்லை எடுத்து வையுங்க." பக்கத்திலேயே இருந்த கல்லை சுட்டிக் காட்டினாள்.

பிரகாஷின் நெற்றியில் வியர்வை அரும்பியிருந்தது. எல்லாக் கதவுகளையும் சாத்திவிட்டதால் ஊதுபத்தி புகையில் மூச்சு முட்டுவது போல் இருந்தது. ஒரே நேரத்தில் அத்தனை இனிப்புகளை பார்த்ததும் வெறுப்பு ஏற்பட்டது போல் எதையுமே சாப்பிட பிடிக்கவில்லை. முதலிரவில் இருக்க வேண்டிய உற்சாகமோ, ஆர்வமோ இருக்கவில்லை. இங்கிருந்து வெளியேறி கடற்கரையில் தனிமையில் இனிமையான இசையில் கரைந்து போக முடிந்தால்...

"அத்தான்! என்ன யோசிக்கிறீங்க?"

சீதாவின் குரலைக் கேட்டு இவ்வுலகிற்றுக்கு மீண்ட வனாய், இயந்திர கதியில் பால் டம்ளருடன் சீதாவையும் சேர்த்து அணைத்துக் கொள்ளப் போனான்.

தடாலென்று சத்தம் கேட்டுத் திரும்பிப் பார்த்தான். எலி ஒன்று பெட்டி மீது இருந்த டப்பாவை கீழே தள்ளி விட்டு ஓடியது. பிரகாஷ் தலையை உதறிக் கொண்டான். பிரயோஜனமில்லை. தன்னால் கனவில் கூட சந்தோஷத்தை அனுபவிக்க முடியாது.

* * *

பதினோரு மணியாகிவிட்டது. சுஜாதாவுக்கு உறக்கம் வரவில்லை. மல்லாக்க படுத்தபடி யோசனையில் ஆழ்ந்திருந்தாள்.

விடிவிளக்கின் வெளிச்சம் அறை முழுவதும் நீல வண்ணத்தில் பரவியிந்தது. மேஜைமீது இருந்த ஓவியத்தை அந்த வெளிச்சத்திலும் பார்க்க முடிந்தது. அந்த ஓவியம் என்றால் சுஜாதாவுக்கு ரொம்ப பிடிக்கும். அதை பொன்னம்பலம்தான் வரைந்திருந்தார்.

சுஜாதா பக்கத்தில் படுத்திருந்த கணவரைப் பார்த்தாள். மங்கலான வெளிச்சத்தில் அவருடைய முகம் அமைதியாக இருந்தது. அந்த நேரத்தில் அவரைப் பார்த் தால் லட்சக் கணக்கில் வியாபாரம் செய்பவர் என்ற யாரா லும் சொல்ல முடியாது.

சுஜாதா யோசித்துக் கொண்டிருந்தாள். பணத்திற் காகத்தான் பொன்னம்பலத்தை அவள் திருமணம் செய்து கொண்டாள். ஆனால் அதற்குப் பிறகு அவரிடம் இருக்கும் ஓவியக் கலையை விரும்பத் தொடங்கினாள். ஆனால் இளைஞர்களிடம் இருக்கும் வேகமோ, துடிப்போ



அவரிடம் இல்லாதது அவளுக்கு ஏமாற்றமாக இருந்தது. பரிபூர்ணமான காதலை வெளிப்படுத்தும் செயல்தான் செக்ஸ். தனக்கு அந்த நிலை எப்போதும் கிடைக்காது.

சுஜாதா கணவருக்கு விழிப்பு வராதபடி ஓசைப் படுத்தாமல் பக்கத்து அறைக்குச் சென்றாள். சூட்கேஸை திறந்து புடவைகளுக்கு அடியில் இருந்த பழைய டைரி களை எடுத்து டேபிள் லைட்டை போட்டுக் கொண்டு ஒவ்வொன்றாகப் படிக்கத் தொடங்கினாள்.

ஒரு இடத்தில் அவள் பார்வை பதிந்தது. பிரகாஷ் என்ற பெயர் எழுதப்பட்டு சிவப்பு பேனாவால் சுழிக்கப் பட்டிருந்தது. பழைய நினைவுகளில் மூழ்கிய சுஜாதாவின் இதழ் களில் முறுவல் படர்ந்தது.

**டிசம்பர் பதினாலு:** வழக்கம் போல் பிரகாஷ் இன்னிக்கும் வெள்ளை ஷர்ட் அணிந்திருந்தான். வெள்ளையைத் தவிர அவனிடம் வேறு கலரில் ஷர்ட்கள் இல்லையோ. காலர் அருகில் இருந்த கிழிசலை அவன் கவனிக்கவில்லை போலும். அந்த அலட்சியமே அவனுக்கு தனி அழகை கொடுத்தது. லெக்சரர் ஏதோ கேள்வி கேட்டதும் எழுந்து நின்றுகொண்டேன். பாடத்தில் மனம் பதியாதபோது என்ன கேள்வி கேட்டாரோ யாருக்குத் தெரியும்? பிரகாஷை நான் காதலிக்கிறேனா?

**ஜனவரி மூன்று:** உண்மையிலேயே பிரகாஷ் ஒரு முட்டாள். கல்லூரி முழுவதும் என்னுடைய புன்னகைக் காக தவம் கிடக்கும் போது இவன் மட்டும் இப்படி இருப்பானேன்? ஊஹூம், விருப்பம் இல்லாமல் இல்லை. என்னைப் பார்க்கும் ஒரு வினாடி நேரத்திற்குள் அவன் கண்களில் தெரியும் எண்ணங்களை புரிந்துகொள்வது கஷ்டமான விஷயம் இல்லை.

சுஜாதா பக்கங்களை நிதானமாக புரட்டினாள். பெரும்பாலும் பிரகாஷ் பற்றியே எழுதப்பட்டிருந்தது. பதினெட்டு வயதில் மலரும் காதல் ரொம்ப நேர்மையாக இருக்கும் போலும். பொன்னம்பலத்தை திருமணம் செய்து கொண்டதற்கு அவள் ஒரு நாளும் வருத்தப்பட வில்லை. அவருடைய பணத்திற்காக மட்டுமே அல்லாமல், வியாபார திறமையை, ஓவியக்கலையை விரும்பத் தொடங்கினாள்.

"தூக்கம் வரவில்லையா?"

மென்மையான குரலைக் கேட்டதும் தலையைத் திருப்பிப் பார்த்தாள். அறைவாசலில் பொன்னம்பலம் நின்று கொண்டிருந்தார்.

சுஜாதா வெறுமே முறுவலித்துவிட்டு டைரிக்களை உள்ளே வைத்தாள். கணவருடன் சேர்ந்து மறுபடியும் படுக்கை அறைக்குள் வந்தாள்.

"சுஜாதா!" தெளிவற்ற குரலில் அழைத்தார். திரும்பி கணவன் பக்கம் பார்த்தாள். அவர் அவள் பக்கம் திரும்பாமலேயே கேட்டார். "என்னை கல்யாணம் செய்து கொண்டதில் அதிருப்தியாக உணருகிறாயா?"

"எதற்காக கேட்கிறீங்க?"

"இந்த நள்ளிரவு வேளையில் பழைய நினைவுகளை புரட்டி பார்க்கிறாய் என்றால்..."

சுஜாதாவின் முகம் வெளிறிப்போய்விட்டது. "ஊஹூம். அப்படி எதுவும் இல்லை." முணுமுணுத்தாள்.

"உண்மைதான் சுஜாதா. யாராவது நம்முடைய கதையை நாவலாக எழுதினால் முதல் பக்கத்திலேயே என்னை வில்லன் ஆக ஆக்கியிருப்பார்கள். நான் அழகாக



இல்லை என்பது ஒரு காரணம். எதையும் வெளிப் படை யாக, முகத்திற்கு நேராக பேசுவது இரண்டாவது காரணம்." திடீரென்று அவருடைய குரல் கம்மியது. "ஒருக்கால் உன்னால் என்னிடம் அன்பாக இருக்க முடிய வில்லை என்றாலும் பரவாயில்லை. கொஞ்சம் இரக்கம் காட்டினால் அதுவே போதும். அந்த பற்றுக்கோலுடன் வாழ்நாளை கழித்து விடுவேன்."

சுஜாதா சட்டென்று கணவரின் வாயை பொத்தி விட்டு மௌனமாக அவருடைய மார்பில் முகத்தை புதைத்துக் கொண்டாள். பொன்னம்பலம் அவளுடைய கேசத்தைவருடிக்கொண்டே "சில நாட்கள் வெளியே எங்கேயாவது போய் விட்டு வருவோம். பிசினெஸ் விவகாரங்களிலிருந்து எனக்கும் மாறுதல் தேவையாக இருக்கு" என்றார் தாழ்ந்த குரலில்.

சரி என்பது போல் தலையை அசைத்தாள் சுஜாதா.

* * *

# 6

இனி உறக்கம் வராது என்று நிச்சயித்துக் கொண்ட பிறகு பிரகாஷ் படுக்கையை விட்டு எழுந்து கொண்டான். பதினொன்றரை ஆகியிருந்தது. மீட்டாபான் போட்டுக் கொள்ளணும் போல் தோன்றியது. செருப்பை மாட்டிக் கொண்டு கதவை அழுத்தி சாத்திவிட்டு வெளியே வந்தான்.

எப்போதும் செகண்ட் ஷோ வரையில் திறந்திருக்கும் பெட்டிக்கடை மூடியிருந்தது. சந்று நேரம் நடப்போம் என்று மெயின் ரோட் வரையில் சென்று மீட்டா பான் வாங்கிப் போட்டுக் கொண்டான்.

கார்னிவாலுக்கு போனால் என்ன? சட்டைப் பையில் பத்து ரூபாய் இருந்தது. அப்படியே நஷ்டம் வந்தாலும் பத்து ரூபாய்தானே. இந்த வாரம் முழுவதும் அதிர்ஷ்டம் தன் பக்கம் இருப்பது நேற்றே புரிந்து விட்டது. இந்த பத்து ரூபாயை வைத்து கொண்டே முப்பது ரூபாயை சம்பாதித்து விடலாம்.

உற்சாகத்துடன் கார்னிவால் பக்கம் போனான். விளக்குகளின் வெளிச்சம் கண்களைப் பறிப்பது போல் இருந்தது. உள்ளே போகும் போது கதவு அருகில் நின்று கொண்டிருந்த இஸ்மாயில் "வணக்கம் சார்" என்றான்.

பிரகாஷுக்கு காரணம் இல்லாமல் குற்ற உணர்வு ஏற்பட்டது. இஸ்மாயில் முகத்தை கூர்ந்து பார்த்தான். அனுபவங்களை கரைத்துக் குடித்திருக்கும் அந்த வயோதிகனின் முகத்தில் ஏதோ சொல்ல வேண்டும் என்ற தவிப்பை அடக்கி வைப்பது புரிந்தது.



"ஹலோ சார். வாங்க... வாங்க. உங்களுக்காகத்தான் காத்துக்கிட்டு இருக்கிறேன். தாமதமாகி விட்டதே ஏன்?" என்ற குரல் கேட்டு அந்தப் பக்கம் பார்த்தான்.

அவனேதான்.

பிரகாஷ் முறுவலித்துவிட்டு "இன்னிக்கும் நான் வருவேன்னு எப்படி நினைச்சிங்க?" என்று கேட்டான்.

"இங்கே ஒருமுறை வந்தவர்கள் மறுபடியும் வராமல் இருப்பதாவது?" என்று சொல்லிக்கொண்டே முன்னால் நடந்தான். "வாங்க போகலாம். ஏற்கெனவே தாமதமாகி விட்டது."

யாரோ கன்னத்தில் அறை விட்டாற்போல் இருந்தது பிரகாஷுக்கு.

கோபால் பின்னால் திரும்பினான். பிரகாஷ் அதே இடத்தில் நிற்பதை பார்த்துவிட்டு "வாங்க. ஏற்கெனவே நிறைய லாஸ் ஆகிவிட்டது" என்று வற்புறுத்தினான்.

பிரகாஷ் அவனுடன் சேர்ந்து நடக்கத் தொடங்கினான்.

"நூறு ரூபாய் வரையில் போய்விட்டது. இனி பிரயோஜனமில்லை என்று கிளம்பும்போது அதிர்ஷ்டவசமாக நீங்க வந்தீங்க" என்றான்.

"என்னை நம்பி பணத்தை கட்டினால் ஏற்கெனவே போனது போறாது என்று இதுவும் போய் விடப் போகிறது" என்றான் பிரகாஷ்.

"உங்களுக்குத் தெரியாது. ராசியான கை உங்களுடையது. எந்த நிறத்தின் மீது பணம் கட்டணுமோ சொல்லுங்க. மீதியை நான் பார்த்துக்கொள்கிறேன்."

இருவரும் போர்ட் அருகில் வந்தார்கள்.

"மேலும் யாராவது பந்தயம் கட்டப் போறீங்களா?" கல்லாவில் இருப்பவன் கத்திக் கொண்டிருந்தான்.

பிரகாஷ் ஐந்து ரூபாயை எடுத்து "மஞ்சள்" என்றான். கோபாலும் ஐம்பது ரூபாய் நோட்டை எடுத்து மஞ்சள் நிறத்தின் மீது பந்தயம் கட்டினான்.

"ஐம்பது ரூபாயா?"

"உங்க அதிர்ஷ்டத்தை பற்றி உங்களுக்கே தெரியாது. பார்த்துக்கிட்டே இருங்க. நாம் ஜெயிக்கப் போவது நிச்சயம்."

"இருந்தாலும் இவ்வளவு பணம்..." பிரகாஷ் சொல்லிக் கொண்டிருந்தபோதே யாரோ அம்பை வீசினார்கள்.

அம்பு மஞ்சள் கட்டத்தில் போய்த் தைத்தது. நம்ப முடியாதவன் போல் பிரகாஷ் பார்த்துக் கொண்டே இருந்தான். "நான்தான் சொன்னேனே" என்பது போல் பார்த்தான் அவன்.

மூன்றாவது அம்பும் மஞ்சளில் தைத்தது. கோபால் பிரகாஷின் கையைப் பற்றி வேகமாக குலுக்கினான். "விட்டதை பிடித்து விட்டோம் சார். ரொம்ப ரொம்ப தாங்க்ஸ்" மகிழ்ச்சி கலந்த குரலில் சொன்னான்.

பிரகாஷ் முறுவலித்து விட்டு பேசாமல் இருந்தான். உள்ளூற பெருமையாகத்தான் இருந்தது.

பந்தயத்திற்கான பணம் கிடைத்துவிட்டது. அடுத்த ஆட்டம் தொடங்கவிருந்தது.

"இந்த முறை எந்த நிறம்?" கோபால் கேட்டான்.

"வெள்ளை."



பணம் வசூல் செய்பவன் அருகில் வந்தான். கோபால் நூறு ரூபாயை எடுத்துக்கொடுத்து "வெள்ளை" என்றான்.

பிரகாஷ் பத்து ரூபாயை எடுத்து "இதுவும் வெள்ளை" என்று கொடுக்கப்போன போது கோபால் கையைப் பிடித்து தடுத்தான். "எத்தனை நாட்களுக்கு ஐந்து பத்து என்று ஆடுவீங்க? தம்பி! இதில் ஐம்பது ரூபாயை அவர் பெயரில் போட்டுக் கொள்" என்றான்.

பிரகாஷ் ஏதோ சொல்லுவதற்குள் ஆட்டக்காரன் போய் விட்டான். பிரகாஷ் பதட்டத்துடன் கோபால் பக்கம் திரும்பினான்.

"ஏதோ ஆபீஸில் வேலை செய்வதாக சொன்னீங் களே, எந்த ஆபீஸ்?" கோபால் முந்திக்கொண்டு கேட்டான்.

பிரகாஷ் ஆபீஸின் பெயர் சொன்னதும் அவன் முகம் மலர்ந்தது. "நாளைக்குத்தான் சம்பளம் வந்து விடுமே" என்றான். தான் கொடுத்தது கடன்தான் என்ற தொனி அதில் வெளிப்பட்டது.

முள் மீது நிற்பது போல் இருந்தது பிரகாஷுக்கு தொடர்ந்து அம்புகள் வீசப்பட்டன. முதல் இரண்டும் சிவப்பு நிறத்தில், மூன்றாவது கருப்பு கட்டத்தில்.

இரத்தம் சுண்டிவிட்டது போல் பிரகாஷின் முகம் வெளிறிவிட்டது. உள்ளங்கையில் வியர்த்துக் கொட்டியது. பார்த்துக் கொண்டிருந்த போதே ஐம்பது ரூபாய் கையை விட்டு போய்விட்டது. கோபால் முகத்தில் அவ்வளவு வருத்தம் தென்படவில்லை.

"ஆட்டத்தில் இதெல்லாம் சகஜம்தான்" என்றான்.

ஆட்டக்காரன் அருகில் வந்தான். விட்டதை பிடிக்க வேண்டும் என்றால் மறுபடியும் ஆடத்தான் வேண்டும். வேறு வழியில்லை.

பலவீனமான குரலில் "நீலம்" என்றான், பத்து ரூபாயை கொடுத்துவிட்டு.

அம்புகள் வீசப்பட்டன. மூன்றாவது அம்பு நீலத்தில் தைத்தது. பிரகாஷ் முகத்தில் கொஞ்சம் களை திரும்பியது. மறுபடியும் நம்பிக்கை வந்தது.

ஆட்டக்காரன் இருபது ரூபாயைக் கொடுத்தான். இந்த முறை கருப்பு நிறத்தின் மீது கட்டினான். உள்ளதும் போய்விட்டது. மறுபடியும் மஞ்சள். இருபது ரூபாய் வரவு.

சரியாக அரை மணி நேரம் கழித்து சட்டைப் பையைத் தடவிய போது இருவரிடமும் எதுவும் இல்லை. கணக்கு பார்த்த போது பிரகாஷ் கோபாலுக்கு முன்னூறு ரூபாய் தர வேண்டும் என்று தெரிந்தது. பிரகாஷ் வாங்கும் சம்பளத்தில் கணிசமான தொகை அது. தாராளமாக ஒரு மாதத்திற்கு தேவையான மளிகை சாமான்களை வாங்கியிருக்கலாம்.

நெற்றி மீது படிந்த வியர்வையைத் துடைத்துக் கொண்டு வெளியே வந்தான். பின்னால் திரும்பிப் பார்த்த போது எல்லோரும் மேஜை சுற்றிலும் சூழ்ந்திருப்பது தென்பட்டது. இங்கே தொலைத்ததை சம்பாதிக்க வேறு வழியைத் தேடிக்கொள்வார்களாய் இருக்கும். பேப்பரை மேலிடத்திற்கு அனுப்புவதற்கு குமாஸ்தா லஞ்சம் வாங்குவான். பியூன் ஆக இருப்பவன் இனாம் என்ற பெயரில் கையை நீட்டுவான். நேர்மையாக வேலை செய்பவனுக்கு மதிப்பு இருக்காது.



பிரகாஷ் மெயின் ரோட்டுக்கு வந்தான். சுரண்டல் லாட்டரி கடை அருகில் மக்கள் கூடியிருந்தார்கள். இந்த நாட்டின் சராசரி மனிதர்கள்.

* * *

பொலபொலவென்று விடியும் போது சீதாவுக்கு விழிப்பு வந்தது. எழுந்ததுமே பாக்கெட் கண்ணில் பட்டது. ஆர்வத்துடன் பிரித்துப் பார்த்தாள். வெள்ளை நிற ஷிஃபான் புடவை. ஒரு நிமிடம் அவளுக்கு எதுவும் புரியவில்லை. அதை அப்படியே எடுத்துக்கொண்டு அறைக்குச் சென்றாள். பிரகாஷ் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தான். இரவு ரொம்ப நேரம் கழித்து வந்திருக்கிறான் என்றும், யாரையும் எழுப்பவில்லை என்றும் புரிந்து கொண்டாள். புடவையை அவன் தான் வாங்கி வந்திருக்கிறான். திடீரென்று அவள் மனம் முழுவதும் உற்சாகம் பரவியது. வேகமாக அறையை விட்டு வெளியே வந்தாள். வேலைக்காரி வந்ததும் பாத்திரங்களை தேய்க்கப் போட்டு விட்டு தலைக்குக் குளித்து விட்டு வந்தாள். புதுப் புடவையை நேர்த்தியாக உடுத்திக் கொண்டு தளர்வாக ஒற்றைப் பின்னலை போட்டுக் கொண்டாள். சினிமா பாட்டை முணுமுணுத்துக் கொண்டே மையை இட்டுக் கொண்டாள். பிறகு என்ன செய்வதென்று தெரியவில்லை. மறுபடியும் பிரகாஷின் அறைக்கு வந்தாள். அவன் இன்னும் உறங்கிக் கொண்டிருந்தான். ஒரு நிமிடம் அப்படியே பார்த்துக் கொண்டிருந்தாள். தூக்கத்தில் கூட ஒளி வீசும் முகம், நெற்றியில் படித்த கேசக்குழல்கள், வெற்றிலை போட்டதால் சிவந்த இதழ்கள்.

ஓரடி முன்னால் வைத்து அவனை எழுப்பப் போனாள். கொல்லையிலிருந்து வேலைக்காரியின் குரல் கேட்டது. சட்டென்று அறையை விட்டுவெளியே வந்தாள்.

காதல் என்பதே அழகான ஆத்ம வஞ்சனைதான். இத்தனை வருடங்களாக அவள் மனதில் குடியிருந்த காதல் திடீரென்று இன்று வெளிப்படுவதற்குக் காரணம் ஒரு புடவை. தங்க நகை, புது சினிமா, புதுப்புடவை இவையெல்லாம்தான் மனதில் இருக்கும் காதலை வெளியில் கொண்டு வருவதற்கு காரணமாக இருக்கின்றன என்பது எவ்வளவு வேடிக்கையான விஷயம்? இந்த கேடுகெட்ட உலகில் அன்பை வெளிப்படுத்த இதை விட வேறு வழியில்லை. இது மட்டும் உண்மை இல்லை என்றால் எத்தனையோ கணவன்மார்கள் தங்களுடைய மனைவியரை மனப்பூர்வமாக நேசித்து உண்மையான அன்பை வெளிப்படுத்துவார்கள். வெறுமே பரிசுகளை வாங்கித் தந்து மனைவியரை ஏமாற்றிக் கொண்டு இருக்க மாட்டார்கள்.

வேலைக்காரியிடம் துணிகளை தோய்ப்பதற்கு பார் சோப்பை எடுத்துக் கொடுத்துவிட்டு வராண்டாவுக்கு வந்தாள். கட்டிலில் தந்தையைக் காணவில்லை. அவ்வளவு சிக்கிரமாக அவர் எழுந்து கொள்ள மாட்டார் என்று அவளுக்குத் தெரியும். கிணற்றடிக்குச் சென்று தேடினாள். வேலைக்காரி துணிகளை தோய்த்துக் கொண்டிருந்தாள். தந்தையை எங்கும் காணாததால் பதட்டமடைந்த சிதா பிரகாஷின் அறைக்குச் சென்றாள்.

"அத்தான்... அத்தான்" என்று அழைத்துக் கொண்டே தட்டி எழுப்பப் போனாள்.

பிரகாஷுக்கு விழிப்பு வந்தது. கண்களைத் திறந்து பார்த்தபோது சிதாவின் முகம் ரொம்ப அருகில் தென்பட்டது. தலைக்குக் குளித்ததில் காற்றில் அலை பாய்ந்த கூந்தல். நெற்றியின் நடுவில் நேர்த்தியாக வைக்கப்பட்ட பொட்டு.



சட்டென்று எழுந்துகொள்ளப் போனான். அவளுடைய பின்னால் அவன் முகத்தை தாக்கியது. சிதா சட்டென்று பின்னால் நகரப் போனாள். எதிர்பாராத விதமாக பிரகாஷ் அவள் இடுப்பைச் சுற்றிலும் கையைப் போட்டு அருகில் இழுத்துக் கொண்டு என்ன நடக்கிறதென்று புரியும் முன் அவள் இதழ்கள் மீது ஆழமாக முத்தம் பதித்தான்.

ஒரு நிமிடம் அவள் திகைத்துப் போனாள். உடனே வெட்கம் சூழ்ந்துகொள்ள அவனைத் தள்ளிவிட்டு அறையை விட்டு ஓட்டமெடுத்தாள்.

அறை முழுவதும் நிசப்தம் பரவியது. கடியாரத்தின் டிக் டிக் சத்தத்தைத் தவிர வேறு எந்த சத்தமும் இருக்கவில்லை.

என்ன காரியம் செய்து விட்டான். விழிப்பு வந்ததும் சிதாவின் முகம் தென்பட்டது. ஏதோ மயக்கம் ஆட்கொண்டது போல் செயல்பட்டு விட்டான். தவறு செய்வதில் இருக்கும் குற்ற உணர்ச்சி முதல் தடவையாக அவனுக்குப் புரிந்தது.

★ ★ ★

ஆபீசுக்கு நேரமாகி விட்டதால் அவன் சிக்கிரமாக கிளம்பமுற்பட்டான். சிதா அவன் கண்ணில்படாமல் மறைவாகவே நடமாடினாள். அதை அவன் கவனித்தாலும் அதைப்பற்றி அதிகமாக யோசிக்கவில்லை. அவன் மனம் முதல்நாள் காஸினோவில் ஏற்பட்ட நஷ்டத்தையே சுற்றிச் சுற்றி வந்தது. அந்தக் கடனை எப்படி தீர்க்கப் போகிறான்? யாரிடம் கடன் வாங்க முடியும்?

ஒரு விஷயத்தில் சந்தோஷப்பட்டுக் கொள்ளத்தான் வேண்டும்.' மற்ற எல்லோரையும் போல் விட்ட இடத்திலேயே மறுபடியும் ஜெயித்து விடலாம் என்று மட்டும் அவன் நினைக்கவில்லை. இனி எந்தச் சூழ்நிலையிலும் அந்தப் பக்கம் போகக் கூடாது என்று முடிவு செய்தான். அந்த முடிவில் அவன் எத்தனை காலம் நிலைத்து இருக்கப் போகிறான் என்று காலம்தான் சொல்ல வேண்டும்.

ஆபீசுக்கு வரும் போதே தாமதமாகிவிட்டது. அவனிடம் "இருக்கும் நல்ல குணம் என்னவென்றால் இருக்கையில் அமர்ந்து கொண்ட பிறகு மற்ற விஷயங்களை எல்லாம் மறந்து போய்விடுவான்.

பதினோறு மணி ஆகிவிட்டது. வெளியில் வெயில் ரொம்ப கடுமையாக இருந்தது. ஆபீஸ் முழுவதும் சந்தடியாக இருந்தது. வராண்டாவில் நின்றபடி பேசிக் கொண்டிருந்த ஆடிட்டர்களின் சிரிப்பு ஒலி அடிக்கடி கேட்டுக் கொண்டிருந்தது. அவர்களுக்கு என்று தனியாக அறைகள் இல்லாததால் க்ளயண்டுகள் யாரோ ஆடிட்டர்கள் யாரோ புரியவில்லை.

பிரகாஷ் மும்முரமாக வேலை பார்த்துக் கொண்டிருந்தான். ஃபைலுக்கு தேவையான நோட்ஸ் எழுதி முடித்து விட்டு நிமிர்ந்து பார்த்தபோது எதிரே ராகவன் நிற்பது தென்பட்டது. எதிர் வீட்டில் இருப்பவன். பிரகாஷ் அவனைப் பலமுறை பார்த்திருக்கிறானே ஒழிய அதிகமாகப் பேசியதில்லை. வியப்பை மறைத்துக்கொண்டு "உட்காருங்க" என்றான்.

"உங்களுடன் கொஞ்சம் பேசணும்."

"என்னிடமா?"



"ஆமாம். இங்கே வேண்டாம். வெளியே போய் பேசுவோம்."

பிரகாஷ் எழுந்து அவனுடன் சென்றான். இருவரும் மரத்தின் அடியில் நின்றுகொண்டார்கள்.

"சொல்லுங்கள்" என்றான் பிரகாஷ்.

ராகவன் ஒரு நிமிடம் பேசவில்லை. பிறகு தயங்கிக் கொண்டே "உங்க மாமா..." என்று ஆரம்பித்தவன் பாதியிலேயே நிறுத்தினான்.

பிரகாஷ் பதட்டமடைந்து "மாமாவுக்கு என்ன ஆச்சு? ப்ளீஸ்... சொல்லுங்களேன்" என்றான்.

"பதட்டப்படாதீங்க. ஒன்றும் ஆகலை. நேற்று இரவு உங்க மாமாவை போலீசார் விபசார சட்டத்தின் கீழே பிடித்து வைத்திருக்கிறார்கள்."

பிரகாஷுக்கு நினைவு தப்பிவிடும்போல் இருந்தது. எப்படியோ சமாளித்துக் கொண்டு, "நீங்க சொல்வது உண்மையா?" என்றான்.

"ஆமாம். நேற்று இரவு இரண்டு மணிக்கு ரெயிடிங் நடந்தது. அதில் பிடிபட்டார்."

பிரகாஷின் முகம் வெளிறிப் போயிற்று. "இப்போ- இப்போ என்ன செய்வது?" என்றான் பதட்டத்துடன்.

"கவலைப்படாதீங்க." ஆறுதல் தருவது போல் ராகவன் சொன்னான்.

இந்த நிலைமையை எப்படி சமாளிப்பது என்ற பிரகாஷுக்குப் புரியவில்லை. இந்த விஷயம் எல்லோருக்கும் தெரிந்தால் எப்படி தலை நிமிர்ந்து நடக்க முடியும்? மாமாவுக்கென்ன? இது போன்ற அவமானங்களை

எத்தனை சந்தித்தாலும் உதறித் தள்ளிவிட்டு வளையம் வருவார். ஊருக்குப் புதுசு என்பதால் அவரைப் பற்றி இங்கே யாருக்கும் அதிகமாகத் தெரியாது. இதற்கு முன்பு இருந்த ஊரில் பக்கத்து மாமியிடம் வம்பு செய்த போது நடந்த ரகளையை தன்னால் எப்படி மறக்க முடியும்?

"இப்போ என்ன செய்வது? ஜெயிலில் போடு வார்களா?"

"அது வரைக்கும் விஷயம் போகாமல் செய்து விடலாம்."

"எப்படி?"

"போலீஸ் ஸ்டேஷனில் எனக்குத் தெரிந்த நபர் இருக்கிறார். அவரைப் பார்க்கத்தான் காலையில் போயிருந்தேன். அப்பொழுதுதான் உங்க மாமாவைப் பார்த்தேன். அந்த நபரிடம் பேசி விட்டேன். கேஸ் எதுவும் இல்லாமல் உங்க மாமாவை வெளியே கொண்டு வருவது கஷ்டமான விஷயம் இல்லை. கொஞ்சம் பணம் செலவாகும். அவ்வளவுதான். நூறு ரூபாயாவது கொடுக்க வேண்டியிருக்கும்."

பெரிய பாரம் நீங்கி விட்டாற்போல் மூச்சு விட்டுக் கொண்டான் பிரகாஷ். ஆனால் மாதக் கடைசியில் நூறு ரூபாய் எங்கிருந்து கிடைக்கும்?

"உள்ளே போய் உட்காருவோம் வாங்க" என்று ராகவனையும் அழைத்துக் கொண்டு போனான். பணத்தை எப்படி புரட்டுவது என்ற கேள்வி மனதைத் துளைத்துக் கொண்டிருந்தது.

"மாதக் கடைசி என்பதால் என்னிடமும் இல்லை." நொந்து கொள்வது போல் சொன்னான் ராகவன்.



"இவ்வளவு தூரம் நீங்க சிரமம் எடுத்துக் கொண்டு வந்ததே பெரிய விஷயம்." பிரகாஷ் சொன்னான்.

குமாரிடம் கேட்டுப் பார்த்தால் என்ன? சந்தித்த அடுத்த நாளே கடன் கேட்பது நன்றாக இருக்காது. இருந்தாலும் பரவாயில்லை. நாளைக்கு சம்பளம் வந்ததும் திருப்பிக் கொடுத்துவிடலாம்.

எழுந்துபோய் குமார் வீட்டுக்கு ஃபோன் செய்தான். குமார் வீட்டில் இல்லை என்றும், எங்கே போனானோ தெரியாது என்றும் தகவல் தெரிவிக்கப்பட்டது. வாடிப் போன முகத்துடன் இருக்கைக்கு வந்தான்.

"என்ன ஆச்சு?" ராகவன் கேட்டான்.

"நண்பனிடம் கேட்கலாம் என்று பார்த்தேன். அவன் வீட்டில் இல்லையாம். இப்போ என்ன நடக்கும்?"

"ஃபைன் போடுவார்களாக இருக்கும். கட்டவில்லை என்றால் ஜெயில்..." என்று பாதியில் நிறுத்தினான்.

கடைசி முயற்சியாக பக்கத்து சீட்டில் இருந்த ராமனிடம் சென்றான்.

"வா வா. நானே உன்னைத் தேடி வருவதாக இருந்தேன். நீயே வந்து விட்டாய்." ராமன் உற்சாகத்துடன் வரவேற்றான்.

"என்ன விஷயம்?" பிரகாஷ் கேட்டான்.

"இவர் மிஸ்டர் சமன்லால்" என்று எதிரே இருந்த நபரை அறிமுகப்படுத்தினான்.

பிரகாஷ் அந்த நபருடன் கையைக் குலுக்கிவிட்டு ராமன் பக்கம் திரும்பி "சின்ன உதவி தேவை" என்றான்.

"சொல்லு. பரவாயில்லை" என்றான் ராமன்.

சமன்லால் அங்கே இருந்தது சங்கடமாக இருந்தாலும் வேறு வழியில்லாமல் "எனக்கு நூறு ரூபாய் தேவைப் படுகிறது" என்றான்.

"இப்பொழுதேவா?"

"ஆமாம். உடனே தேவை."

ராமன் ஒரு நிமிடம் யோசித்துவிட்டு "இரண்டு நிமிடங்களில் நானே கொண்டு வந்து தருகிறேன்" உறுதி அளிப்பது போல் சொன்னான்.

பிரகாஷ் நிம்மதியாக மூச்சுவிட்டபடி தன் இருக்கைக்கு வந்தான். ராகவன் தன்னையே ஆர்வத்துடன் பார்த்துக் கொண்டிருப்பதைக் கவனித்து "கிடைத்து விட்டது" என்றான்.

"காலையிலேயே வந்து உங்களுக்குத் தொல்லை கொடுத்து விட்டேன். சாரி."

"ப்ளீஸ். அப்படிச் சொல்லாதீங்க. இவ்வளவு சிரமம் எடுத்துக் கொண்டு வந்து தகவல் தெரிவித்ததற்கு நான் தான் உங்களுக்கு நன்றி சொல்லணும்."

அதற்குள் ராமன் வந்து பணத்தைக் கொடுத்தான். அதை ராகவனிடம் கொடுத்துவிட்டு "நானும் வர வேண்டுமா?" என்று கேட்டான்.

"தேவையில்லை. நானே பார்த்துக் கொள்கிறேன்."

ராகவன் எழுந்துகொண்டான். பிரகாஷ் அவனை வழியனுப்ப வெளியில் வந்தான்.

"தயவு செய்து இந்த விஷயத்தை யாரிடமும்..."

ராகவன் முறுவலித்தான். "இதை தனியாக வேறு சொல்ல வேண்டுமா? நீங்க இனி இந்த விஷயத்தைப் பற்றி



யோசிக்காதீங்க" என்றான் சைக்கிளில் ஏறிக் கொண்டே. "மனிதப் பிறவி எடுத்தாலே பலவீனங்கள் இருப்பதை தவிர்க்க முடியாது இல்லையா" என்று சொல்லிவிட்டுப் போய்விட்டான்.

ராகவன் போன திசையைப் பார்த்துக்கொண்டு அப்படியே நின்றுவிட்டான் பிரகாஷ். பலவீனங்கள் இருப்பது தவிர்க்க முடியாது என்றாலும் வேதாந்தம் பழக வேண்டிய வயதில் மாமா இப்படி நடந்துகொண்டது அவர்பால் வெறுப்பை ஏற்படுத்தியது.

பிரகாஷ் மறுபடியும் தன் இருக்கைக்கு வந்தபோது ராமனும் மேன்மேலும் அங்கே இருப்பதைப் பார்த்து வியப்படைந்தான். "என்ன விஷயம்?" என்று விசாரித் தான்.

"பிரகாஷ்! மிஸ்டர் சமன்லாலுக்கு டாக்ஸ் கிளியரன்ஸ் சர்ட்டிபிகேட் அவசரமாக வேண்டுமாம்" ராமன் சொன்னான்.

"அப்ளிகேஷன் கொடுக்கச் சொல்லு. பார்ப்போம்." பிரகாஷ் சாதாரணமான குரலில் சொன்னான்.

ராமன் சிரித்தான். "வழக்கமான புரொஸிஜரில் அது கிடைக்கணும் என்றால் எத்தனை நாளாகுமோ உனக்குத் தெரியாதா? இவருக்கு அவசரமாக தேவைப்படுகிறது. நீ நினைத்தால் அது ஒன்றும் கஷ்டமான விஷயம் இல்லை."

"ஆனால்..."

"பிரகாஷ்! இதில் எந்த தவறும் இல்லை. வழக்கமாக சர்டிஃபிகேட் கிடைக்க மூன்று நாட்கள் ஆகும். கொஞ்சம் முன்னாடி கொடுக்கச் சொல்கிறார். அவ்வளவுதான். நீ கொஞ்சம் முயற்சி எடுத்தால் போதும். அந்த

சர்டிஃபிகேட்டை காண்பிக்கவில்லை என்றால் கோடவுனில் பொருட்களை ரிலீஸ் செய்ய மாட்டார்களாம்."

தனக்கு கஷ்டம் வந்தபோது உதவி செய்தவன் இந்த அளவுக்கு கெஞ்சும் போது தான் மேலும் பிடிவாதமாக இருப்பது சரியில்லை என்று தோன்றியது. "ஆகட்டும் பார்க்கிறேன்" என்றான் அரை மனதுடன்.

சமன்லாலின் முகம் மலர்ந்தது. "தாங்க்ஸ். மாலையில் வருகிறேன்" என்றார். அவர் கிளம்பிப் போன பிறகு பிரகாஷ் ராமன் பக்கம் திரும்பி "சமயத்திற்குப் பணம் கொடுத்து உதவி செய்தாய். சம்பளம் வந்ததும் திருப்பித் தந்துவிடுகிறேன்" என்றான்.

"என் பணமாவது? அதை அந்த சமன்லால்தான் கொடுத்தார். கிளியரென்ஸ் சர்டிஃபிகேட் வாங்க நம் ஆபீஸில் ரேட் அதுதானே."

"என்ன?" பிரகாஷ் குரலில் வியப்பு கலந்திருந்தது. அதிர்ச்சியாக மட்டும் இருக்கவில்லை.

* * *

# 7

"அப்பா! காலை முதல் உங்களுக்காக கவலைப் பட்டுக்கொண்டிருக்கிறோம். எங்கே போயிருந்தீங்க?" சுவாமிநாதன் வீட்டுக்கு வந்ததும் சீதா கேட்டாள்.

முகத்தில் எந்த உணர்ச்சியும் காட்டாமல் அதேதோ ரொம்ப சாதாரணமான விஷயம் என்பதுபோல் சுவாமிநாதன் சிரித்து மழுப்பினார். "நேற்றிரவு தூக்கம் வராமல் செகண்ட் ஷோ சினிமாவுக்கு போயிருந்தேன். பொது இடங்களில் சிகரெட் பிடிப்பதை இந்த ஊரில் தடை செய்திருக்காங்களாம். எனக்குத் தெரியாது. சிகரெட் பற்ற வைத்தேனோ இல்லையோ, போலீஸ்காரன் வந்து பிடித்துவிட்டான்."

"என்ன செய்தாங்க?" பதட்டத்துடன் கேட்டாள் சீதா.

"என்ன செய்து விடுவாங்க? காலையில் இன்ஸ்பெக்டர் வந்தார். சின்ன வயதில் என்னிடம் படித்தவன்தான் என்னைப் பார்த்ததும் ரொம்ப சந்தோஷப்பட்டான். என்னைப் பிடித்து வந்த போலீஸ்காரனை நன்றாகத் திட்டி, என்னை டாக்ஸியில் வீட்டுக்கு அனுப்பி வைத்தான்."

உள்ளே சாப்பிட்டுக் கொண்டிருந்த பிரகாஷுக்கு சிரிப்பு பொத்துக் கொண்டு வந்தது.

"சாப்பிட வாங்கப்பா. ஏற்கெனவே நேரமாகி விட்டது."

"குளித்து விட்டு இரண்டே நிமிடங்களில் வந்து விடுகிறேன்."

சீதா கொல்லைப்புறம் சென்றாள். பிரகாஷ் சாப்பிட்டு முடித்து கையை அலம்பிக் கொண்டான்.

முன் அறையில் காமாட்சியின் குரல் கேட்டது. "மாமா! எங்கே போயிருந்தீங்க?"

சுவாமிநாதன் பதில் சொல்லிக் கொண்டிருந்தார்.

பிரகாஷ் ஷர்ட்டை எடுத்து அணிந்து கொண்டிருந்த போது முன்னறையில் மறுபடியும் பேச்சுக்குரல் கேட்டது.

"இந்த புடவை என்ன விலை?" சுவாமிநாதன் கேட்டுக் கொண்டிருந்தார்.

"அம்மாதான் வாங்கி வந்தாள். விலை தெரியாது."

"சினிமாவுக்கு போயிருந்தாயே. படம் நன்றாக இருந்தா? ஹீரோ யாரு?" சுவாமிநாதன் ரொம்ப அக்கறையுடன் விசாரித்தார்.

இளம் பெண்களில் சிலர் ரொம்ப அப்பாவியாக இருப்பார்கள். வயதான ஆண்கள் தங்களிடம் நெருக்கமாக பழக முயற்சி செய்வதை கரிசனம் என்று நினைத்துக் கொள்வார்கள்.

பிரகாஷ் முன் அறைக்கு வந்தான். அந்த நேரத்தில் அவனை எதிர்பாராததால் சுவாமிநாதன் ஒரு நிமிடம் தடுமாறிவிட்டார். உடனே சமாளித்துக் கொண்டு "லஞ்சுக்கு வந்தியா இல்லை என்னைக் காணும்னு பயந்து ஆபீசுக்கு லீவ் போட்டியா?" என்று கேட்டார்.

பிரகாஷைப் பார்த்ததும் காமாட்சி உள்ளே போய் விட்டாள். பிரகாஷ் பதில் சொல்லாமல் வெளியேறினான். பெண்கள் உண்மையிலேயே அப்பாவிகளா இல்லை அப்பாவிகள் போல் நடிக்கிறார்களா என்று அவனுக்குப் புரியவில்லை.

தன்னைப் பார்த்தும் மாமாவின் முகத்தில் தென் பட்ட குற்ற உணர்வை புரிந்துகொள்ள முடியாத அளவுக்கு பிரகாஷ் முட்டாள் ஒன்றும் இல்லை.



வேடிக்கை என்னவென்றால் பிரகாஷுக்கு விஷயம் தெரியும் என்று அவருக்குத் தெரியும். தெரியாதது போல் நடிப்பார். கண்டுகொள்ள மாட்டார்.

தந்தை குளிக்கப் போன பிறகு சீதா தாழ்ந்த குரலில் சரவணனைப் பற்றி காமாட்சியிடம் விசாரித்தாள்.

"அதைச் சொல்லத்தான் வந்தேன்." அக்கம் பக்கத்தில் யாரும் இல்லை என்பதை உறுதி செய்து கொள்வதற்காக சுற்றிலும் பார்வையிட்டாள் காமாட்சி.

"சீக்கிரமாகச் சொல்லு." சீதா அவசரப்படுத்தினாள்.

காமாட்சி சொல்லத் தொடங்கினாள்.

★ ★ ★

அன்று மாலை முழுவதும் காமாட்சிக்கு இருப்பு கொள்ளவில்லை. அந்த சின்ன கடிதத்தை ஐம்பது முறை யாவது படித்திருப்பாள். 'உங்க இருவருக்கும் ரொம்ப நல்ல பொருத்தம்' என்று சீதா சொன்னது நினைவுக்கு வந்ததும் வெட்கம் அவளை சூழ்ந்து கொண்டது. சரவணனுக்குப் படிப்பு ஏப்ரல் மாதம் முடிந்துவிடும். மே மாதம் தம் இருவருக்கும் திருமணம் நடக்கும். கடந்த ஐந்து மாதங்களாக அவளுக்கும் சரவணனுக்கும் இடையே காதல் விவகாரம் நடந்து கொண்டிருந்தது. பார்க்கில், கடற்கரையில் அவனுடன் டூயட் பாடுவதுபோல் காமாட்சிக்கு கனவுகள் வந்து கொண்டிருந்தன. கால் காசு கூட வரதட்சணை வாங்கிக் கொள்ளாமல் சரவணன் தன்னைக் கல்யாணம் செய்து கொள்ளப் போவதாக காமாட்சி நினைத்துக் கொண்டிருந்தாள். 431035/6036840

ஜன்னல் வழியாக அவன் அறைப் பக்கம் பார்த்தாள். கதவு பூட்டியிருந்தது. அவன் இல்லை போலும்.

'இந்தக் கடிதத்திற்கு பதில் எழுதவில்லை என்றால் எனக்கு ரொம்ப கோபம் வரும்.'

கடிதத்தில் அவன் எழுதியிருந்தது நினைவுக்கு வந்தபோது உள்ளூற சிரிப்பு ஏற்பட்டது. நோட்டுப் புத்தகத்திலிருந்து ஒரு பேப்பரைக் கிழித்தாள். அவள் இதயம் வேகமாக துடித்துக் கொண்டிருந்தது. அவளுடைய தந்தை வீட்டில் இருக்கவில்லை. அவசர அவசரமாக இரண்டு வரிகளை எழுதினாள்.

"எனக்கும் உங்களுடன் நிறைய பேச
வேண்டும் போல இருக்கிறது. ஆனால்
பயமாகவும் இருக்கிறது."

உங்கள்

கையெழுத்துப் போடாமல் அப்படியே விட்டு விட்டாள். கடிதத்தை இன்னொரு முறை படித்து விட்டு ப்ளௌசுக்குள் மறைவாக வைத்துக்கொண்டாள்.

வீட்டை விட்டுவெளியே வரும்போது "எங்கே கிளம்பி விட்டாய்?" தாயின் குரல் கேட்டது.

காமாட்சி முதலில் திடுக்கிட்டாலும் உடனே சமாளித்துக்கொண்டு "சிதாவைப் பார்த்துவிட்டு வருகிறேன்" என்று பதில் சொல்லிக் கொண்டே வேகமாக நடந்தாள்.

கடிதத்தை எடுத்து ஜன்னல் வழியாக உள்ளே வீசப் போனவள் பேச்சுக் குரல் கேட்டதும் நின்று விட்டாள். லேசாக குனிந்து உள்ளே எட்டிப் பார்த்தாள். உள்ளே சரவணன் நண்பனுடன் பேசிக் கொண்டிருந்தான். கடிதத்தை பிறகு கொடுக்கலாம் என்று முடிவு செய்து திரும்பப் போனபோது உள்ளே தன்னுடைய பெயர் அடிபடுவதைக் கேட்டு உன்னிப்பாக கவனித்தாள்.

"ஏதாவது முன்னேற்றம் தெரிந்ததா?" நண்பன் கேட்டுக் கொண்டிருந்தான்.



"இன்னிக்கு தெரிந்துவிடும்."

"அப்போ சீக்கிரமாக வேலையை முடித்துவிடு."

"ரொம்பக் கஷ்டம். முன் அனுபவம் எதுவும் இல்லைன்னு நினைக்கிறேன்."

மேற்கொண்டு அவன் சொன்னது காமாட்சியின் காதுகளில் விழவில்லை. அவள் முகம் பேய் அறைந்த மாதிரி ஆகிவிட்டது. நினைவு தப்பி கீழே விழப் போனவள் சுவற்றைப் பிடித்துக் கொண்டு சமாளித்தாள். அடுத்த நிமிடம் ஓட்டமும் நடையுமாக வீட்டுக்கு வந்து சேர்ந்தாள். உள்ளே இருந்து துக்கம் பொங்கி வந்தது. விசும்பி விசும்பி அழத் தொடங்கினாள். அவளுடைய முதல் காதல் கடிதம் கையிலிருந்து நழுவி கீழே விழுந்து காற்றில் அடித்துக் கொண்டு போய்விட்டது.

* * *

"இதெல்லாம் உண்மைதானா?" நம்ப முடியாதவள் போல் கேட்டாள் சிதா.

காமாட்சி வருத்தம் கலந்த முறுவலுடன் ஆமாம் என்பது போல் தலையை அசைத்தாள். அவள் முகத்தில் ஒரு விதமான விரக்தி குடிகொண்டிருந்தது. இது போன்ற நிலையில் ஒரு பெண் இந்த அனுபவத்தை எளிதாக எடுத்துக் கொண்டு புதிய நட்பை தேடிக் கொண்டு போவாள். இல்லையா எஞ்சிய வாழ்க்கையை நேர்மையாக கழிக்க முற்படுவாள்.

நடுத்தரக் குடும்பங்களில் வளர்ந்த பெண்கள் பெரும்பாலும் இரண்டாவது வழியை பின்பற்றுவார்கள். எதிர்காலத்தைப் பற்றிய பயம் அவர்களை அப்படி வழி நடத்தும். புகை பிடிக்கும் பழக்கமே இல்லாதவனை விட ஒருமுறை புகைத்துவிட்டு அந்த பழக்கத்தை விட்டொழிப்பவன் திடசித்தம் இருப்பவன்.

காமாட்சி அந்த நிலையில்தான் இருந்தாள். பெற்றோரின் வளர்ப்பு முறை, காலங்காலமாக கடைப் பிடிக்கப்பட்டு வரும் பண்பு எல்லாமாக சேர்ந்து அவளை நல்லவழியில் திசை திருப்பி விட்டன.

"நீ ஒன்றும் வருத்தப்பட்டுக் கொள்ளாதே." சீதா அவளைத் தேற்றுவது போல் சொன்னாள்.

காமாட்சி வியப்புடன் பார்த்துவிட்டு "நான் ஒன்றும் வருத்தப்படவில்லையே?" என்றாள்.

இந்த முறை வியப்படைவது சீதாவின் பங்காயிற்று. காமாட்சியின் முகத்தைக் கூர்ந்து பார்த்தாள்.

காமாட்சி தலையைக் குனிந்துகொண்டாள். "ராகவனை திருமணம் செய்து கொள்ள சம்மதம் என்று வீட்டில் சொல்லி விட்டேன்" என்றாள் தாழ்ந்த குரலில்.

"உண்மையாகவா?"

"ஆமாம்."

"திடீரென்று இந்த முடிவுக்கு வருவானேன்?"

"எனக்கே தெரியவில்லை."

வாழ்க்கையில் சில முடிவுகளை நம்மையும் அறியாமல் எடுத்து விடுகிறோம். காரண காரியங்களை பற்றி யோசிக்கும் பொறுமை இல்லாததும் ஒரு காரணம். சில சமயம் அப்பாவியாக இருப்பதும் நல்லதுதான். வாழ்க்கையை அதன் போக்கில் ஏற்றுக் கொள்ள முடியும்.

"சீதா!" உள்ளே இருந்து சுவாமிநாதன் அழைக்கும் குரல் கேட்டது.

"அப்பா கூப்பிடுகிறார். ஒரு நிமிஷம் இரு. வருகிறேன்" என்றாள் சீதா எழுந்துகொண்டே.



"நானும் கிளம்புகிறேன். இதைச் சொல்லத்தான் வந்தேன். வரட்டுமா?" காமாட்சி கிளம்பினாள்.

வாசலில் படியிறங்கும் போது ராகவன் எதிரே வந்தான். அவனைப் பார்த்ததும் சட்டென்று பின்னால் நகர்ந்தாள்.

அவனும் ஒரு நிமிடம் தடுமாறினான். "பிரகாஷ் இருக்கிறானா என்று பார்க்க வந்தேன்." தலையைக் குனிந்தபடி சொன்னான்.

அவன் அவளைப் பார்க்கவில்லையே தவிர அவள் கடைக்கண் வழியாக அவனைப் பார்த்துக் கொண்டிருந்தாள். ஒல்லியாக, உயரமாக இருந்தான். சரவணனுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் போது ரொம்ப சாதாரணமாக தென்பட்டான். இருந்தால் மட்டும் என்ன? அவன் தனக்கு மட்டுமே சொந்தமானவன் என்ற திருப்தி அவள் மனதில் பரவியது.

பின்னால் சத்தம் கேட்டு திரும்பிப் பார்த்தாள். பிரகாஷ் நின்றிருந்தான். இருவரையும் கூர்ந்து பார்த்த பிரகாஷ் உரத்த குரலில் சிரித்தான். காமாட்சி வெட்கப் பட்டுக் கொண்டே அங்கிருந்து வேகமாக வெளியேறினாள். ராகவனின் முகம் கன்றி சிவந்து விட்டது.

* * *

பிரகாஷ் ஆபீஸில் வேலை பார்த்துக் கொண்டிருந்தான். அவன் கண் முன்னே அந்தக் காட்சி திரும்பத் திரும்ப நினைவு வந்துகொண்டே இருந்தது. மகளை ராகவனுக்கு மணம் செய்து தரவேண்டும் என்று அவளுடைய தந்தை முயற்சி செய்வது அவனுக்குத் தெரியும். அதற்கு காமாட்சி சம்மதிக்கவில்லை என்று

பேச்சு வாக்கில் சீதா அவனிடம் சொல்லியிருக்கிறாள். இன்று சம்மதம் தெரிவித்தாள் என்றால்?

முதல் பார்வையில் காதல் அரும்பும் என்பது தவறு. அது வெறும் ஈர்ப்பு மட்டும்தான். அந்த ஈர்ப்பு நேர்மையான காதலுக்கு அடிகோலிடக் கூடும்.

மாலை நாலு மணி ஆகும் போது குமாரிடமிருந்து ஃபோன் வந்தது.

"ஹலோ பாஸ்! என்ன விசேஷம்?" பிரகாஷ் உற்சாகமாக கேட்டான்.

"மாலை ஆறுமணிக்கு உங்க வீட்டுக்கு வருகிறேன். இரண்டு பேரும் சேர்ந்து பொன்னம்பலம் வீட்டுக்கு போவோம். அதைச் சொல்லத்தான் ஃபோன் செய்தேன்."

"அப்படியே செய்வோம்" என்றான் பிரகாஷ். திடீரென்று ஏதோ நினைவுக்கு வந்தாற்போல் "அது சரி. என்ன கொடுத்தால் நன்றாக இருக்கும்?" என்று கேட்டான்.

குமாருக்குப் புரியவில்லை. "எதைப் பற்றி கேட்கிறாய்?"

"பரிசு என்ன கொடுக்கலாம் என்றுதான்."

குமார் சிரித்து விட்டான். "அது போன்ற ஃபார்மாலிடீஸ் எதுவும் தேவையில்லை. வெறுமே போனால் போதும்."

பிரகாஷ் நிம்மதியாக மூச்சுவிட்டுக் கொண்டான். ஏனென்றால் ஏதோ காரணத்தினால் அன்று சம்பளம் தரப்போவதில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

ஃபோனை வைத்துவிட்டு சேட் சமன்லால் சம்பந்தப்பட்ட வேலையை செய்து முடித்தான். மாலை ஐந்து மணி



யானதும் ஃபைல்களை மூடிவிட்டு வீட்டுக்குக் கிளம்பினான்.

மாமா திண்ணையில் அமர்ந்திருந்தார். பார்வையாலேயே குசலம் விசாரித்து விட்டு உள்ளே சென்றான். கை கால்களை அலம்பிக்கொண்டு ஹாலுக்கு வந்த போது சூடான டீ அவனுக்காக காத்திருந்தது. அதைப் பார்க்கும் போது சந்தோஷமாகவும், வியப்பாகவும் இருந்தது. அவனுக்கு நினைவு தெரிந்தது முதல் அவனிடம் அக்கறையுடன் செயல்படுவது இதுதான் முதல் தடவை. வழக்கமாக பிளாஸ்கில் டீ வைக்கப்பட்டிருக்கும்.

டீயை குடித்துவிட்டு உடைகளை மாற்றிக் கொண்டு வாட்சைப் பார்த்துக் கொண்டான். ஐந்தரை மணிதான் ஆகியிருந்தது. இன்னும் அரைமணி நேரம் எப்படி கழிப்பது என்று தெரியவில்லை. வாசலுக்கு வந்தான்.

வாசலில் சீதா காமாட்சியின் தாயிடம் பேசிக் கொண்டிருந்தாள். அவனைப் பார்த்ததும் அருகில் வந்து "சம்பளம் வந்து விட்டதா அத்தான்?" என்று கேட்டாள்.

"இல்லை. நாளைக்கு வரும்."

சீதா அந்த மாமியிடம் ஏதோ சொல்லிவிட்டு அனுப்பி விட்டாள்.

"என்ன விஷயம்? எதற்காக வந்தாளாம்?" காஷுவலாகக் கேட்டான்.

"நாம் அந்த மாமிக்கு ஐம்பது ரூபாய் கொடுக்கணும். எப்போ தருவோம் என்று கேட்பதற்காக வந்திருந்தாள்."

"ஐம்பது ரூபாயா?" வியப்புடன் கேட்டான்.

"ஆமாம். இருபதாம் தேதி கடன் வாங்கினேன், மளிகைச் சாமான் வாங்குவதற்காக."

"இத்தனை நாளும் கடன் வாங்காமல்தானே இருந்தோம்." அவன் குரலில் கோபம் வெளிப்பட்டது.

சீதா ஒரு நிமிடம் மௌனமாக இருந்துவிட்டு "நான் என்ன செய்யட்டும்? எவ்வளவு சிக்கனமாக இருந்தாலும் போறவில்லை" என்றாள்.

இனி அந்த விஷயத்தை நீடிக்க விரும்பாமல் "பரவா யில்லை. பார்த்துக் கொள்ளலாம்" என்றான்.

சீதா உள்ளே போய்விட்டு திரும்பி வந்தாள். அவன் கையில் ஒரு நோட்டுப் புத்தகத்தை நீட்டினாள்.

"இதென்னது?"

"நீங்களே பாருங்க. வரவு செலவு கணக்கு எழுதி வைத்திருக்கிறேன்" என்றாள்.

"என் உத்தேசம் அது இல்லை சீதா" நொந்து கொள்பவன் போல் சொன்னான். தன்னால் சீதாவுக்கு வருத்தம் ஏற்படுவதை அவன் விரும்பவில்லை. "சாரி சீதா."

"அதற்காக இல்லை. இதில் குறைக்கக் கூடிய செலவு கள் ஏதாவது இருந்தால் நீங்களே சொல்லுங்கள்." முழு வதும் சொல்லிவிட்டு உள்ளே போய்விட்டாள்.

பிரகாஷ் பட்டியலை பரிசீலிப்பது போல் பார்த்தான். பால், மளிகை, வீட்டு வாடகை, சோப்பு, பவுடர், வேலைக் காரிக்கு சம்பளம் என்று பட்டியல் நீண்டு கொண்டே இருந்தது. எதையும் குறைக்க முடியும் என்று தோன்ற வில்லை. தன்னுடைய சம்பளம் முழுவதும் இப்படி வீட்டுச் செலவுகளுக்கே போய்விட்டால் எதிர்காலத்தில் எப்படி வாழமுடியும்? தனக்கே இப்படி என்றால் திருமணமாகி நாலைந்து குழந்தைகள் இருப்பவர்களின்



நிலைமை என்ன? எப்படி இவர்கள் வாழ்ந்து கொண்டு இருக்கிறார்கள்? ரொம்ப சின்ன கேள்வி இது. பதில்தான் கிடைக்கவில்லை.

இது போன்ற சூழ்நிலையில் தன்னால் எப்படி கொள்கையை கடைப்பிடிக்க முடியும்? எத்தனை நாட்களுக்கு தன்னுடைய கட்டுப்பாடு நீடிக்கும்?

பிரகாஷுக்கு தன் மீதே இரக்கம் ஏற்பட்டது. சத்தம் கேட்டு நிமிர்ந்து பார்த்தான். மாமா உள்ளே வந்து கொண்டிருந்தார். பிரகாஷ் புதிய உடைகளை அணிந்திருப்பதை கவனித்து "வெளியே எங்கேயாவது போகிறாயா என்ன?" என்று விசாரித்தார்.

"ஆமாம். சாப்பாட்டுக்கு இருக்க மாட்டேன் சீதாவிடம் சொல்லிவிட்டேன்."

"அப்படியா. சரி" என்று உள்ளே போய்விட்டார்.

பிரகாஷ் தனியாக நின்றுகொண்டிருந்தான். ஆறுமணி அடிக்க ஐந்து நிமிடங்கள் இருந்தன. குமார் உள்ளே வருவானோ என்னவோ. அறையைக் கொஞ்சம் எடுத்து வைப்போம் என்று எண்ணியபடி உள்ளே போனான். கொடியில் தாறுமாறாக கிடந்த உடைகளை ஒரு ஓரமாக நகர்த்தினான். படுக்கையை சரி செய்து கொண்டிருந்த போது தலையணைக்கு அடியில் புத்தகம் ஒன்று தென் பட்டது. எடுத்துப் பார்த்தான். வாடகை நூலகத்திலிருந்து எடுத்து வரப்பட்ட மூன்றாம் தர துப்பறியும் நாவல். பக்கம் பக்கமாக சிருங்கார வர்ணனைகள். மதிய நேரத்தில் பொழுது போக்காக படிப்பதற்காக சீதா எடுத்து வந்த புத்தகம்.

பிரகாஷுக்கு அவள் மீது கோபம் வரவில்லை. தாய் இல்லாத, தாயின் சரியான பராமரிப்பு கிடைக்காத பெண்

குழந்தை எப்படி திசைமாறிப் போவார்கள் என்பதற்கு இது ஒரு எடுத்துக் காட்டு. யாரோ வந்து நம்மை சீர்திருத்து வார்கள் என்று காத்திருப்பது முட்டாள்தனம். ஒவ்வொரு வரும் நேர்மையுடன் வாழ்ந்தால் அதுவே போதும். அதை கடைபிடிக்காமல் மக்கள் புண்ணியம், தியாகம், பண்பு என்று இல்லாத குணங்களைப் பற்றியெல்லாம் பேசி தங்களையே உயர்வாக எண்ணி பெருமைப்பட்டுக் கொள் கிறார்கள்.

வெளியே கார் சத்தம் கேட்டது. ஜன்னல் வழியாகப் பார்த்தான். குமார் இல்லை. வேறு யாரோ. புத்தகத்தை மறுபடியும் பழைய இடத்திலேயே வைத்துவிட்டான். ஆறரை ஆகி விட்டது. குமார் வரும் ஜாடை தெரிய வில்லை.

பார்ட்டிக்கு எப்படிப் போவது? போய்த்தான் ஆகணுமா? அடி மனதில் ஏதோ தவிப்பு. சுஜாதாவை ஒருமுறை பார்க்கணும். தான் அவளிடம் எதுவும் பேசப் போவதில்லை. தன்னுடைய முறுவலுக்காக அவள் ஏங்கிக் கொண்டு இருப்பாள். தன்னால் அவளிடம் எப்படி சிரித்துப் பேசமுடியும்? தன்னுடைய கொள்கை அதற்கு இடம் தராது.

"இன்னும் கிளம்பவில்லையா?" மாமா கேட்டார்.

"நண்பன் ஒருவன் வருவதாகச் சொல்லியிருந்தான்."

மாமாவின் கண்களில் ஏதோ சந்தேகம்! பிரகாஷ் தவறான பாதையில் போகிறானோ.

பிரகாஷுக்கு இருப்பு கொள்ளவில்லை. "கிளம்பு கிறேன். என்னைத் தேடிக் கொண்டு யாராவது வந்தால் கோவிலில் இருப்பேன்னு சொல்லுங்க" என்றான்.



போகும் வழியில் குமாருக்காக பார்த்துக் கொண்டே சற்றுத் தள்ளியிருந்த கோவிலை நோக்கி நடந்தான். கோவி லில் கூட்டம் அதிகமாக இருந்தது. அவனும் போய் வரிசை யில் நின்று கொண்டான். அர்ச்சகர் கற்பூர ஹாரத்தி காட்டிக் கொண்டிருந்தார்.

நினைத்துப் பார்க்கும் போது பிரகாஷுக்கு சிரிப்பு தான்வந்தது. முந்தா நாள் இதே நேரத்தில் சுஜாதாவுடன் காரில் இருந்தான். நேற்று குமாருடன் பாருக்கு போனான். இன்று கோவிலில். நாளைக்கு?

(நாளைக்கு எங்கே இருப்பானோ தெரியாது. ஏன் என்றால் இன்று இரவுடன் இந்தக் கதை முடியப் போகிறது.)

வரிசையில் நிற்கும் வரையில் முன்னால் இருப்பவன் நகர வேண்டுமே என்ற தவிப்பு. தன்னுடைய முறை வந்ததும் சீக்கிரமாக நகரச் சொல்லுவார்களோ என்ற வேதனை. புண்ணியம் கிடைக்கும் என்ற சுயநலத்தைத் தவிர கோவிலுக்கு வருவதில் என்ன பிரயோஜனம் இருக் கிறது? கடவுளை வழிபடுவதால் மனதிற்கு அமைதி கிடைக்கும் என்றால் நல்லதுதான். கடவுள் வழிபாடு என்பதே நம்பிக்கைதானே. பிரசாதம் வாங்கிக் கொண்டு வெளியே வந்தான்.

எதிரே குளம் சலனமற்று இருந்தது. அரளிச்செடியின் கீழே இருந்த திண்ணையின் மீது அமர்ந்து கொண்டான். இயற்கையும் ஓய்வு எடுத்துக் கொள்வது போல் தோன்றியது. மலர்களின் நறுமணம் குளத்தின் மீது வீசும் காற்றுடன் சேர்ந்து இனிமையான சூழ்நிலை உருவாக்கி யிருந்தது. இயற்கையுடன் தான் ஒன்றிவிட்டது போன்ற உணர்வு.

வெளியே ஹாரன் சத்தம் கேட்டது. யோசனைகளி லிருந்து மீண்டவனாய் வெளியே வந்தான். குமார் அவனைப் பார்த்ததும் கையை அசைத்தான். பிரகாஷ் ஏறி உட்கார்ந்து கொண்டதும் கார் நகர்ந்தது.

"வீட்டுக்குப் போனால் இங்கே இருப்பதாகச் சொன்னார்கள்" என்றான்.

"ஆமாம். சொன்ன நேரத்திற்கு நீ வரவில்லை. எனக்கும் வீட்டில் இருப்பு கொள்ளவில்லை." பிரகாஷ் பின்னால் சாய்ந்து கொண்டே சொன்னான்.

"கொஞ்சம் தாமதமாகி விட்டது. திருமணப் பத்திரிகை அச்சடிக்க வேண்டியிருந்தது."

"திருமணப் பத்திகையா?"

பிரகாஷ் குரலில் வெளிப்பட்ட தொனிக்கு குமார் சிரித்துவிட்டான். "நீ நினைக்கிறாப்போல் எதுவும் இல்லை. எங்க கிளைண்டின் மகள் ஒருத்திக்கு திடீரென்று இரண்டு வருடங்களுக்கு முன்னால் திருமணம் நடந்ததாக ஆதாரம் தேவைப்பட்டது."

"எனக்குப் புரியவேயில்லை."

"வரிகளை தவிர்ப்பதற்காக நாங்க பலவழிகளில் பாடுபடவேண்டியிருக்கும். அதெல்லாம் உனக்கு எதுக்கு? அது சரி. அடிக்கடி கோவிலுக்குப் போவாயா?"

"ஊம். நீ கோவிலுக்கு போவதுண்டா?" பிரகாஷ் கேட்டான்.

ஒரு நிமிடம் மௌனத்திற்கு பிறகு குமார் சொன்னான். "கோவிலுக்குப் போய் வழிபடுவது என்னால் முடியாது. அந்த சத்தம், கூட்டம் எனக்கு



தொந்தரவாக இருக்கும். தனிமையில் கிடைக்கும் நிம்மதி கும்பலுக்கு நடுவில் கிடைக்காது."

சற்று முன் அரளி மரத்தின் அடியில் தனக்கு ஏற்பட்ட அனுபவம் பிரகாஷிற்கு நினைவு வந்தது. சில அனுபவங்களை உணரத்தான் முடியும். பகிர்ந்துகொள்ள முடியாது.

"என்ன யோசிக்கிறாய்?" குமார் கேட்டான்.

"மனித வாழ்க்கையைப் பற்றி. என்னைப் பற்றி நினைத்தால் சில சமயம் எனக்கே வெறுப்பாக இருக்கிறது."

குமார் பதில் சொல்லவில்லை.

"என்னைப் பார்த்தால் உனக்கு சிரிப்பு வருகிறது இல்லையா."

"இல்லை. இல்லை. உன்னுடைய பிரச்னை எனக்குப் புரிகிறது. ஸ்ட்ரகுல் ஃபார் எக்ஸிஸ்டென்ஸ்?"

"என் சம்பளம் எனக்கு போதும்."

"சாப்பாடு ஒன்று மட்டுமே வாழ்க்கை இல்லையே. ரேஷன் கடைகளில் நடக்கும் ஊழல்கள், ப்ளேடோனிக் லவ், ஆன்மீகவாதம்... எல்லாமே வாழ்க்கைப் போராட்டம்தானே."

"என் வாழ்க்கையை நீ ஏன் கதையாக எழுதக் கூடாது?" பிரகாஷ் கேட்டான்.

"ஜோக் செய்கிறாயா?"

"இல்லை சீரியஸாகத்தான் கேட்கிறேன்."

"எழுதுவதற்கு என்ன இருக்கிறது உன் வாழ்க்கையில்? கதை எழுதணும் என்றால் மெலோ டிராமா இருக்கணும். திருப்பங்கள் இருக்கணும்."

"நீ ஒரு எழுத்தாளன் இல்லையா. என்னைப் போன்ற சராசரி மனிதனைப் பற்றி ஏன் எழுத முடியாது?"

"மனிதனின் உள் மனதில் கணநேரம் நடக்கும் போராட்டத்தைப் பற்றி விவரிப்பதற்கு எத்தனை பக்கங்கள் எழுதினாலும் போறாது."

"பின்னே எழுதித்தான் பாரேன்."

"முயற்சி செய்கிறேன்." குமார் சொன்னான்.

பொன்னம்பலம் வீட்டின் முன்னால் கார் வந்து நின்றது. பார்ட்டி வெளியே தோட்டத்தில் ஏற்பாடு செய்யப் பட்டிருந்தது. மேஜைகள் தள்ளித் தள்ளி போடப்பட்டு இருந்ததால் ரொம்ப கூட்டமாக தெரியவில்லை. மரங்களில் மின் விளக்குகள் பொருத்தப்பட்டிருந்தன. ஸ்பீக்கரில் பாட்டு மெலிதாக ஒலித்துக் கொண்டிருந்தது.

"நாம் லேட் ஆகிவிட்டோம் போலிருக்கு." கரை லாக் செய்து கொண்டே சொன்னான் குமார்.

பிரகாஷ் பதில் சொல்லவில்லை. அவனுக்கு ஏனோ கொஞ்சம் பதட்டமாக இருந்தது. இது போன்ற பார்ட்டிகளுக்கு வருவது முதல் தடவை என்பதாலோ இல்லை மறுபடியும் சுஜாதாவை பார்க்கப் போகிறோம் என்ற எண்ணமோ.

இருவரும் உள்ளே நுழைந்தார்கள். எல்லோரும் பேச்சில் ஆழ்ந்திருந்ததால் இவர்களின் வருகையை யாரும் கவனிக்கவில்லை.

"அப்படி ஒரு ஓரமாக உட்கார்ந்துகொள்வோம்" குமார் சொன்னான்.



இருவரும் உட்கார்ந்துகொள்ளப் போன போது "ஹலோ ஆடிட்டர்" என்று அழைத்தபடி பொன்னம்பலம் அங்கே வந்தார்.

"குட் ஈவினிங்." குமார் விஷ் செய்தான்.

"குட் ஈவினிங். ஏன் இங்கேயே உட்கார்ந்து விட்டீங்க?" என்றார் பிரகாஷை பார்த்துக்கொண்டே.

"இங்கேயே நன்றாக இருக்கு." குமார் சொன்னான்.

பொன்னம்பலம் பக்கத்து நாற்காலியில் அமர்ந்து கொண்டே "உங்க ஆபீசரும் வந்திருக்கிறார்" என்றார் பிரகாஷிடம்.

பிரகாஷுக்கு ஏனோ குற்ற உணர்வு ஏற்பட்டது. வேலைக்காரன் வந்து மூன்று டம்ளர்களை வைத்து விட்டுப் போனான்.

"நான் குளிர்பானம் ஏதாவது எடுத்துக் கொள் கிறேன்" என்றான் பிரகாஷ். அவன் குரல் கிணற்றிலிருந்து வருவதுபோல் ஹீனமாக ஒலித்தது. அவனால் அந்தச் சூழ்நிலையில் தன்னை பொருத்திக் கொள்ள முடிய வில்லை.

பொன்னம்பலம் மேலும் வற்புறுத்தவில்லை. "உங்கள் விருப்பம். ஆனால் சாப்பாடு விஷயத்தில் நீங்க குறை வைத்தால் நான் சும்மா இருக்கமாட்டேன்" உரிமையுடன் சொல்லிவிட்டு எழுந்து கொண்டார். மற்ற விருந்தாளி களை உபசரிக்க அடுத்த மேஜைக்குப் போனார்.

ஒரு நிமிடம் கழித்து வேலைக்காரன் கோகோ கோலா பாட்டிலையும் சோடாவும் வைத்துவிட்டு போனான்.

குமார் டம்ளரை உயர்த்தி "சியர்ஸ்" என்றான் பிரகாஷிடம். டம்ளரை உயர்த்தி ஒரு மடக்கு விழுங்கினான். எங்கும் சந்தடியாக இருந்தது. யாரோ உரத்த குரலில் சிரித்துக் கொண்டிருந்தார்கள்.

"அவர்களில் யாரையுமே உனக்குத் தெரியாதா?" பிரகாஷ் கேட்டான்.

"ஏறத்தாழ எல்லோரையுமே தெரியும்."

"பின்னே யாரிடமும் பேசவே இல்லையே?"

"பத்து பேருடன் கலந்து கொள்வது எனக்குப் பிடிக்காது."

திடீரென்று சந்தடி குறைந்ததை உணர்ந்து பிரகாஷ் திரும்பிப் பார்த்தான்.

சுஜாதா வந்து கொண்டிருந்தாள். சிவப்பு கரையிட்ட ஷிபான் புடவை. வானத்திலிருந்து இறங்கி வரும் தேவதை போல் இருந்தாள். இலைகள் வழியாக வந்து விழும் வெளிச்சத்தில் அவள் முகம் அன்று மலர்ந்த மலர் போல் தூய்மையாக இருந்தது. முறுவலுடன் எல்லோரையும் குசலம் விசாரித்துக் கொண்டே வந்தவள் ஒரு மேஜை அருகில் நின்று கணவருக்கு பக்கத்தில் அமர்ந்து கொண்டாள்.

பிரகாஷ் மறுபடியும் அந்தப் பக்கம் பார்த்தான். செதுக்கிய தந்தச் சிலையைப் போல் சுஜாதா எவ்வளவு அழகாக இருக்கிறாள்! சிரித்த முகத்துடன் கணவரிடம் ஏதோ சொல்லிக் கொண்டிருந்தாள். இந்தப் பக்கம் வந்தால் நன்றாக இருக்கும்.

பொன்னம்பலம் விருந்தாளிகளை உபசரிக்க எழுந்து போனார்.



"விருந்தாளிகளை பார்த்துப் பார்த்து உபசரிக்கிறார் போலிருக்கே." குமார் சொன்னான். பிரகாஷ் மௌனமாக இருந்தான். சுஜாதா எழுந்து அவர்களை நோக்கி வந்து கொண்டிருந்தாள். பிரகாஷ் மூச்சை இழுத்துப் பிடித்தான்.

"வணக்கம். சௌக்கியம்தானே." குமாரிடம் விசாரித்தாள்.

"வணக்கம். இவன் நம் கிளாஸ்மேட் பிரகாஷ். நினைவு இருக்கிறதா?"

சுஜாதா பிரகாஷைப் பார்த்து முறுவலித்தாள். பிரகாஷ் பதிலுக்கு புன்னகைக்கவில்லை.

"வந்து எவ்வளவு நேரமாச்சு?" குமாரிடம் கேட்டாள்.

"இப்பொழுதுதான். ஐந்து நிமிடங்கள் இருக்கும்."

"ஏன் இவ்வளவு லேட்?"

பிரகாஷ் மனதில் இனம் தெரியாத அதிருப்தி பரவியது. தான் இருப்பதையே கண்டுகொள்ளவில்லையே ஏன்?

"பழைய நண்பர்கள் நன்றாக சேர்ந்திருக்கிங்க போலிருக்கே." பொன்னம்பலம் அருகில் வந்து கொண்டே சொன்னார். கணவருக்கு இடம் கொடுப்பதற்காக சுஜாதா எழுந்து அடுத்த நாற்காலியில் உட்கார்ந்து கொண்டாள். அப்படிச் செய்யும்போது அவளுடைய புடவைத் தலைப்பு பிரகாஷ் மீது பட்டது. சட்டென்று பின்னால் நகர்ந்து கொண்டாள்.

அவர்கள் மூவரும் பேச்சில் ஆழ்ந்து போனார்கள். பிரகாஷுக்கு உடனே அங்கிருந்து போய் விடவேண்டும் போல் இருந்தது.

'சுஜாதா! ஒரு முறை யாருக்கும் தெரியாமல் எனக்கு மட்டுமே புரியும் விதமாக முறுவல் செய். இந்த உலகில் யாருக்குமே தெரியாத ரகசியம் ஒன்று நமக்கிடையே இருக்கு என்பதற்கு அடையாளமாக ஒரே ஒரு புன்னகை.

"இதோ வருகிறேன்." பொன்னம்பலம் எழுந்து போனார். சுஜாதாவும் அவருடனே சென்றாள். ஒரு முறை கூட திரும்பிப் பார்க்கவில்லை.

"என்ன யோசனை? உன் மனம் இங்கே இல்லை போலிருக்கே?" குமார் சொன்னான்.

"அப்படி ஒன்றும் இல்லை." கலவரத்தை மறைத்து கொண்டே பிரகாஷ் சொன்னான்.

ஸ்பீக்கர் வழியாக வாத்திய இசை ஒலித்துக் கொண்டிருந்தது. வேலைக்காரர்கள் பம்பரமாக சுழன்று சர்வ் செய்து கொண்டிருந்தார்கள்.

"ஒரு நிமிஷம் வந்து விடுகிறேன்." குமார் எழுந்து போனான்.

பிரகாஷ் தனித்து விடப்பட்டான். இப்பொழுது சுஜாதா இங்கே வந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்? தானும் அவளும் சிரித்துச் சிரித்து பேசிக்கொண்டிருக்கும் போது எல்லோருடைய பார்வையும் தங்கள் மீது பதிந்திருப்பது போல் கற்பனை காட்சி கண்முன்னே விரிந்தது.

சுஜாதா இந்தப் பக்கம் வருவது தென்பட்டது. ஒரு வினாடி இருவரின் பார்வையும் சந்தித்துக் கொண்டன. இதழ்களை விரித்து சிரிக்கப் போனாள். ஆனால் அதற்குள் பார்வையைத் திருப்பிக் கொண்டு எதிரே வந்தவர் களுடன் கலகலவென்று பேசத் தொடங்கினாள்.



பிரகாஷுக்கு ரோஷம் பொத்துக் கொண்டு வந்தது. கண்ணிமைக்காமல் அந்தப் பக்கமே பார்த்துக் கொண்டிருந்தான். அவள் சிரித்தபடி ஏதோ சொல்லிக் கொண்டிருந்தாள். காதிலிருந்த ஜிமிக்கி அழகாக அசைந்து கொண்டிருந்தது.

நாற்காலியின் மீது நின்றுகொண்டு இந்த சுஜாதா தன்னை எப்படியெல்லாம் காதலித்தாள் என்று சத்தமாக சொல்லி விட்டால் என்ன?

என்ன சாடிஸம் இது? தன்னைப் பற்றி நேர்மையாக யோசிப்பதற்கு பிரகாஷுக்கு பயமாக இருந்தது. தனித் தன்மை இருப்பதை பெரிய விஷயமாக நினைப்போமே ஒழிய அது எப்போதும் அகம்பாவத்துடன் இணைந்தே இருக்கும். 'எனக்கு எந்த தனித்தன்மையும் இல்லை. நான் ரொம்ப சாதாரணமானவன்' என்று நினைப்பவன்தான் உண்மையான ரிஷி.

சுஜாதா எழுந்து உள்ளே போய்விட்டாள். பிரகாஷ் சுற்றிலும் பார்த்தான். எல்லோரும் தங்களுடைய பேச்சில் ஆழ்ந்திருந்தார்கள். தன்னைத் தவிர உலகம் முழுவதும் சந்தோஷமாக இயங்கிக் கொண்டிருக்கிறது. தன் மனதில் தான் போராட்டம்.

எழுந்து கொண்டான். இனி இந்த மனிதர்களுக்கு நடுவில் தன்னால் இருக்கமுடியாது. வீட்டின் பின்னால் சின்ன கேட் தென்பட்டது. அந்தப் பக்கமாக நடந்தான். கால்களுக்கு அடியில் புல்பூண்டுகள் நசுங்கிக் கொண்டிருந்தன.

வேகமாக நடந்து போய் கேட்டை அடைந்தான். அவனை கேலி செய்வது போல் சிறிய பூட்டு தொங்கிக் கொண்டு இருந்தது. ஏமாற்றத்துடன் திரும்பினான்.

பக்கத்திலேயே கார் காரேஜ் தென்பட்டது. மேலும் ஒரு அடி வைத்தான்.

ஏதோ சத்தம் கேட்டது. சுவற்றின் மீது நிழல்கள் அசைந்தன. அவன் நடக்கும் போது காலடியில் காய்ந்த இலைச் சருகுகள் ஓசையை எழுப்பின. அந்த நிசப்தத்தில் அந்த சத்தம் பன்மடங்காகக் கேட்டது. யதேச்சையாக நிமிர்ந்து பார்த்தான். சுவற்றில் நிழல்கள் விலகிக் கொண்டிருந்தன. பாதி திறந்திருந்த காரேஜ் கதவுகள் முழுவதுமாக திறந்துகொண்டன. விளக்கு வெளிச்சத்தில் நிழல்களின் உண்மையான உருவங்கள் தென்பட்டபோது சிலையாக நின்று விட்டான். வானம் இடிந்து மேலே விழுவது போல், காலுக்கடியில் நிலம் நழுவியது போல் நடுநடுங்கிவிட்டான்.

குமாரின் அணைப்பிலிருந்து விடுபட்ட சுஜாதா பிரகாஷைப் பார்த்ததும் வீலென்று கத்தினாள்.

வேகமாக அங்கிருந்து வெளியேறி பார்ட்டி நடக்கும் இடத்திற்கு வந்தான். கண்களை இருட்டிக் கொண்டு வந்தது. அப்படியே நாற்காலியில் சரிந்தான். எதிரே விஸ்கி பாட்டில் மங்கலாக தென்பட்டது. குடிக்கவில்லை என்று என்னை ஏளனம் செய்தது யாரு? நான் குடிக்கப் போகிறேன். சோடா கூட கலக்கத் தேவையில்லை.

பாட்டிலை எடுத்து கடகடவென்று குடித்து விட்டான். தொண்டைக் குழியில் எரிவது போல் இருந்தது. மனதில் ஏற்பட்ட எரிச்சலுடன் ஒப்பிட்டால் இது எந்த மூலை?

எதிராளியின் மனதில் இருக்கும் எண்ணங்களை வெளிப்படையாக பார்க்கக் கூடிய பூதக் கண்ணாடியைக் கடவுள் எனக்குத் தந்தால் இவ்வளவு கல்மிஷத்தை,



மோசமான உலகத்தை பார்க்க முடியாமல் தற்கொலை செய்து கொள்வது நிச்சயம். எதற்காக வாழவேண்டும்? யாருக்காக வாழவேண்டும்?

"பிரகாஷ்! பிரகாஷ்!" குமார் தட்டி எழுப்பிக் கொண்டிருந்தான்.

தூக்கக் கலக்கத்திலேயே எழுந்து நடந்து போய் காரில் அமர்ந்து கொண்டான். ஐந்து நிமிடங்கள் மௌனமாகக் கழிந்தன.

"என்னைப் பார்த்தால் உனக்கு வெறுப்பாக இருக்கிறது இல்லையா." குமார் கேட்டான்.

"இல்லை. இல்லை. இப்போ யார் மீதும் எந்த வெறுப்பும் இல்லை." தன் குரலில் தென்பட்ட அமைதி அவனுக்கே வியப்பை ஏற்படுத்தியது.

"உன்னால் புரிந்துகொள்ள முடியும் என்றால் ஒரு விஷயம் சொல்ல விரும்புகிறேன்."

"சொல்லு."

"நானும், சுஜாதாவும் பழகுவது வெறும் த்ரில்லுக்காக மட்டும்தான். ஒரு விஷயம் மட்டும் உண்மை. சுஜாதா உன்னை மனப்பூர்வமாக நேசிக்கிறாள்."

"உனக்கு... உனக்கு முன்னாடியே தெரியுமா?" பிரகாஷின் குரல் தடுமாறியது.

"எல்லாம் தெரியும், கல்லூரியில் இருக்கும் போதே அது மட்டுமே இல்லை. இரண்டு நாட்களுக்கு முன்பு நீங்க இருவரும் சந்தித்துக் கொண்ட விஷயம் கூட தெரியும். அவள் தான் சொன்னாள். இப்பவும் அவள் உன்னைத் தான் காதலிக்கிறாள்."

வீடு நெருங்கிவிட்டது. குமார் காரை ஓரமாக நிறுத்தினான். பிரகாஷ் கீழே இறங்கிக் கொண்டு கார் கதவைப் பிடித்துக் கொண்டே சொன்னான்.

"மை டியர் ஆனரபிள் மெம்பர் ஆஃப் தி பார் பேரியன் சொசைடி! நீங்க எல்லோரும் அரக்கர்கள். மன தளவில் அரக்கர்களாய் இருந்து கொண்டு வெளியில் தேவர் களை போல் நடமாடும் மனிதர்கள். மன சாட்சியை ஏமாற்றிக்கொண்டு நல்லவர்களைப்போல் வேஷம் போடுபவர்கள். சராசரி மனிதன் நான். என்னைப் பார்த்து யாரும் பயப்படத் தேவையில்லை. இன்று முதல் நானும் உங்களில் ஒருவனாக மாறப் போகிறேன்." கார் டோரை பலமாக சாத்திவிட்டுத் தள்ளாடிக்கொண்டே நடந்து போனான்.

ஒரு நிமிடம் திகைப்புடன் பார்த்த குமார் பெருமூச்சு விட்டபடி காரை முன்னோக்கிச் செலுத்தினான்.

படிகளில் தடுமாறி விழப்போன பிரகாஷ் எப்படியோ சமாளித்துக் கொண்டு கதவைத் தட்டினான். கதவு உள்ளே தாழிடப்படாமல் வெறுமே சாத்தியிருந்தது. குடி மயக்கத்தில் இருந்த பிரகாஷ் அதை கவனிக்க வில்லை.

கதவைத் தட்டிய சத்தம் கேட்ட சீதா எழுந்து வந்தாள். அந்த நிலையிலும் அவனுக்கு வியப்பு ஏற்பட்டது. அத்தனை நேரம் வரையில் தனக்காக ஒருத்தி காத்திருப்பது அதுதான் முதல் தடவை.

அறைக்குள் போனான். பின்னாலேயே வந்த சீதா "அத்தான்! சாப்பிடப் போவதில்லையா?" என்று கேட்டாள்.



இல்லை என்பது போல் தலையை அசைத்தான். அந்த நேரத்தில் சீதாவைப் பார்க்கும் போது ரொம்ப அழகாக தென்பட்டாள். தூய்மையான அழகு.

இந்த அழகை கல்யாணத்திற்கு முன்பே சொந்த மாக்கிக் கொண்டால்.

பிரகாஷின் விழிகள் சிவப்பாக மாறின. அவன் உள்ளே இருந்த 'ஹைட்' (*Hyde*) வெளியே வந்து விட்டான்.

"சீதா!" என்று அழைத்தான்.

போகப் போனவள் நின்று பின்னால் திரும்பினாள். "என்ன அத்தான்?"

கையை நீட்டி சட்டென்று அருகில் இழுத்துக் கொண்டான். எதிர்பாராத இந்த செயலுக்கு திகைத்துப் போனாள் சீதா.

"கெட்டுப் போவதில் எவ்வளவு சந்தோஷம் இருக் கிறதோ இன்னிக்கே புரிய வைக்கிறேன். சீதா! இனி நமக்கு எந்த வேதனைகளும் இருக்காது. எல்லாமே சந்தோஷம் தான். இன்றுதான் தொடக்கவிழா. திருமணம் ஆன பிறகு என்ன இருக்கப்போகிறது? ரொட்டீன் வாழ்க்கைதான்."

பலமான அவனுடைய அணைப்பில் அவள் நலிந்து போய்க் கொண்டிருந்தாள். அவனுடைய இரும்புப் பிடியிலிருந்து விடுபட தவித்துக் கொண்டிருந்தாள். மேலும் இறுக அணைத்துக் கொண்டான். கொஞ்சம் கொஞ்சமாக அவளுடைய எதிர்ப்பு குறைந்து விட்டது.

"விடுங்க அத்தான்." மேலும் நெருங்கி வந்தாள்.

சட்டென்று விட்டுவிட்டான். "போய்விடு."

மிரண்டவள் போல் அவன் பக்கம் பார்த்தாள். அவன் கண்கள் நெருப்புத் துண்டங்களாக இருந்தன.

"ஐ ஸே கெட் அவுட்!" உரத்த குரலில் கத்தினான்.

குழப்பத்துடன் பார்த்துக் கொண்டே அறையை விட்டு வெளியேறினாள். ஐந்து நிமிடங்களுக்குப் பிறகு படுக்கையில் குப்புறப்படுத்துக் கொண்டு தலையணையில் முகம் புதைத்து அழுதுகொண்டிருந்தான் பிரகாஷ்.

சமுதாயக் கட்டுப்பாடுகளை மீறுவதற்கு தேவையான துணிச்சல் இல்லாத சராசரி மனிதன்.

எல்லோராலேயும் கெட்டுப் போக முடியாது. அதுவும் ஒரு கலைதான்.

* * *

என் வாழ்க்கையின் மிக வேதனையான நாட்களில் இந்தக் கதையை எழுத வேண்டும் என்று விரும்பினேன். பிரகாஷ் உயிரோடு இருந்த நாட்கள் அவை. பேனா என் கையில் இருப்பதால் அவனை நல்லவனாக உருவகப் படுத்தினேன். ஆனால் என்னுள்ளே இருக்கும் பிரகாஷை என்ன செய்தேன்? நிர்த்தாட்சண்யமாக கொன்று விட்டேன்.

431035/6036840.

எப்போதாவது நள்ளிரவு வேளையில் உலகம் முழுவதும் உறக்கத்தில் இருக்கும் போது, தனிமையில் ஜன்னல் வழியாக வெளியே இருளில் பார்த்துக் கொண்டிருக்கும் நேரத்தில் திடீரென்று பிரகாஷ் உயிர்த் தெழுவான் என்னுள். உடனே அடக்கிவிடுவேன். வெளியே வரவிடமாட்டேன். தினமும் மனதில் போராட்டத்தை அனுபவிக்க என்னால் முடியாது. குறைந்த பட்சம் என்னுள் இருக்கும் 'ஹைட்' (*Hyde*) ஆவது நிம்மதியாக வாழ்ந்தால் அதுவே போதும்.

தேவநேயப் பாவாணர்
மாவட்ட மைய நூலகம்
சென்னை - 600 002